விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — .Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 09 சனிக்கிழமை (23.06.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 187

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

# தமிழருக்கு தீர்வு வழங்குவதை துரிதப்படுத்துமாறு வலியுறுத்தல்

## மன்மோகன்-மகிந்த சந்திப்பில் ஆலோசனை



(புதுடில்லி)

இலங்கையில் தமிழர்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வொன்றை வழங்கும் முயற்சியைத் துரிதப் படுத்துமாறு இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் வலியு றுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படு கிறது. (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா.சபை மீதான அச்ச நிலை இலங்கை அரசுக்கு தீரவில்லை

### அதிகாரிகள் மட்டத்தில் கவலை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் இலங்கை பற்றி ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை எதுவும் குறிப்பிடவில்லை ஆயினும், இனிப் பிரச்சினைகள் எதுவும் இல்லையென யாரும் நினைத்து விடக் கூடாது என இலங்கை அரசு கூறியுள்ளது.

அண்மையில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் இலங்கை பற்றி ஐக்கிய நாடுகளின் மனித வுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை எதுவும் குறிப்பிட்டுக் கூறவில்லையாயினும் இனிப்பிரச்சினை இல்லை என்ற திருப்தியுடன் நாடு இருக்க முடியாது எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த முறை கனடா மாத்திரமே இலங்கை பற்றி சிறிது குறிப் (20ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சுப் பதவி எதுவும் கே.பிக்கு கிடையாது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச பொறுப்பாளராக செயற்பட்ட கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதனுக்கு அமைச்சு பதவி எதனையும் வழங்கும் எண்ணம் எதுவும் இல்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற நட வடிக்கைகளின் போதே இது குறித்து விவா திக்கப்பட்டுள்ளது.

கருணா அம்மான், பிள்ளையான் போன்ற வர்கள் தமிழீழ விடுதலைப்புலி அமைப்பில் இருந்து இந்த நாட்டை சீரழிக்க செயல்பட்ட வர்கள். (20ஆம் பக்கம் பார்க்க)

## ஹிட்லரை மிஞ்சும் அளவுக்கு இலங்கையில் சர்வாதிகாரம்

### விரிவுரையாளர் சம்மேளனம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கத்தின் ஏகாதிபத்திய பயணம் தொடர்பில் தேவைக்கு அதிகமான அளவு உதாரணங்களை கூற முடியும் என பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம் மேளனத்தின் பிரதித் தலைவர் தம்பர அமில தேரர் தெரிவித்துள்ளார்.

ஹிட்லரையும் மிஞ்சும் அளவுக்கு நாட் டில் தற்போது பல ஹிட்லர்கள் செயலாற்றி வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பு தேசிய நூலகத்தில் இடம்பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர் இவ் வாறு கருத்து வெளியிட்டார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி நிர் மால ரஞ்சித் தேவசிறிக்கு காணப்படும் மரண அச்சுறுத்தல் குறித்து தெளிவுபடுத்த இந்த ஊடகவியலாளர் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட் டிருந்தது.

இந்த அச்சுறுத்தல் விரிவுரையாளர் ஒரு வருக்கோ அல்லது சாதாரண பிரஜைக்கோ விடுக்கப்பட்டுள்ள ஒன்றென பாராது சமூகம் என்ற அடிப்படையில் (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களின் உயிரைக்காக்க கருணாநிதி முன்வர வேண்டும்

### தா.பாண்டியன் தெரிவிப்பு

(சென்னை)

தமிழீழத்தை ஏற்படுத்தி தருவதற்கு முன்பு அங்குள்ள தமிழர்களின் உயிரைக்காக்க தி.மு.க.தலைவர் கருணாநிதி முன்வர வேண் டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் கேட்டுக் கொண்டுள்ளார்.

மதுரையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர், மேற்கண்டவாறு தெரி வித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

இலங்கையில் இந்தியாவுக்குச்சொந்தமான எண்ணெய்க் கிடங்குகளை அப்புறப்படுத்த வேண்டும் என (20ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலையில் ஆயுத கண்காட்சி



(முகமாலை)

முகமாலை முன்னரங்கப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் பயன்படுத் திய அதியுச்ச சக்திவாய்ந்த கண்ணி வெடி களையும், சொந்தமாக உருவாக்கியிருந்த சக்தி வாய்ந்த ஆயுதங்களையும் இராணு வத்தினர் நேற்று காட்சிப்படுத்தியுள்ளனர்.

இத்தாவில் தரையிறக்கத்தின் நினை வாக புலிகளின் கவச எதிர்ப்பு படைப் பிரிவினரால் அழிக்கப்பட்ட யுத்த தாங்கிகள் காட்சிப் படுத்தப்பட்டிருந்த இடத்திற்கு முன்னால் இராணுவத்தினர் இந்தக் காட்சிக் கூடத்தை அமைத் திருக்கின்றனர். இதில் புலிகளின் சிக்கலான சில கண்ணிவெடி அமைப்பு முறைகள், கண்ணி வெடிகள், அபாயகரமான ஷெல்கள் மற்றும் (20ஆம் பக்கம் பார்க்க) புலிகள்

## முறிகண்டிப் போராட்டத்துக்கு த.தே.மக்கள் முன்னணி ஆதரவு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசத்தின் இருப்பை இல்லாது செய்ய வேண்டும் என்கின்ற நோக்கோடு அரசாங்கத்தினால் தொடர்ச்சியாக மேற்கொள் ளப்பட்டு வரும் நிலப்பறிப்புக்கள், சிங்களக் குடியேற்றங்கள், பௌத்த மயமாக்கல், இரா ணுவ மயமாக்கல் என்பவற்றிற்கு எதிராக எதிர்வரும் 26 ஆம் திகதி அன்று கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள முறிகண்டிப் பிள்ளையார் கோவில் முன்றலில் தமிழ் தேசியக் கூட்டமைப் பின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள கவனயீர்ப்பு போராட்டத்திற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன் னணியினராகிய நாம் ஆதரவைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம் பலம் மற்றும் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் இணைந்து வெளியிட் டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது,

மேற்படி நில ஆக்கிமிப்பு நடவடிக்கைக்கு எதிராக எம்மால் கடந்த 18 ஆம் திகதி அன்று ஆரம்பித்து (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழினிக்கு புனர்வாழ்வு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி என அழைக்கப்படும் சுப்பிரமணியம் சிவகா மியை புனர்வாழ்வுக்கு உட்படுத்துமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இதற்கமைய வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யாழ். பல்கலைக்கழகத்தில் 250 மாணவருக்கு வெற்றிடம்

## உயர் கல்வி அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

யாழ் பல்கலைக்கழகத்தில், 250 இள நிலை பட்டதாரி மாணவர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஐந்து சுற்று தேர்வுகள் நடைபெற்ற போதிலும் போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்காமையே இதற்கு காரணம் என அவர் கூறினார்.

2010/2011 கல்வியாண்டிற்காக 2 ஆயிரத்து 5 மாணவர்கள் சேர்க்கப்படவிருந்த போதிலும் ஆயிரத்து 748 விண்ணப்பங்களே கிடைத்ததாக அவர் கூறினார். முந்தைய வருடத்திலும் இதே எண்ணிக்கையான மாணவர்களை சேர்ப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு திட்டமிட்டதாகவும் ஆனால் ஆயிரத்து 641 விண்ணப்பங்களே அவ் வருடம் கிடைத்ததாகவும் அமைச்சர் தெரிவித்தார். (எ-8)

## தொண்டர் ஆசிரியர்களுடன் கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கல்வி வலயத்தைச் சேர்ந்த சகல தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனம் தொடர்பான அவசர கலந்துரையாடல் கூட்டம் இன்று காலை 11.30 மணிக்கு முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தில் நடை பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் முல்லைத்தீவு வலய சகல தொண்டர் ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு முல்லைத்தீவு கல்வி வலய தொண்டர் ஆசிரிய சங்கம் கேட்டுள்ளது. (எ-267)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கட்டைப்பராய் அருள்மிகு ஸ்ரீ முத்து மாரி அம்மன் மகோற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழா நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் யூலை மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை சப்பறத் திருவிழாவும்,மறுநாள் திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும்,3-ம் திகதி செவ்வாயக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (எ-9,136)

## வவு.செட்டிக்குளத்தில் தற்கொலை அங்கி மீட்பு

(வவுனியா)

வவுனியா செட்டிக்குளம் வாவியொன்றுக்கு அருகில் புதைக்கப்பட்டிருந்த தற்கொலை அங்கியொன்றை பொலிஸார் கண்டெடுத்துள்ளனர். புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைக்கப் பெற்ற தகவலை அடுத்து குறித்த பகுதியில் சோதனையிட்ட பொலி ஸார் மேற்படி தற்கொலை அங்கியினைக் கண்டெடுத்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குச் சொந்தமான சுமார் 7 கிலோ கிராம் நிறையுடைய மேற்படி தற்கொலை அங்கி, சேதமாகாத நிலையில் காணப்பட்டதாகவும் அதனை செயலிழக்கச் செய்ததாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.(எ-8)


### பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்தில் புதிதாக திறக்கப்பட்டுள்ள நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு இடம் பெறவுள்ளது.

1. Accounts Clerk
2. Traveling Assistant

} பெண்

தகுதிவாய்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் சுயவிபர கோவையுடன் [23.06.2012] சனிக்கிழமை நேரில் வரவும்.

**Rainbow Travels**

30/2, 3rd Lane,
Power House Rd, Jaffna.

(C-308)



### பணிநிலை வெற்றிடங்கள்

ஜெயந்திநகர், கிளிநொச்சி என்னும் முகவரியில் அமைந்துள்ள மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லத்திற்கு கீழ்க்காணும் பணிநிலை வெற்றிடங்கள் உண்டு.

1. கணித ஆசிரியர்
2. விஞ்ஞான ஆசிரியர்கள்

} பட்டதாரி ஆசிரியர்கள், தொண்டர் ஆசிரியர்கள், ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

3. கணனி ஆசிரியர்கள்- பட்டதாரிகள், டிப்ளோமா சான்றிதழ் பெற்றவர்கள், வெப்சைற் டிசைன் பண்ணக்கூடியவர்கள் (Web designers) விண்ணப்பிக்கலாம்.

நிறுவனத்தின் விதிமுறைகளுக்கு அமைந்து இல்லத்தில் தங்கியிருந்து பணியாற்றக்கூடிய நல்லொழுக்கமும் உடல் ஆரோக்கியமும் உள்ள 21 முதல் 65 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 05.07.2012

தொடர்புகளுக்கு:
தி.இராசநாயகம்
தலைவர்
மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம்
ஜெயந்திநகர்
கிளிநொச்சி

தொலைபேசி இலக்கம்: 0770604950, 0214923118

(C-318)


## பிரதேச அ/தி வங்கி கிளை திறப்பு

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள பிரதேச அபிவிருத்தி வங்கியின் யாழ்ப்பாணக் கிளை நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்தக் கட்டிடத்தினை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா நாடாவெட்டி திறந்து வைக்கவுள்ளார் என வட மத்திய மாகாண பிரதேச பொது முகாமையாளர் மற்றும் செயற்குழு அறிவித்துள்ளது. (அ-9)

## செய்திக்காக வருந்துகிறோம்

வலம்புரிப் பத்திரிகையில் நேற்று 2-ம் பக்கத்தில் வெளியாகியிருந்த சட்டவிரோத கருக்கலைப்புப் பற்றிய செய்தி உண்மைக்குப் புறம்பானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப குடும்பப் பெண்ணுக்கு வயிற்றில் வளர்ந்த கட்டி காரணமாகவே மரணம் சம்பவித்ததாக யாழ்.போதனா வைத்திய சாலை சட்டவைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

இறந்த பெண்ணின் குடும்பத்திற்கு குறித்த செய்தியால் ஏற்பட்ட மனக் கஷ்டத்திற்கு வருந்துகிறோம். (ந)

## காரைநகர் யுவதி பாலியல் வல்லுறவு

# சந்தேகநபர்கள் இருவருக்கும் தொடர்ந்து விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

சிறுவர்களுக்கும், உடல் உள ரீதியாக பாதிக்கப்பட்டவர்களுக்கும் எதிராக இழைக்கப்படும் குற்றங்கள் பாரதூரமானவை எனக் கூறி காரைநகர் யுவதி பாலியல் வல்லுறவுச் சம்பவத்தின் இரு சந்தேக நபர்களையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா உத்தரவிட்டார்.

கடந்த வாரம் குறித்த வழக்கு அடையாள அணிவகுப்பிற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட போது பாதிக்கப்பட்ட யுவதி குற்றவாளியினை மிகச் சரியாக இனங்காட்டியதனைத் தொடர்ந்து குறித்த இருவரினையும் நேற்றுவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

குறித்த வழக்கு நேற்று மீண்டும் ஊர்காவற்றுறை நீதவான் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதில் சந்தேக நபர்கள் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி யோகிமகாதேவ குறித்த இருவரினையும் பிணையில் விடுவிக்குமாறு பிணை விண்ணப்பம் செய்தார்.

குறித்த இருவரினையும் பிணையில் விடுவிப்பதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்த பாதிக்கப்பட்ட பெண் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி கே.சுகாஷ், குறித்த இருவரினையும் பிணையில் விடுவித்தால் சாட்சிகள் மீது தலையிடக் கூடும் எனவும் பாதிக்கப்பட்ட பெண் குற்றவாளிகளினை இனங்காட்டியுள்ளதனால் சந்தேக நபர்கள் அப்பெண்ணின் சுதந்திரத்தில் தலையிடக் கூடும் எனவும் இரு சந்தேக நபர்களும் இந்த பிரதேசத்தவர்களாக இல்லாமல் வெளி இடத்தினைச் சேர்ந்தவர்களாக காணப்படுவதனால் நீதிமன்ற வழக்குகளிற்கு ஒழுங்காக சமுகமளிக்கமாட்டார்கள் எனவும் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்நிலையில் வழக்கினை விசாரணை செய்த ஊர்காவற்றுறை நீதவான் பிணைச் சட்டம் 14 பி எனும் பிரிவின் படி சந்தேக நபர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டால் சமூக அமைதி சீர்குலையும் என மன்று கருதுமாக இருந்தால் அவர்களினை பிணையில் செல்ல அனுமதிக்காது தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க முடியும்.

மேலும் சிறுவர்கள், உடல் ஊனமுற்றவர்கள், உளரீதியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றமானது பாரதூரமான குற்றங்களாக கருதப்படும் எனக் கூறி சந்தேக நபர்களான புத்தளம் தில்லையடியைச் சேர்ந்த சலீம் சன்றூஸ் மற்றும் கிதுறு மூகதீன் கிஜானுக் சுகமத் ஆகிய இருவரினையும் எதிர்வரும் 06 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (எ-4)

## கண்டிக்கு சொகுசு பஸ்

(காரைநகர்)

காரைநகரில் இருந்து கண்டி நோக்கிய இரவு நேர அரைச் சொகுசு பேருந்து சேவை இடம்பெறவுள்ளது.

நாளை மறுதினம் திங்கட்கிழமை காரைநகரிலிருந்து மாலை 5.00 மணிக்கு 782 இலக்க வழிப் பாதையூடாக யாழ். மத்திய பேருந்து நிலையம் வந்து, இங்கிருந்து இரவு 07.15 மணிக்கு தம்புள்ள பாதையூடாக கண்டி நோக்கி புறப்படுகின்றது.

மறுநாள் இதே பாதையூடாக கண்டியிலிருந்து மாலை 5.30 மணிக்கு யாழ் மத்திய பேருந்து நிலையம் நோக்கி புறப்பட்டு, இங்கிருந்து காலை 5.30 மணிக்கு 782 பாதையூடாக காரைநகர் நோக்கி புறப்படுகிறது.

இப்பேருந்து சேவைக்கான ஆசனப் பதிவுகளை யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் மேற்கொள்ளலாம் என வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பிரதான பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார். (எ)


### விற்பனையாளர் தேவை

எமது ஜவுளி நிறுவனத்திற்கு ஒழுக்கமும் நற்பண்பும் உள்ள ஆண், பெண் பணியாளர்கள் தேவை. நேரில் வரவும்.

தொடர்பு: சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்
41, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

(8698)



### விற்பனைக்கு

ISUZU கூலர் (பிரிசர்) மொடல் NP LJ-XXXX தொடர் இலக்க (புதிய) வாகனம் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:0771986948

(C-313)



### வீடு விற்பனைக்கு

உரும்பிராய் சந்தியில் இருந்து கோப்பாய் கைதடி வீதியில் உள்ள பஸ் தரிப்பு நிலையத்துடன் இருக்கும் 4 பரப்புடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:0775068558

(C-310)



### வீடு வாடகைக்கு தேவை

சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்குத் தேவை. யாழ்.நகரை (மாநகர சபை) அண்டிய பிரதேசத்தில் விரும்பத்தக்கது. கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

T.P.: 0771932149, 0774237402

(C-314)



செல்லா சினிமா- யாழ்ப்பாணம்



## இன்று ஒரு தகவல்

### உள்மன ஆற்றல்

ஒரு விஞ்ஞானி இருந்தார். அவர் பெயர் ''ஹோ''. ஓர் ஊசியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்பது அவரது நோக்கம்.

அதற்காக அவர் நீண்டகாலமாக ஆராய்ச்சி செய்தார். இருந்தாலும் அதைக் கண்டுபிடிப்பது அவருக்கு இயலாத காரியமாகவே இருந்து வந்தது.

அப்படி என்ன அபூர்வமான ஊசி அது? வேறொன்றுமில்லை. இன்றைக்குத் தையல் இயந்திரங்களில் உபயோகப்படுகிற அந்த ஊசிதான்.

அந்த ஊசியின் கூர்மையான பாகத்தில் நூலை எப்படி சேர்ப்பது?

மற்ற ஒரு பாகம் இயந்திரத்தின் உள்ளே போய் விடுகிறது... எனவே, அந்தப் பகுதியில் சாதாரண மற்ற ஊசியிலே செய்வது போல நூலை நுழைக்க முடியாது. அப்படியே நுழைத்தாலும் தைப்பது எப்படி சாத்தியமாகும்?.

இதுதான் அவருக்கு இருந்த பெரிய பிரச்சினை?

மிக நீண்ட நாட்களாக யோசனை செய்தார். தையல் மெஷின் ஊசியின் வடிவமைப்பு அவருக்குப் புலப்படவில்லை. இரவு-பகலாக அதே ஞாபகமாக இருந்தார்.

இந்தச் சமயத்தில் ஒருநாள் அவர் தூங்கிக் கொண்டிருந்தார்.

அப்போது ஒரு கனவு கண்டார். அது என்ன கனவு தெரியுமா?

அந்தக் கனவில்- ஒரு மலைச் சாதியினர் அவரைப் பிடித்துக் கொண்டு போய் விடுகிறார்கள். பின்னர் அவரை ஓர் இடத்தில் கட்டிப் போட்டு விடுகிறார்கள்.

அந்த மலைவாழ் மக்களின் தலைவன் ஒருவன் அங்கே வருகிறான்.

அவரைப் பார்த்து ஓர் உத்தரவு போடுகிறான். என்ன உத்தரவு தெரியுமா?

"பொழுது சாய்வதற்குள் நீ தையல் மெஷின் ஊசியைக் கண்டுபிடிக்க வேண்டும்... அப்படிக் கண்டு பிடிக்கவில்லையென்றால், உன் தலையை வெட்டி விடுவோம்"

இதுதான் அவன் போட்ட உத்தரவு.

இவருக்கு என்ன செய்வதென்று ஒன்றுமே புரியவில்லை.

திரு திருவென்று விழிக்கிறார்.

இந்த நேரத்தில் மலைச் சாதியினர் அவரைச் சுற்றிச்சுற்றி வந்து- பயங்கரமாக விழித்துக்கொண்டு நடனம் ஆடுகிறார்கள்.

அவர்களை மிகவும் அச்சத்துடன் இவர் கவனிக்கிறார். நேரம் நகர நகர இறுதி நேரம் நெருங்குவதை உணர்கிறார். மிகவும் நெருக்கடியான நிலைமை.

தன்னைச் சுற்றி ஆடுகிறவர்களைக் கவனிக்கிறார். அவர்கள் கைகளில் ஈட்டி மாதிரி ஓர் ஆயுதம் வைத்திருக்கிறார்கள்.

அந்த ஆயுதத்தை இவர் கண்ணுக்கு நேராக குத்துவது போல கொண்டு வருகிறார்கள். அந்த ஆயுதத்தின் கூரான முனையை இவர் கூர்ந்து கவனிக்கிறார்.

அதில் கூரான முனையில் ஒரு சிறிய துவாரம் தெரிகிறது. உடனே அவருக்குள் பளிச்சென்று ஓர் "ஐடியா" உதயமாகிறது.

"இதைத்தானே நான் இவ்வளவு காலமும் தேடிக் கொண்டிருந்தேன். கூரான முனையில் ஒரு சிறிய துவாரத்தைப் போட்டு விட்டால், அது மூலமாக நூலைச் செலுத்தி மறுமுனையை இயந்திரத்தில் வைத்து விடலாமே! தையல் இயந்திரத்துக்கான ஊசி தயார்!" என்று நினைத்தார்.

திடீரென தூக்கம் கலைந்தது.

உடனே தனது தலைமாட்டில் இருந்த குறிப்பேட்டில் இதைக் குறித்த விபரத்தை எழுதி வைத்தார்.

அதன்பின் அந்த ஊசியையும் அவர் செய்து முடித்தார்.

விழித்துக் கொண்டிருக்கிறபோது நமக்கு ஏற்படுகிற சில பிரச்சினைகளுக்கு கனவில் விடை காண்பதுண்டு.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கிளாலியில் உள்ள 215 குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகள் அமைக்கப்படவில்லை

## மக்கள் அவதி

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கிளாலி கிராமத்தில் மீள்குடியேறியுள்ள மக்கள் பல தேவைகளுடன் சொல்லொணா துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட இப்பிரதேசத்தில் 215 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இக்குடும்பங்கள் தற்காலிக வீடுகள் கூட இல்லாது அவதியுறுகின்றதை அவதானிக்க முடிகின்றது.

இவர்களுக்கு 12 தகரங்களும் தடிகளுமே வழங்கப்பட்டுள்ளன. வேறு எந்தவித வாழ்வாதார உதவிகளும் வழங்கப்படவில்லை.

கொளுத்தும் வெயிலிலும் பலமாக வீசும் காற்றிலும் தற்காலிக வீடு கூட இல்லாத இவர்களின் நிலை பரிதாபத்திற்குரியது.

ஏனைய வாழ்வாதார உதவிகள் எவராலும் வழங்கப்படாதுள்ளமையால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இம்மக்களுக்கு தற்போதைய நிலைமையில் தற்காலிக வீடுகளாவது அமைத்து கொடுத்து உதவ யாராவது முன்வர வேண்டும்.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற்கொண்டு உடனடி நடவடிக்கை எடுத்து தமது அவலத்தை போக்க முன்வர வேண்டுமென அப்பகுதி மக்கள் கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-254)

## ஒப்பந்த அடிப்படையிலான பகுதி நேர ஆங்கில ஆசிரியர் நியமனம்

(சிவநகர்)

கிளிநொச்சி கல்வி வலயத்தில் ஒப்பந்த அடிப்படையிலான பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களாக எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதி வரை கடமையாற்றுவதற்கு பதினொரு பேருக்கான அனுமதியை வடமாகாண கல்வி-பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு செயலாளர் வழங்கியுள்ளார்.

கல்விப் பணிப்பாளரின் சிபார்சுடன் மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக அனுப்பி வைக்கப்பட்ட விண்ணப்பத்தின் படி தெரிவு செய்யப்பட்ட பகுதி நேர ஆங்கில ஆசிரியர் விபரங்களை கிளி/வலயக்கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் அறிவித்துள்ளார்.

இதற்கு தெரிவானோர் விபரம் வருமாறு,

கோபினி- இராசநாயகம், வோஜினி- மகேந்திரன், குகன்- சந்திராம்பாள், பெருமாள்- நாகேந்திரா, இராசேந்திரம்-வைகுந்தவாசன், அமிழ்தினி-சண்முகம், கார்த்திகா- காளிதாசன், ஜெயராசா- துளசி, முத்துக்கருப்பன்- சுதாகரன், கணேசலிங்கம்- ஜெகதீஸ்வரன், பாக்கியநாதன்-பாலமுரளி. (அ-254)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 90 | 120 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 90-110 | 100 |
| பச்சைமிளகாய் | 220 | 200 | 250 |
| தக்காளி | -- | 140 | 140 |
| மரவள்ளிக் கிழங்கு | 40 | 40 | 50 |
| கோவா | -- | 70 | 70 |
| கரட் | 100 | 140 | 170 |
| பூசணி | 60 | 80 | 60 |
| புடோல் | 60 | 60 | 60 |
| வாழைக்காய் | 40-50 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 100-140 | 120-170 |
| பெரிய வெங்காயம் | 90 | 110 | 100 |
| பாகற்காய் | 120 | 180 | 100 |
| வெண்டிக்காய் | 70 | 90 | 110 |
| க்ருணைக் கிழங்கு | -- | -- | -- |
| பயற்றங்காய் | 160 | 180 | 80 |
| லீக்ஸ் | -- | 140 | 160 |
| பீற்றூட் | 70 | 70 | 90 |
| கறிமிளகாய் | -- | 160 | 160 |
| முருங்கைக்காய் | 150 | 100 | 140 |
| போஞ்சி | -- | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | -- | 80 | -- |
| கீரை - 1 பிடி | 8-10 | 20 | 15 |
| தேசிக்காய் | 150 | 110 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 15-25 | 25 | 18-20 |

## இராசி பலன்

23.06.2012
(ஆனி 09, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு
சதுர்த்தி முன்னிரவு 10.57 மணிவரை
ஆயிலியம் பின்னிரவு 5.06 மணிவரை
இராகுகாலம் 8.55-10.25 மணிவரை
சுபநேரம் 2.55-4.25 மணிவரை
சதுர்த்தி விரதம்

**மேடம்** ஆனைமுகனை வழிபட்டு ஆனந்தம் காண வேண்டிய நாள், பெற்றோர் நலனில் அக்கறை கொள்வீர்கள், உயரதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்** தைரியத்தோடு செயற்பட்டு சாதனைகள் படைக்கும் நாள், உடன் பிறப்புக்கள் மூலம் மகிழ்வான தகவலொன்று வந்து சேரலாம், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**மிதுனம்** கணபதி வழிபாடு காரிய வெற்றியைத் தரும், குடும்பத்தில் சந்தோசம் அதிகரிக்கும், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்பட வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு, வருமானத்தை அதிகரிக்க புதிய வியூகம் அமைப்பீர்கள்.

**கடகம்** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், பயணங்களால் கையிருப்பு குறையலாம், கற்பனைகள் மிகுதியாகும், வைராக்கியத்தோடு செயற்பட்டு வாக்குறுதியைக் காப்பாற்றுவீர்கள்.

**சிங்கம்** உறவினர் நலன் கருதி பயணங்கள் ஏற்படலாம், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், சாப்பிடக்கூட நேரமில்லாமல் பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டிவரலாம், சயன சுகக்குறைவான நாள்.

**கன்னி** விரதங்களில் நம்பிக்கை கூடும், வருமானம் உயர்வடையும், உறவினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை ஏற்படலாம், பயணங்களால் பலனுண்டு, பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயர்வடையும்.

**துலாம்** அந்நியர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தொழில் வளர்ச்சிக்கு அதிக பிரயாசை எடுப்பீர்கள், கொடுக்கல்- வாங்கல்களில் கணிசமான தொகை கைக்கு கிடைக்கும்.

**விருச்சிகம்** கணபதியை வழிபட்டு காரியம் தொடர்வீர்கள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்களில் எதிர்பார்த்த நற்பலனுண்டு, மதிப்பும் மரியாதையும் உயர்வடையும்.

**தனுசு** மறதியால் சில தொல்லைகளுக்கு உட்பட நேரிடலாம், பயணங்களின் போது அவதானம் தேவை, போசன சுகமுண்டு, அலைச்சல்கள் அதிகரிக்கும், நண்பர்களிடம் சில முரண்பாடுகள் ஏற்படலாம்.

**மகரம்** நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி நகர்வீர்கள், எடுத்த காரியங்கள் கைகூடும், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், தொழில் நலன் கருதி முக்கிய முடிவெடுப்பீர்கள்.

**கும்பம்** நம்பிக்கைகள் நடைபெற தும்பிக்கை யானை வழிபட வேண்டிய நாள், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும், உறவு, பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள்.

**மீனம்** பிள்ளைகளின் கல்வி நலன் கருதி முக்கிய முடிவெடுப்பீர்கள், வருமானம் திருப்தி தரும், ஆசைகள் நிறைவேற ஆனைமுகனை வழிபட வேண்டிய நாள், இல்லத்தில் இனிய சம்பவமொன்று நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும்.

வளவன்

# கூட்டுக்குழு உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த மறுத்தால் உண்ணாவிரதப் போராட்டம் தொடரும்

## பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் எச்சரிக்கை!

(யாழ்ப்பாணம்)

**சம்பள முரண்பாட்டை நீக்கக்கோரி யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் நேற்று அடையாள உண்ணாவிரதப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

உயர் கல்வி அமைச்சு பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டுக்குழுவுடன் மேற்கொண்ட கூட்டு உடன்படிக்கையை நடைமுறைப் படுத்தி சம்பள முரண்பாட்டுக்கு தீர்வு காணப் பட வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இந்த அடையாள உண்ணாவிரதப்போராட்டத்தில் ஆண், பெண் உட்பட சுமார் 300 இற்கும் மேற்பட்ட கல்விசாரா ஊழியர்கள் பங்குகொண்டிருந்தனர்.

பல்கலைக்கழகத்தின் இராமநாதன் மண்பத்திற்கு முன்பாக முகப்பு வாயிலில் பந்தலமைத்து ஒலிபெருக்கிச் சாதனங்களின் ஊடாக தத்துவப் பாடல்களை ஒலிபரப்புச் செய்து நூதன முறையில் இந்த அடையாள உண்ணாவிரதப்போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.



காலை 9 மணியளவில் ஆரம்பமான இந்தப்போராட்டம் மாலை வரை தொடர்ந்து இடம்பெற்றிருந்தது.

இதேவேளை கூட்டுக்குழு உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த மறுத்தால் எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் தொடர் உண்ணாவிரதப்போராட்டத்தில் ஈடுபடப்போவதாகவும் ஊழியர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் உயர்கல்வி அமைச்சு, தொழிலமைச்சு, சம்பள நிர்ணய ஆணைக்குழு, திறைசேரி என்பன இணைந்து பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டுக்குழுவுடன் நேற்று முன்தினம் கொழும்பில் இன்னொரு உடன்படிக்கையை மேற்கொள்வது தொடர்பாக கலந்துரையாடியுள்ளது.

ஏற்கனவே உயர்கல்வி அமைச்சு பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டுக்குழுவுடன் மேற்கொண்ட கூட்டு உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மறுத்து வரும் நிலையில் இன்னொரு ஒப்பந்தமா? எனவும் யாழ். பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

கடந்த ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி தொடக்கம் அனைத்து பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த கல்விசாரா ஊழியர்கள் சம்பள முரண்பாட்டை நீக்கக்கோரி இவ்வாறான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-6)

# இந்திய அரசின் நிதியில் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வீடுகள்

(நல்லூர்)

இந்திய அரசின் நிதியுதவியுடன் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இவ்வீடுகள் 30வருட காலப்போர் மற்றும் அனர்த்தத்தினால் இடம்பெயர்ந்து வீடுகளை இழந்த வீடுகள் சேதமடைந்தவர்களுக்கே நிர்மாணிக்கப்பட்டு வழங்கப்படவுள்ளது.

இவ்வாறு வீடுகள் நிர்மாணித்து வழங்குவதற்கு விண்ணப்பித்தவர்களின் விபரம் கிராம அலுவலர், சமுர்த்தி உத்தியோகத்தர், கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் பட்டியல்படுத்தப்பட்டுள்ளது.

வெளியிடப்பட்ட பட்டியலில் தகுதியிருந்தும் தெரிவு செய்யப்படவில்லை மற்றும் தெரிவு செய்யப்பட்ட பட்டியலில் தகுதியற்ற வர்கள் இருப்பின் அது தொடர்பான விபரங்களை பிரதேச செயலர், பிரதேச செயலகம், கோப்பாய் பிரதேச செயலகம் என்ற முகவரிக்கு எழுத்துமூலம் விரைவாக அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் பெயர்ப்பட்டியல் ஒவ்வொரு கிராம சேவையாளர் அலுவலகத்திலும் பொது இடத்திலும் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை பதியத்தவறியவர்கள் கிராம சேவையாளரிடம் சென்று பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ-3-134)

# பாடசாலை பேருந்து சேவையை சீராக நடத்த மாணவர்கள் கோரிக்கை

(புன்னாலைக்கட்டுவன்)

யா/ வயாவிளான் மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் தமது பாடசாலைச் சேவைக்கான பேருந்துச்சேவைகள் சீராக இடம் பெறுவதில்லை எனக் கவலை தெரிவிக்கின்றனர்.

மேற்படி பாடசாலை மாணவர்களின் நலன் கருதி கடந்த மாதம் தொடக்கம் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்துச் சேவை ஒழுங்குசெய்யப்பட்டுள்ளதாக போக்குவரத்துச் சபை அறிவித்திருந்தது.

அதனைத் தொடர்ந்து சில தினங்கள் பேருந்து சேவை சீராக நடைபெற்று வந்தது. ஆயினும் தற்போது இப்பேருந்து சேவை சீராக இடம்பெறுவதில்லை என மாணவர்களால் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை பாடசாலை முடிபடைந்து நீண்டநேரத்திற்குப் பின்னரே இப்பேருந்துகள் வருவதனால் அதிக நேரம் காத்து நிற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே இப்பேருந்து சேவையினை சீரான முறையில் ஒழுங்குசெய்து தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மாணவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-9-78)




# மோ.சை.விபத்தில் மூவர் படுகாயம்

(கரவெட்டி)

வடமராட்சி தம்பசிட்டியில் இடம்பெற்ற இரு வெவ்வேறு மோட்டார்சைக்கிள் விபத்தில் மூவர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தம்பசிட்டி பாடசாலைக்கு முன்பாக நேற்றுக்காலை 9 மணிக்கு இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது,

மோட்டார்சைக்கிள்- துவிச்சக்கரவண்டி விபத்தில் துவிச்சக்கரவண்டியில் பயணித்த அல்வாய் மனோகரா பகுதியைச் சேர்ந்த க.ரவீந்திரன் (வயது 58) காயமடைந்துள்ளார்.

மற்றுமொரு சம்பவத்தில் உழவியந்திரம்- மோட்டார்சைக்கிள் மோதிய விபத்தில் தலைக்கவசம் அணியாது மோட்டார்சைக்கிளில் பயணித்த அப்பகுதியைச்சேர்ந்த செ.பிறேம்ராஜ் (வயது 22), க.அற்புதராஜ் (வயது 19) ஆகிய இருவருமே படுகாயமடைந்துள்ளனர். (அ-3-24)

# வயோதிபரை மோதிவிட்டு பறந்தவர்கள் கைதாகினர்

(கரவெட்டி)

வடமராட்சியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் அதிவேகமாக வந்து வீதியால் சென்ற வயோதிபரை மோதிக் காயப்படுத்தி தப்பிச் சென்ற இரு இளைஞர்களை நெல்லியடி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை பிற்பகல் 3 மணிக்கு அல்வாய் இலகடி பகுதியில் இடம்பெற்றது.

வீதியால் துவிச்சக்கரவண்டியில் பயணித்துக் கொண்டிருந்த வயோதிபரை மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் மோதி விபத்துக்குள்ளாக்கியுள்ளனர்.

•பின் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவத்தை நேரில் பார்த்த மக்கள் மோட்டார் சைக்கிள் இலக்கத்தை பொலிஸாருக்கு கொடுத்ததையடுத்தே இவ்விரு இளைஞர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பின் வழக்குப் பதிவு செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. குறித்த வயோதிபர் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ-3-24)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப்பிரதேசம், சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப்பகுதி, மல்லாகம், தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப்பிரதேசம், திருநெல்வேலி பிரதேசம், பட்டணப்பகுதி நீங்கலாக யாழ். மாநகர சபைப்பிரதேசம், ஸ்ரான்லி வீதிப்பிரதேசம், தட்டாதெரு, கச்சேரிப்பிரதேசம், குருநகர், பாசையூர் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

# அவதூறான பேச்சுக்கு 4 ஆயிரம் ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

பொது இடங்களில் அவதூறான வார்த்தைப் பிரயோகங்களினை மேற்கொண்டவர்களுக்கு யாழ். நீதிமன்றம் அபராதம் விதித்துள்ளது.

கே.கே. எஸ். வீதியில் யாழ். நகரினை அண்டிய பகுதியில் நேற்று முன்தினம் இரு மதுப்பிரியர்கள் வீதியினால் சென்ற வாகனங்களுக்கும் பயணிகளுக்கும் இடையூறு ஏற்படும் விதமாக அவதூறாக வார்த்தைப் பிரயோகங்களை பிரயோகித்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் இருவரையும் யாழ். நகர பொலிஸார் கைது செய்து யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

வழக்கினை விசாரணை செய்த நீதவான் குறித்த இருவருக்கும் தலா 4 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (அ-2-4)

# வெளிநாடுகளைச் சேர்ந்த குற்றவாளிகள் பிரித்தானியாவில் தங்கியிருக்கத் தடை

## பிரிட்டன் பாராளுமன்றில் தீர்மானம் நிறைவேற்றம்

(கொழும்பு)

வெளிநாட்டு பாலியல் வல்லுறவு குற்றவாளிகளும் படுகொலையாளிகளும் பிரித்தானியாவில் தங்கியிருப்பதற்கான உரிமையை வழங்குவதை நிறுத்த வேண்டும் என நீதிபதிகளுக்கு உத்தரவிடும் முக்கிய் தீர்மானமொன்று பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

குற்றச் செயல்களில் ஈடுபடும் வெளிநாட்டவர்களுக்கு எதிராக இத்தகைய தீர்மானமொன்று பிரித்தானியாவில் நிறைவேற்றப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

தொழிற்கட்சியின் சர்ச்சைக்குரிய மனித உரிமைகள் சட்டத்தை வெளிநாட்டவர்கள் துஷ்பிரயோகம் செய்து வருவதாகக் கிடைத்த முறைப்பாடுகளையடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் மேற்படி மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் ஆயிரத்து 888 வெளிநாட்டு குற்றவாளிகள் மேன்முறையீடுகளை தாக்கல் செய்துள்ளதாக அந்நாட்டு உள்துறை அலுவலகத் தரவுகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு மேன்முறையீடு செய்தவர்களில் 409 பேருக்கு அந்நாட்டில் தங்கியிருப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

அவர்களில் 185 பேர் பிரித்தானியாவில் குடும்பம் உள்ள காரணத்தால் மேற்படி மனித உரிமைகளின் சட்டத்தின் கீழ் தங்கியிருப்பதற்கான அனுமதியைப் பெற்றார்கள்.

இந்நிலையில் பாராளுமன்ற உறுப்பினர்களால் புதிதாக நிறைவேற்றப்பட்டுள்ள சட்ட விதிகள் எதிர்வரும் வாரங்களுக்குள் அமுலாக்கம் செய்யப்படவுள்ளன்.

இந்த சட்டவிதிகளின் பிரகாரம் ஐரோப்பிய வலயத்துக்கு வெளியேயுள்ள நாடுகளைச் சேர்ந்த எவரும் ஏதாவது குற்றத்துக்காக குறைந்தது 4 வருட சிறைவாசம் அனுபவித்திருக்கும் பட்சத்தில் அவர் பிரித்தானியாவிலிருந்து நாடு கடத்தப்பட நேரிடும்.

அதேசமயம் ஒரு வருடத்துக்கு குறைந்த சிறைத்தண்டனையை அனுபவித்தவர்கள். கடுமையான பிரமாணங்களுக்கு அவர்கள் அமைவாக இல்லாத பட்சத்தில் நாடு கடத்தப்படுவர். (அ-2)

# இலங்கையின் சனத்தொகை 2 கோடி 8 இலட்சத்து 69 ஆயிரம்

இலங்கையில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டின் பிரகாரம் மொத்த சனத்தொகை 2 கோடி 8 இலட்சத்து 69 ஆயிரம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நாட்டில் 36 ஆயிரத்து 807 கிராமங்கள் உள்ளதோடு ஒவ்வொரு கிராமத்திலும் சராசரியாக 123 குடும்பங்கள் வாழ்வதாக நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கீதாஞ்சன குணவர்த்தன தெரிவித்தார்.

வாய்மூல விடைக்காக ரவி கருணாநாயக்க எம்.பி. எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர் மேலும் கூறியதாவது, இந்தக் கணிப்பீட்டின்படி 14 ஆயிரத்து 22 கிராம சேவகர் பிரிவுகள் உள்ளதோடு 313 பிரதேச செயலகங்கள் காணப்படுகின்றன.

குடிசன மதிப்பீட்டு பணிகள் 2012 பெப்ரவரி முதல் மார்ச் வரை நடைபெற்றது. மொத்த சனத்தொகையில் ஒரு கோடி 5 இலட்சத்து 12 ஆயிரம் பெண்களும் ஒரு கோடி 3 இலட்சத்து 57 ஆயிரம் ஆண்களும் உள்ளனர் என மதிப்பிடப்பட்டுள்ளது. (அ-9)

# சேவை நலன் பாராட்டுவிழா

(பூந்தோட்டம்)

வவுனியா மாவட்டத்தில் நீண்ட காலமாக சிரேஷ்ட சட்டத்தரணியாக கடமையாற்றி வரும் முருகேசு சிற்றம்பலம் 45 ஆண்டுகள் வேலை செய்தமையை பாராட்டும் முகமாக இவருக்கான சேவை நலன் பாராட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை வவுனியா றோயல் ஹாடின் மண்டபத்தில் யாழ்ப்பாண மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜெ. விஸ்வநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக உயர் நீதிமன்ற நீதிபதி எஸ். சிறிபவன், மேன் முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதிபதி எஸ். சிறிஸ்கந்தராஜா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். சிறப்பு விருந்தினர்களாக வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம், கிழக்கு மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி சசி மகேந்திரன், யாழ்ப்பாணம் குடியியல் மேன்முறையீட்டு நீதிமன்ற ஆணையாளர் மொஹமட் மக்கி, திருகோணமலை குடியியல் மேன் முறையீட்டு நீதிமன்ற ஆணையாளர் மா. இளஞ்செழியன், திருகோணமலை குடியியல் மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ஏ. பிறேம்சங்கர் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவவிருந்தினர்களாக வவுனியா மாவட்ட நீதிபதி ஆ.கி. அலெக்ஸ்ராஜா, பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம், திருகோணமலை மாவட்ட நீதிபதி தி.யோ. பிரபாகரன், மன்னார் மாவட்ட நீதிபதி அ. யூட்சன், யாழ். மாவட்ட நீதிபதி மா. கணேசராஜா, மல்லாகம் மாவட்ட நீதிபதி ஜெ. கஜநிதிபாலன், ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி எம். மகேந்திரராஜா, சாவகச்சேரி மாவட்ட நீதிபதி செ. லெனின்குமார், கிளிநொச்சி மாவட்ட நீதிபதி பெ.சிவகுமார், முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி அப்துல்காதர் றிஸ்வான், வவுனியா அரச அதிபர் எம்.கே. பந்துல ஹரிச்சந்திர, வவுனியா நகர சபைத் தலைவர் ஐ.கனகையா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-3-266)


## சேவை நலன் பாராட்டு



### திரு.மு. உதயசங்கர்

எமது பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்காக அரும் பணியாற்றி 23.06.2012 இன்று தனது சேவையில் இருந்து ஓய்வு பெறும் திரு.மு. உதயசங்கர் அவர்கள் எமது மாணவர்களின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவர். அவரது 36 வருடகால சேவையினை பாராட்டுவதுடன் ஓய்வின் பின்பும் அவரது சேவை எமது பிரதேசத்திற்கு கிடைக்க வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

முள்ளியவளை, முல்லைத்தீவு. — முள்ளியவளை வாழ் மக்கள்

(சி-315)


## மணிபல்லவத்தில் மஹோற்சவம்



## நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

### முத்துச் சப்பறத் திருவிழா

### ஏற்றம் மிகு நாகபூஷனி அம்மையேயவள்

ஆதிசிவன் தேவியவள் ஆதி அந்தம் அற்றவள்
கிளியேந்தும் கரமுடையவள் நாக கன்னித்தாயவள்
திரைகடலோரம் வீற்றிருப்பவள் தன்னிகரில்லாத தலைவியவள்
இருள் ஒழித்து இன்பம் அளிப்பவள் கலங்கரை விளக்கேயானவள்
அடியார்கள் வினைதீர்ப்பவள் கருணை மழை பொழிபவள்
மாயவன் தங்கையவள் பரமசிவன் பத்தினியவள்
எழில் மிகு முத்துச் சப்பறத்தில் கண்கொள்ளா காட்சி தருபவள்
ஏற்றம் மிகு நாகபூஷணி அம்மையேயவள்

நல்லூர் சுதர்ஷினி

### பக்கத் துணையிருந்து காருமம்மா!

வரமளித்து உலகமெல்லாம் வாழவைக்க வந்தவளே
கரங்குவித்து வேண்டுகிறோம் காத்திடுவாய் நாகம்மையே
நேரினிலே நீயிருக்கும் கோயிலிலேவந்துந்தன்
நெஞ்சம்– குளிரவுனைத் தஞ்சமெனக் கொண்டு
கோரும் வரம்யாவும் தந்துனது கிருபையினால்
குற்றம் குறையாவும் நீக்கியே ஆளும்
பரமன் இடப்பாகம் அமர்ந்தருளும் பத்தினியே
பக்தர் நாமென்றும் உனது பாரமம்மா!

கற்கோவளம்,
கலாபூஷணம் மு.தணிகாசலம்

### பகை வரின் எம்மைக் காத்திடும் தாயே!

ஸ்ரீ நயினை நாக பூஷணி மாதாவே
பஞ்ச பூதங்களையும் நின்சக்தியால் ஆள்பவளே
ஏழு நிலத்திரை கடல் சூழ் மணிபல்லவத்தில்
நயம் பல புரியும் அருள் வலம்புரி நங்கையே!
திரு நயினை எம் பூர்வீகச் சொத்து
புத்தம் புதிய வரலாறுகள் தெற்கில் என் செய்யும்
கௌதமபுத்தர் மொழி எங்கள் மொழியே
அவர் தம் ஆதிமதம் கூட இந்துவே
சைவமும் பௌத்தமும் தெற்கில் கதிரமலையிலும்
வடக்கில் மணிபல்லவத்திலும் சமரசமாம்
பல்லாண்டு பல்லாண்டு அருள்புரியும் சோதியே
பகை வரின் எமைக் காத்திடு தாயே நாராயணி
அன்னை நின் அருள் அமுத சுரபியாய்
அன்னதானப்பணி தொடர்வது மகேசன் சேவையே
அன்னை நின் ஞான விழியின் சக்தியே
ஆன்மீக அழகுடன் அருள் புரியும் தாயே

ஈழநல்லூர் க.கனகராசா


## சாருகா நகையகம்





இல.200G, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:-021 222 3700

# அரசியல் தஞ்சம் கோரும் அகதிகளை எந்த நாடும் திருப்பி அனுப்பக்கூடாது

## ஐ.நா. செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

**அரசியல் தஞ்சம் கோரும் அகதிகளை எந்தவொரு நாடும் திருப்பி அனுப்பக்கூடாதென ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் சர்வதேச சமூகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

சர்வதேச அகதிகள் தினம் கடந்த 20 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது. இதனை முன்னிட்டு ஐ.நா.செயலாளர் நாயகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

அண்மைக்காலமாக ஆபிரிக்கா, மேற்கு ஆசிய நாடுகளில் அகதிகளை திரும்ப அனுப்பும் பிரச்சினை அதிகரித்துள்ளது. தங்கள் உயிருக்கு பாதுகாப்பு இல்லாத சூழ்நிலையில் தாண் சொந்த நாட்டை விட்டு வெளியேறி வேறு நாடுகளில் அகதிகள் தஞ்சமடைகின்றனர்.

எனவே, அவ்வாறு வரும் தஞ்சக் கோரிக்கையாளர்களை வரவேற்க வேண்டும். உள்நாட்டில் பல்வேறு நிதிப் பிரச்சினைகள் இருந்தாலும் அகதிகளாக வருபவர்களை திரும்ப அனுப்பக்கூடாது. அவர்களுக்கு கண்டிப்பாக உதவி செய்ய வேண்டும் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த ஆண்டில் மட்டும் 43 இலட்சம் பேர் தங்கள் நாடுகளில் இருந்து வெளியேறி பிற நாடுகளில் அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளவே நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

அகதிகளில் 5 இல் 4 பேர் வளரும் நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்று ஐ.நாவின் அகதிகள் மறுவாழ்வு பிரிவு தெரிவித்துள்ளது. அகதிகளுக்கான போதிய சட்டங்கள் இல்லாத நிலையில் 2 இலட்சத்துக்கும் மேற்பட்ட இலங்கை, திபெத் அகதிகள் இந்தியாவில் உள்ளனர்.

இதுதவிர வேறு பல நாடுகளில் இருந்து 17 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இந்தியாவில் தஞ்சமடைந்துள்ளனர். ஆனால், 1940 ஆம் ஆண்டுகளில் உள்ள அகதிகள் சட்டத்தை வைத்துக்கொண்டு எதையும் செய்ய முடியாது.

அகதிகள் இந்தியாவில் எளிதில் ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள். ஆனால், அவர்கள் பாதுகாப்பாக வசிக்க போதிய வசதிகள் செய்து கொடுக்கப்படுவது இல்லை. எனவே, அகதிகளை நிர்வகிக்க சரியான சட்ட நடைமுறைகளை இந்தியா கொண்டுவர வேண்டும் என்று தெற்காசிய மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது. (அ-2)

## வாள் வெட்டில் ஒருவர் காயம்

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கின் ஆழியவளை கிராமத்தில் இனந்தெரியாத நபர்களின் வாள் வெட்டுக்கிலக்காகி படுகாயமடைந்த நபரொருவர் மந்திகை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் கி.அருள்வண்ணன் (நகுலன்–வயது 33) என்பவரே படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகிறார். (அ-3-64)

# இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட எவரும் துன்புறுத்தப்படவில்லை

## த.ஐலண்ட் செய்தித்தாள் விபரிப்பு

பிரித்தானியாவில் இருந்து தொடர்ச்சியாக இலங்கையர்கள் நாடு கடத்தப்படுகின்றமைக்கு உலக தமிழ் ஒன்றியம் மற்றும் பிரித்தானிய தமிழ் ஒன்றியம் என்பன ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. அத்துடன் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்கின்றன.

இந்த நிலையில் யுத்தம் நிறைவடைந்த காலத்தில் இருந்து இதுவரையில் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட யாரும் துன்புறுத்தப்பட்டதாக தமக்கு எந்த முறைப்பாடும் கிடைக்கவில்லை என இலங்கையில் உள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த செய்தியை இலங்கையின் த ஐலண்ட் செய்தித்தாள் வெளியிட்டுள்ளது. கடந்த 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து இந்த வருடம் மார்ச் மாதம் வரையில் 970 பேர் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

2009 ஆம் ஆண்டில் 207 பேரும்2010 ஆம் ஆண்டில் 242 பேரும் 2011 ஆம் ஆண்டில் 413 பேரும் இந்த ஆண்டின் முதல் மூன்று மாத காலத்துள் மாத்திரம் 108 பேரும் நாடு கடத்தப்பட்டுள்ளதாக பிரித்தானிய உயர்ஸ்தானிகரக பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் புலம்பெயர்ந்த மக்களின் கோரிக்கையின் அடிப்படையில் மனித உரிமைகள் அமைப்பினர் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதாக தெரிவித்த அவர் அண்மையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக. லண்டனில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தையும் சுட்டிக்காட்டினார். (அ-2)

# அதிவேக நெடுஞ்சாலையில் தனியார் பேருந்துகளுக்கே அதிக வருவாய்

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்துகள் தினமும் சுமார் ஒரு இலட்சம் ரூபாவை வருமானமாக பெறுவதாக போக்குவரத்து பிரதியமைச்சர் ரோஹண திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இத்தொகையானது இலங்கை போக்குவரத்து சபை பேருந்துகள் பெறும் வருமானத்தை விட இருமடங்கு அதிகமாகும். ஒழுங்கு விதிகளின்படி தனியார் பேருந்துகள் செயற்படாமையே இதற்கு காரணமாகும்.

இதனால் இலங்கை போக்குவரத்து சபைக்கு 65 ஆயிரம் ரூபா இழப்பு ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்தார். தனியார் பேருந்துகள் பேருந்து நிலையத்தில் 20 நிமிடங்கள் தரித்து நிற்கவேண்டும் என போக்குவரத்து அதிகாரிகளால் அறிவுறுத்தப்பட்டுள்ள போதிலும் இதை கடைப்பிடிப்பதில்லை எனவும் 10 நிமிடங்களுக்கு ஒரு தடவை அவை புறப்படுகின்றன.

இதேவேளை, இந்நெடுஞ்சாலையில் சேவையில் ஈடுபடும் பஸ்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு அமைச்சு திட்டமிட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)



எஸ்.வரதராஜாவினால் இயற்றப்பட்ட நயினை நாகபூஷணி அம்மன் பக்திப் பாமாலை இசை வெளியீட்டு விழா அண்மையில் யா/இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் இறுவெட்டினை வெளியிட்டு வைப்பதைப் படத்தில் காணலாம்.

(படம்:- என்.குமார்)

# இந்தியாவின் ஆர்ப்பாட்டங்கள் குறித்து நாம் கருத்தில் எடுக்கமாட்டோம்

## ஹெல உறுமய தெரிவிப்பு

இந்தியாவின் ஆர்ப்பாட்டங்களுக்கோ அழுத்தங்களுக்கோ ஒருபோதும் அஞ்சப்போவதில்லை. இலங்கைக்குள் தமிழீழத்திற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால் மீண்டும் முள்ளிவாய்க்கால் நிலையே தமிழர்களுக்கு ஏற்படும் என்று ஜாதிக ஹெல உறுமய எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சாளரும் ஊடகச் செயலாளருமான நிஷாந்த ஸ்ரீ வர் ணசிங்க கூறுகையில்,

நாடு திண்டாடும் போது வேடிக்கை பார்க்கப் போவதில்லை. தனி நாட்டுக் கொள்கையை கைவிடவில்லை என்று சம்பந்தன் எம்.பி. கூறும்போது அதற்கு பதிலடி கொடுக்கப்படல் வேண்டும்.

எனவே, உள்நாட்டில் தமிழீழத்திற்கான நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டால் அதன் தாக்கங்கள் நூறு மடங்காக இருக்கும்.

அண்மையில் தமிழரசுக் கட்சியின் மாநாடு மட்டக்களப்பில் நடைபெற்றது. இதில் உரையாற்றிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி. தமிழீழத்திற்கான முன்னெடுப்புக்களை கைவிடவில்லை என்றும் இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்டவர்களுக்காகவும் உயிருடன் உள்ளவர்களுக்காகவும் தனிநாட்டு முயற்சிகளை முன்னெடுப்பேன்.

அது மட்டுமின்றி தமிழர்களின் பூர்வீகமான வடக்கு- கிழக்கில் சர்வதேசத்தின் ஒத்துழைப்புடன் சுயநிர்ணய உரிமையினை வெற்றி கொள்வேன் என குறிப்பிட்டிருந்தார்.

இதனை ஜாதிக ஹெல உறுமய கடுமையாக கண்டித்தது. முப்பதாண்டு கால யுத்தத்தில் ஏற்பட்ட அழிவுகளை மறந்தும் அதனை மீண்டும் தமிழர்களுக்கு ஏற்படுத்தவுமே மேற்படி கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன.

எனவே, ஜாதிக ஹெல உறுமய ஒருபோதும் வடக்கு- கிழக்கிற்கு சுய நிர்ணய உரிமைகளை வழங்க இடமளிக்காது. அதற்கான முயற்சிகள் ஏற்படுமாயின் முள்ளிவாய்க்காலில் ஏற்பட்ட அழிவுகளே மீண்டும் ஏற்படும்.

தமிழ் மக்களை நிம்மதியாக வாழ விடுவதா அல்லது அழிவை ஏற்படுத்துவதா என்பதை பிரிவினைவாத சத்திகளே தீர்மானிக்க வேண்டும். எமது கூற்றுக்கு எதிராக தமிழகத்தில் பாரிய எதிர்ப்புகள் எழுந்துள்ளன. இது குறித்து கவலைப்படவோ அச்சப்படவோ போவதில்லை.

வைகோ, கருணாநிதி மற்றும் திருமாவளவன் போன்றவர்கள் புலிகளுக்கே ஆதரவானவர்கள். எனவே, இவர்களின் போராட்டத்தினால் ஜாதிக ஹெல உறுமயவிற்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்படப் போவதில்லை.

எனவே, கூட்டமைப்போ இந்தியாவோ தமிழ் மக்களின் அழிவுகளுக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி விடக்கூடாது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் கனடாவில் பட்டம் பெற்றார்

கனடாவின் டொரன்ரோ பல்கலைக்கழகத்தில் (University Of Toronto) பொறிமுறை இலத்திரனியல் துறையில் அதியுயர் சித்தியைப் பெற்று பொறியியல் துறையில் விஞ்ஞானமாணிப் பட்டத்தை வாகீசர் மணிவாசகன் பெற்றுக் கொண்டுள்ளார். அத்துடன் விசேட சித்தியடைந்த மாணவருக்கான பீடாதி பதியினால் வழங்கப்படும் அதி கௌரவ விருதையும் பெற்றுக் கொண்டதுடன் பல்கலைக்கழ ரோபோ சங்கத்தில் வழங்கப்படும் சிறந்த வடிவமைப்பாளருக்கான விருதையும் பெற்றுள்ளார்.

இவன் தனது ஆரம்பக்கல்வியை தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் உயர் நிலைக் கல்வியை மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியிலும் பயின்றார்.

மேலும் 2007 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்று ஜனாதிபதி விருதைப் பெற்றுக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# கருத்துச் சுதந்திர விவாதத்தில் மௌனம் காத்தது இலங்கை

(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் 20 ஆவது கூட்டத் தொடர் நடைபெற்று வரும் நிலையில் கருத்துச் சுதந்திரம் தொடர்பிலான விவாதத்தின் போது இலங்கை மௌனம் காத்துள்ளது.

கருத்துச் சுதந்திரம் சட்டத்திற்கு புறம்பான வினைகள் தொடர்பிலான மூவேறு அறிக்கைகள் ஐ.நா.வின் சிறப்பு வல்லுநர்கள் குழுவின் ஆய்வறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது.

இம்மூன்று அறிக்கையிலும் இலங்கை தொடர்பிலான விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. கருத்துச் சுதந்திரம் தொடர்பிலான அறிக்கையில் ஊடகச்செயற்பாட்டுவெளியில் ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்பு மற்றும் ஊடகங்களுக்கான சுதந்திரம் குறித்து விவாதிக்கப்பட்டிருந்தது. இவ்விவாதத்தின் போது இலங்கை மௌனம் காத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் 19 ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக குறித்த அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளதோடு ஊடகச் கருத்துச் சுதந்திரத்திற்கான வெளி தொடர்பிலான ஐ.நாவின் சிறப்பு ஆய்வுக் குழுவிற்கான அனுமதியினை இலங்கை இன்னும் வழங்கவில்லை எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

2011 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஊடகங்கள் மீதான அடக்குமுறைகள் குறித்து இலங்கையில் ஐ.நாவின் சிறப்பு ஆய்வுக் குழு ஆய்வுகளை மேற்கொண்டதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (அ-8-11)

# கதிர்காம ஏழுமலையானையும் விட்டு வைக்காத திருடர்கள்

(கதிர்காமம்)

கதிர்காமம் ஏழுமலை கோயிலில் உள்ள வேல் உட்பட பித்தளை விளக்குகள் உள்ளிட்ட உபகரணங்கள் பல கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸ் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த கோயிலின் களஞ்சிய சாலையில் வைக்கப்பட்டுள்ள வேல், பித்தளை விளக்குகள் உள்ளிட்ட பொறுமதிமிக்க பழமை வாய்ந்த பூஜை உபகரணங்களே இவ்வாறு கொள்ளையிடப்பட்டுள்ளன என்று மேற்படி முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொள்ளைச் சம்பவம் கடந்த மார்ச் 15 ஆம் திகதிக்கும் இம்மாதம் 6 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியிலேயே நடந்திருக்கலாம் என்றும் இருப்பினும் இது தொடர்பிலான தனக்கு கடந்த 19 ஆம் திகதியே தெரியவந்ததாகவும் குறித்த கோயிலின் பொறுப்பதிகாரி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

கோயிலின் பொறுப்பதிகாரி கொடுத்த முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் குறித்த கொள்ளைச் சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ-8)

# பொது இடத்தில் புகைத்தவருக்கு மூவாயிரம் ரூபா அபராதமும் இருவாரகால சிறைத்தண்டனையும்

(யாழ்ப்பாணம்)

பொது இடத்தில் புகைத்தலினை மேற்கொண்ட நபருக்கு யாழ். நீதிமன்றம் இருவார கால சிறைத் தண்டனையோடு 3 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்துள்ளது.

யாழ். நகரில் நடைபாதையில் வியாபாரம் செய்த நபர் ஒருவர் அவ்விடத்தில் புகைத்தலை மேற்கொண்டு உள்ளார்.

குறித்த நபரை யாழ். பொலிஸார் கைது செய்து யாழ். நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தினர்.

வழக்கினை விசாரணை செய்த யாழ். நீதவான். மா. கணேசராஜா குறித்த நபர் பொது இடத்தில் புகைத்தலை மேற்கொண்டதனால் 3 ஆயிரம் ரூபா அபராதத்துடன் இரண்டு வார கால சிறைத்தண்டனையும் வழங்கியதுடன் நடையாதையில் வியாபாரம் செய்தமையால் 3 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத் தத்தவறின் இருவார சிறைத்தண் டனையும் விதித்து தீர்ப்பளித்தார். (அ-4)




★ 1532-இங்கிலாந்தின் 8-ம் ஹென்றியும் பிரான்சின் முதலாம் பிரான்சுவாவும், புனித ரோமப் பேரரசின் ஐந்தாம் சார்ஸ்சுக்கு எதிராக இரகசிய ஒப்பந்தத்தை ஏற்படுத்தினர்.

★ 1658-இலங்கையில் போர்த்துக்கேயரின் கடைசிப்பிடியாக இருந்த யாழ்ப்பாணக் கோட்டையை டச்சுக்காரர் கைப்பற்றினர்.

1758-ஏழாண்டுகள் போர்: பிரித்தானிய படைகள் ஜேர்மனியில் கிரெபீல்ட் என்ற இடத்தில் பிரெஞ்சுப் படைகளை வென்றனர்.

★ 1760-ஏழாண்டுகள் போர்: ஆஸ்திரியா புரூசியாவை வென்றது.

★ 1794-உக்ரேனின் கீவ் நகரில் யூதக் குடியேற்றத்திற்கு ரஷ்யாவின் பேரரசி 2-ம் கத்தரீன் அனுமதி அளித்தார்.

★ 1868-கிறஸ்தோபர் ஷோல்ஸ் தட்டச்சியந்திரத்துக்கான காப்புரிமம் பெற்றார்.

★ 1894-சர்வதேச ஒலிம்பிக் அமைப்பு பாரிஸில் அமைக்கப்பட்டது.

★ 1942-இரண்டாம் உலகப் போர்: முதன்முதலாக அவுஷ்விட்ஸ் வதை முகாமில் நச்சு வாயு அறையில் சேர்ப்பதற்காக முதல் தொகுதி யூதர்கள் பாரிஸில் இருந்து புகையிரதத்தில் அனுப்பப்பட்டனர்.

★ 1945-ஜப்பானிய இராணுவத்துக்கும் அமெரிக்கப் படையினருக்கும் இடையில் இடம்பெற்ற ஒகினவா சண்டை அமெரிக்காவின் வெற்றியுடன் முடிபடைந்தது.

★ 1956-கமால் நாசர் எகிப்தின் அதிபரானார்.

★ 1980-இந்திய அரசியல்வாதி சஞ்சய் காந்தி விமான விபத்தில் கொல்லப்பட்டார்.

★ 1985- அயர்லாந்தில் அட்லாண்டிக் கடலின்மேல் பறந்து கொண்டிருந்த இந்தியாவின் போயிங் விமானத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் அதில் பயணம் செய்த 329 பேரும் கொல்லப்பட்டனர்.

★ 1990-மல்தாவியா சோவியத் ஒன்றியத்தில் இருந்து விடுதலையை அறிவித்தது.

## பிறப்புக்கள்

★ 1924-ரணசிங்க பிரேமதாச(இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி)



இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி (ஜன.02.1989 முதல் மே 01. 1993 வரை) இவர் ஜனாதிபதி யாவதற்கு முன் ஜே.ஆர். தலைமையிலான அரசில் பிரதமராகப் பணியாற்றினார்.

களனிப் பகுதியில் சாதாரண குடும்பத்தில் இருந்துவந்து அரசியலின் உச்சப்பதவியை பிடித்த இவர், தனது ஆட்சிக் காலத்தில் வடக்கில் விடுதலைப்புலிகளினதும், தெற்கில் ஜே.வி.பியினதும் சவால்களுக்கு முகம்கொடுத்தார்.

இறுதியில், 1993 மே தின ஊர்வலத்தின்போது, கொழும்பு ஆமர் வீதியில் தற்கொலை குண்டுதாரியினால் கொலை செய்யப்பட்டார்.

இவரது மகன் சஜித் பிரேமதாச தற்போது அம்பாந்தோட்டை எம்.பியாகவுள்ளார்.

## இறப்புக்கள்

★ 1980-வி.வி.கிரி-இந்தியாவின் 4-வது குடியரசுத் தலைவர்(பி.1894)

★ 1980-சஞ்சய் காந்தி



இந்திய முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் இளைய மகனாவார்.இவர் பந்தயக் கார்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்ததுடன், விமான ஓட்டுநர் உரிமமும் கொண்டிருந்தார்.

இவரது அண்ணன் ராஜீவ், அரசியலில் இருந்து விலகியிருந்து, விமான ஓட்டித் தொழிலை மேற்கொள்வதில் முனைந்திருந்த போது, சஞ்சய் தனது தாயார் இந்திராவின் அருகில் இருக்க முடிபெடுத்தார்.

பஞ்சாபிப் பெண்ணான மேனகா காந்தியை மணந்தார். இவர்களுக்கு வருண் காந்தி என்ற ஒரு மகன் பிறந்தான்.

சஞ்சய் காந்தி, புதுடில்லியில் நிகழ்ந்த ஒரு விமானவிபத்தில் 1980 யூன் 23-ல் இறந்தார். புதிய விமானம் ஒன்றை இவர் செலுத்திக் கொண்டிருந்தபோது விமானம் கட்டுப்பாட்டையிழந்து இவரது அலுவலகத்தின் மேலேயே விழுந்து நொறுங்கியது.

# அவாஸ் பேரியக்கத்தின் மின்னொப்ப போராட்டம்

(கொழும்பு)

தமிழீழ தாயகத்தினை ஆக்கிரமிப்பு செய்துள்ள இலங்கை இராணுவத்தினரின் நில அபகரிப்புக்கு எதிரான குரல்கள் தமிழர் தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் மேலெழுந்து வரும் நிலையில் உலகப்பிரசித்தி பெற்ற avaaz பேரியக்கத்தில் மின்னொப்ப வேட்டையொன்று தொடங்கப்பட்டுள்ளது.

ஐ.நாவின் பொதுச்செயலாளர் பான் கீ மூனிடம் கோரிக்கை விடுத்து ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த மின்னொப்பமானது இலங்கைத்தீவில் தமிழர்கள் மீது சிங்கள அரசுகள் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் அத்துமீறல்களை சுட்டிக்காட்டியுள்ளதோடு திட்டமிட்ட வகையில் தமிழர்களின் பாரம்பரிய நிலங்கள் சிங்கள பேரினவாதிகளால் அபகரிக்கப்பட்டும் அடையாளங்கள் அழிக்கப்பட்டு வருகின்றமை குறித்து முன்வைக்கப்பட்டுள்ளது.

பேஸ்புக், டுவிட்டர் போன்ற அனைத்து இணைப்பரப்பின் வழியே உலகெங்கும் அமைப்பின் மின்னொப்ப போராட்டத்தினை பரவச் செய்ய முடியும். உலகின் பல பாகங்களிலும் பல மில்லியன் அங்கத்தவர்களை கொண்ட avaaz பேரமைப்பானது காலநிலை மாற்றம், மனித உரிமைகள், வறுமை உட்பட பல்வேறு தளங்களிலும் பணியாற்றி வருகின்றது.

சமீபத்தில் இலங்கை அரசுத் தலைவரது பிரித்தானிய பயணத்திற்கு எதிராக பேரியக்கத்தில் மின்னொப்ப போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(அ-2)

# தாய்நாடான அவுஸ்திரேலியா என்னை கைவிட்டு விட்டது

## விக்கிலீக்ஸ் நிறுவுனரின் பரிதாபம்



தமது சொந்த நாடான அவுஸ்திரேலியா தம்மை கைவிட்டு விட்டதாக விக்கிலீக்ஸ் இணையத்தின் நிறுவுனர் ஜுலியஸ் அசேஞ்ச் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அவுஸ்திரேலியா தம்மை கண்டு கொள்ளாத காரணத்தினாலேயே ஈக்வடோரில் அடைக்கலம் கோரியதாகவும் ஈக்வடோர் நாடு தமக்கு அடைக்கலம் வழங்குமா என்பதனை நிச்சயமாக குறிப்பிட முடியாது.

சுவீடன் நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டால் சுவீடன் தம்மை அமெரிக்காவிடம் ஒப்படைத்தால் அமெரிக்க இராஜதந்திர தகவல்களை அம்பலப்படுத்தியமைக்காக தமக்கு மரண தண்டனை விதிக்கப்படக் கூடிய அபாயம் காணப்படுகிறது.

ஈக்வடோர் அரசாங்கம் எவ்வாறான தீர்மானம் எடுக்கப்படும் என்பதனை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டுமெனவும் அவுஸ்திரேலிய அரசாங்கம் தமக்கு எவ்வித உதவிகளையும் வழங்கத் தவறியுள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

தூதரக அதிகாரிகள் அசேஞ்சிடம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இராஜதந்திர ரீதியான புகலிடம் வழங்கப்பட வேண்டுமென அசேஞ்ச் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, அசேஞ்ச் பிணை நிபந்தனைகளை மீறிச் செயற்பட்டுள்ளதாகவும் இதனால் கைது செய்யப்படலாம் எனவும் பிரித்தானிய பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, ஈக்வடோர் வாழ்வதற்கான உரிமையை மதிப்பதாகவும் அசேஞ்சுக்கு உண்மையிலேயே உயிர் அச்சுறுத்தல் காணப்பட்டால் அவருக்கு அடைக்கலம் வழங்குவது குறித்து கவனம் செலுத்தப்படும் எனவும் ஈக்வடோர் ஜனாதிபதி ராபால் கொரயா தெரிவித்துள்ளார். அத்துடன் அவர் குற்றச்செயல்களில் ஈடுபட்டிருந்தால் அவருக்கு எதிராக தண்டனை விதிப்பதில் தவறில்லை என்றார்.

இதேவேளை இந்த குற்றச்சாட்டுக்ளள் அடிப்படை அற்றவை எனவும் அரசியல் ரீதியான காழ்ப்புணர்ச்சியினால் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(அ-2)

# கைதிகளின் மோதலை விசாரிக்க உயர்அதிகாரி வவுனியா விரைவு

வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரு தமிழ்க் கைதிகள் குழுக்களுக்கிடையில்இடம்பெற்ற மோதலில் ஏழு கைதிகள் படுகாயமடைந்துள்ளனர்.

இம்மோதல் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் டி.டபிள்யு கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்தில் காயமடைந்த ஏழு கைதிகளும் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் இருவருக்கு தலைப்பகுதியில் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைளுக்காக அநுராதபுரம் சிறைச்சாலையிலிருந்து உயர்அதிகாரி ஒருவர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார்.

புலிகள் இயக்கத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் நீதிமன்ற உத்தரவுக்கமைய வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரு தமிழ்க் கைதிகள் குழுக்களுக்கிடையே மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

தற்போது பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது என்றும் சிறைச்சாலை ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

(அ-2)

# வீதிப்புனரமைப்பில் அசமந்தம் வெளிக்கிளம்புகிறது புளுதிப்படலம்

## நடவடிக்கை எடுக்க கோரிக்கை

(பூந்தோட்டம்)

வவுனியா நகரசபையின் எல்லைக்குட்பட்ட கந்தசாமி கோயில் வீதி, மில்வீதி, முதலாம் குறுக்குத்தெரு, 2ஆம் குறுக்குத்தெரு ஆகிய வீதிகள் வவுனியா நகரசபையால் உரிய முறையில் செப்பனிடப்படாமையால் மேற்படி வீதிகளினூடாக பயணிப்போர் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக பாடசாலை மாணவர்கள் உட்பட இவ்வீதி ஊடாக பயணிக்கும் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். வவுனியா நகரின் மிக முக்கிய வீதிகளான இவை வவுனியா நகரசபையால் நீண்ட காலமாக புனரமைக்கப்படாமையால் குன்றும் குழியுமாக காணப்படுகிறது.

அத்துடன் வீதியின் ஒரு பகுதியில் கிரவல் மண் பரவப்பட்டுள்ளது. இவ்வீதிகளில் இருந்து வெளிமாவட்டங்களுக்கான தனியார் பேருந்து சேவைகள் ஆரம்பிக்கப்படுவதனால் வாகன நெரிசலும் அதிகமாக காணப்படுகின்றது.

வவுனியாவில் உள்ள பெண்கள் பாடசாலையான வவு/இறம்பைக்குளம் மகா வித்தியாலயத்திற்கும் இவ்வீதிகளூடாகவே பெருமளவான மாணவிகள் பயணிக்கின்றனர்.

இவ்வீதியில் பரவப்பட்ட கிரவல் தூசு நிறைந்ததாக காணப்படுவதனால் இதனூடாக செல்லும் மாணவர்களின் சீருடைகள் அழுக்கடைகின்றன.

அத்துடன் இவ்வீதிகளால் பயணிப்போருக்கு சுவாச நோய்கள் ஏற்படக்கூடிய அபாயமும் உள்ளது. எனவே, வவுனியா நகரசபையினர் மிகவிரைவாக செயற்பட்டு இவ் வீதியை புனரமைத்து மாணவர்களினதும் பயணிகளினதும் போக்குவரத்து சிரமங்களை நீக்குமாறு மக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(அ-3-266)

# மட்டக்களப்பு நோக்கி பறக்கிறது சீ பிளேன்



(மட்டக்களப்பு)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமைய சிவில் விமான சேவைகள் அமைச்சின் அங்கீகாரத்தில் கொழும்பிலிருந்து மட்டக்களப்பு வரை (சீ பிளேன்) கடல் விமான சேவையை நடத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்தப் பரீட்சார்த்த நிகழ்வானது நேற்று முன்தினம் கொழும்பு சீதுவை பிரதேசத்திலுள்ள தண்டன் ஓயா வாவியிலிருந்து புறப்பட்டு மட்டக்களப்பு வாவியில் விமானம் தரையிறக்கப்பட்டது.

இவ்விமானத்தில் சிவில் விமான சேவை அதிகாரசபை மற்றும் ஸ்ரீலங்கா விமான சேவை அதிகாரிகள் வந்திறங்கினர். இவர்களை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பீ.எஸ்.எம். சார்ள்ஸ் வரவேற்றார்.

இந்த விமான பரீட்சார்த்த பணிகள் நிறைவு பெற்றதும் இந்த கடல் விமான சேவை கொழும்பிலிருந்து மட்டக்களப்பு பாசிக்குடா பகுதிகளுக்கு சேவையிலீடுபடுத்தப்படவுள்ளதாக அபிவிருத்தி முகாமையாளர் சன்ஜீவ ஜெயதிலக தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் இலகுவான பயணத்திற்கு இந்த சீ பிளேன் கடல் விமான சேவை ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ-2)

# மேசைப்பந்தாட்ட போட்டி முடிவுகள்

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான மேசைப்பந்துபோட்டி அண்மையில் மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரியில் நடைபெற்றது. இப்போட்டி முடிவுகளை வடமாகாண கல்வித்திணைக்களத்தின் மாணவர் அபிவிருத்தி உதவி கல்விப்பணிப்பாளர் கே.சத்தியபாலன் அறிவித்துள்ளார்.

இதில் முதல்மூன்று இடங்களை பெற்ற பாடசாலை விபரங்கள் வருமாறு,

### ஆண்கள்

**15 வயதுப்பிரிவு**

வவு/சுந்தரபுரம் அ.த.க.பாடசாலை, யா/மத்திய கல்லூரி, மன்/சென். சேவியர் ஆண்கள் கல்லூரி

**19 வயதுப்பிரிவு**

யா/மத்திய கல்லூரி, வவு/சுந்தரபுரம் அ.த.க.பாடசாலை, மன்/சென். சேவியர் ஆண்கள் கல்லூரி

### பெண்கள்

**15 வயதுப்பிரிவு**

வவு/சுந்தரபுரம் அ.த.க.பாடசாலை, யா/யூனியன் கல்லூரி, யா/சுண்டுக்குளி பெண்கள் கல்லூரி

**19 வயதுப்பிரிவு**

யா/யூனியன் கல்லூரி, யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி, வவு/சுந்தரபுரம் அ.த.க. பாடசாலை.

(அ-9-266)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 100

**பிரேக் நடவடிக்கை (1945,மே 6-11)**

ஐரோப்பாவில் யுத்தத்தை முடித்து வைத்த இந்தத் தாக்குதல் நடவடிக்கையின் சிறப்பம்சம் இதன் முனைப்பான வேகமாகும். இதற்கான காரணங்கள் பின்வருமாறு. முதலாவதாக, நேசநாட்டவரிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றுமென்றும் அமெரிக்க, பிரிட்டிஷ் ஆளும் வட்டங்களுடன் சேர்ந்து சதி செய்யலாம் என்றும் நம்பி, பாசிஸ்டுகள் இயன்றவரை நீண்டகாலம் செக்கோஸ்லொவாக்கியாவில் தங்கியிருக்கத் திட்டமிட்டிருந்தனர். கிழக்கே சோவியத் துருப்புகளை உறுதியாக எதிர்த்து நிற்கும் அதே சமயம் மேற்கே அமெரிக்க- பிரிட்டிஷ் படைகளுக்குப் பாதையைத் திறந்துவிட்டு இவற்றின் முன் செக்கோஸ்லொவாக்கியாவில் எஞ்சியிருந்த, கிட்டத்தட்ட 10 லட்சம் பேரடங்கிய படைத்திரட்டை சரணடையச் செய்ய அவர்கள் எண்ணியிருந்தனர். இரண்டாவதாக-இதுதான் முக்கியமானது-5ஆம் திகதி பிரேகில் ஆயுத எழுச்சி ஆரம்பமாகியது. கிளர்ந் தெழுந்தோருக்கு எதிராக பாசிச ஜேர்மனியத் துருப்புகள் அனுப்பப்பட்டன. நகரவீதிகளில் கடும் சண்டைகள் மூண்டன. கிளர்ந்தெழுந்தோரின் நிலை ஒவ்வொரு மணிநேரம் சென்றதும் மேன்மேலும் கடுமையாகி வந்தது. "எல்லா நேசநாட்டு இராணுவங்களுக்கும் பிரேக் நகரத்தின் வேண்டுகோள்: எல்லாப் பக்கங்களிலிருந்தும் ஜேர்மனியர்கள் பிரேக்கை நோக்கி முன்னேறுகின்றனர்; ஜேர்மனிய டாங்கிகளும் பீரங்கிகளும் காலாட்படையும் இயங்குகின்றன; பிரேக் நகரத்துக்கு அவசர உதவி தேவை; விமானங்கள், டாங்கிகள், ஆயுதங்களை அனுப்புங்கள், உதவுங்கள், உதவுங்கள், விரைவாக உதவி செய்யுங்கள்" என்ற அறைகூவல்கள் பிரேக்கிலிருந்து வந்தன. "உடனடியாகப் பாரசூட் அதரவு அளிக்குமாறு வேண்டுகிறோம். இறக்கம் பிரேக்கில் 12- வினோகிராதி-ஒல்சான் கல்லறை, அடையாளம்- முக்கோணம். ஆயுதங்களையும் விமானங்களையும் அனுப்புங்கள்" என்ற வேண்டுகோள் மே6-ஆம் திகதி சுமார் 5மணிக்கு ருஷ்ய மொழியில் நேரடியாக 1-வது உக்ரேனிய சேனையின் துருப்புகளுக்கு அளிக்கப்பட்டது.

பாசிச ஜேர்மனியத்துருப்புகள் பிரேக் நகரத்தைத் தாக்க ஆரம்பித்த போது அமெரிக்கா தனது துருப்புகள் நகரத்தை நோக்கிச்செல்வதை நிறுத்தியது. ஆனால், முற்றுகையிடப்பட்ட நகரத்திற்கு உதவி வந்த சேர்ந்தது. தமது சர்வதேசிய கடமைக்கு விசுவாசமான சோவியத் இராணுவம் உதவிகோரிய பிரேக் நகரவாசிகளின் அறைகூவலுக்கு உடனடியாக செவிமடுத்து மே 6 ஆம் திகதி, திட்டமிட்டதற்கு ஒரு நாள் முன்னதாக, தாக்குதலில் இறங்கியது. எல்லாமே பிறேக் நகரத்தை நோக்கி முன்னேறுவது! அதைக்காப்பாற்றுதல்; பாசிஸ்டு மிருகங்கள் அதை அழிக்காமலிருக்கும்படி பார்த்துக்கொள்வது எனும் கட்டளைக்குக் கட்டுப்பட்டிருந்தது என்று 1-வது உக்ரேனிய சேனையின் தளபதி மார்சல் கொனெவ் நினைவு கூர்கிறார். அதே நேரத்தில் 2-வது, 4-வது உக்ரேனிய சேனை



பிரேக்கில் ஜேர்மன் துருப்புகள்-பெப்ரவரி-1945



பிரேக்கில் சோவியத் வீரர்களின் கல்லறை

ஆரம்ப இடத்தை அடைந்தன.

மே6 ஆம் திகதி, தனிப்பட்ட திசைகளில் எதிரி பின்சென்றதைப் பயன்படுத்திக்கொண்ட 1-வது உக்ரேனிய ஷேைனையின் வலப்புறத் துருப்புகள் எதிரியைத் துரத்திச் செல்ல ஆரம்பித்தன. முன்னணிப் படையணிகள் எதிரியின் பின்னணிகளைத் தகர்த்து விரைவாக முன்சென்று பிரதான சக்திகளுக்குப் பாதை அமைத்தன. இரவும் பகலும் இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்தன. மே-7 ஆம் திகதி, சேனையின் இடப்பிரிவு மற்றும் மையப்பிரிவின் துருப்புகள் தாக்குதலில் இறங்கின.

2-வுது உக்ரேனிய சேனையின்

## பாசிச ஜேர்மனியின் முறியடிப்பு முற்றுப்பெறுதல்

களின் துருப்புகளும் உறுதியான தாக்குதலில் இறங்கின. 1-வது செக்கோஸ் லொவாக்கிய ஆர்மி கோர்பஸ், போலந்து இராணுவத்தின் 2-வது படை, 1-வுது, 4-வது




ஜேர்மன் அதிகாரிகள் பேச்சுவார்த்தைக்குமுன் வெள்ளைக் கொடியுடன்

ருமேனியப்படைகள் ஆகியனவும் சோவியத் துருப்புகளுடன் தோளோடு தோள் நின்று போராடின.

நடவடிக்கையின் ஆரம்பத்தில் சக்திகளின் சமன் நிலை சோவியத் துருப்புகளுக்கு ஆதாயமாயிருந்தது. 20 இலட்சத்திற்கும் கூடுதலான சோவியத் துருப்பு களின் வசம் சுமார் 30ஆயி ரத்து 500 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் கிட்டத்தட்ட 2ஆயிரம்டாங் கிகள், தானியங்கி பீரங்கி அமைப்புகளும் 3 ஆயிரத் துக்கும் மேற்பட்ட விமா னங்களும் இருந்தன. பாசிச ஜேர்மனிய சென்டர் படைத்தொகுதியில் 9 இலட்சத்திற்கும் அதிகமானோர் இருந்தனர். இவர்களின் வசம் 9 ஆயிரத்து 700 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் ஆயி ரத்து 900 டாங்கிகள், திடீர் தாக்குதல் பீரங்கிகளும் ஆயிரம் விமானங்களும் இருந்தன.

1-வது,4-வது,2-வது உக்ரேனிய சேனைகளின் சக்திகளைக்கொண்டு. பிரேகை நோக்கிய பொதுவான திசையில் ஒரே நேரத்தில் தாக்குதல்களைத் தொடுத்து பீல்ட் மார்ஷல் ஜெனரல் ஷேர்னர் தலைமையிலுள்ள எதிரியின் பெரும் படைத்திரட்டைச் சுற்றிவளைத்து அழிப்பதும் செக்கோஸ்லொவாக்கியத் தலை நகரத்தை விடுவிப்பதும்தான் பிரேக் நடவடிக்கையின் திட்டமாகும்.

சோவியத் கொமாண்டர்கள் மற்றும் படைத் தலைமையகங்களின் உயர்வான திறமை மறைவாகவும் குறுகிய காலகட்டங்களிலும் படை மாற்றம் செய்யவும் துருப்புகள் தாக்குதலுக்கான ஆரம்பநிலையை மேற்கொள்ளவும் உதவின. உதாரணமாக 3-வது, 4-வது கார்டு டாங்கிப்படைகளும் 1-வது உக்ரேனிய சேனையின் துப்பாக்கிப்படை யூனிட்டுகளும் 3 நாட்களில் பெர்லின் அருகேயிருந்து 100-200 கி.மீ. தூரத்தை கடந்து வந்து டிரெஸ்டீனுக்கு வட மேற்கேயிருந்து தாக்குதலைத் தொடுப்பதற்கான



சோவியத் மார்ஷல் கோனவ்

துருப்புகள் ஸ்னோய்மோ, மீரஸ்லாவ், யார்மெர்ஜீத்ஸே ஆகிய நகரங்களைக் கைப்பற்றி, தென் கிழக்கிலிருந்து பிரேகை நோக்கித் தொடர்ந்து முன்னேறின. 4-வது உக்ரேனிய சேனை மே- 8 ஆம் திகதி ஒலோமோவூத்ஸ் நகரைப் பிடித்தது. இதன்பின் மே9-ஆம் திகதி காலை இச்சேனை 2-வது உக்ரேனிய சேனையின் படைப் பிரிவுகளுடன் இணைந்தது.

(தொடரும்)

# அபகரிப்புக்களை நிறுத்திவிட்டு மக்களை நிம்மதியாக வாழவிடுங்கள்



(கொழும்பு)

**வடக்கில் இடம்பெற்று வரும் காணி அபகரிப்புக்கள் உடனடியாக நிறுத்தப்பட்டு மக்கள் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழக்கூடிய சூழலை உருவாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐ.தே.கவின் பாராளுமன்ற உறுப்பினர் டி.எம். சுவாமிநாதன் கோரியுள்ளார்.**

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அதிகரித்து வரும் வாழ்க்கை சுமையினால் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்ற இச்சந்தர்ப்பத்தில் வடக்கில் இராணுவத்தினால் மேற்கொள்ளப்படும் காணி அபகரிப்பு மக்கள் மத்தியில் பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளது.

குடாநாட்டில் தனியார் காணிகள் மற்றும் கட்டடங்களில் இராணுவம் நிலை கொண்டுள்ளது.

இராணுவம் இவ்வாறு நிலை கொண்டுள்ள நிலையில் தென்மராட்சி பிரதேசத்தில் 300 ஏக்கர் நிலத்தையும் தெல்லிப்பழை பிரதேசத்தில் 61 ஏக்கர் நிலத்தையும் கைப்பற்றுவதற்கு இராணுவம் முயற்சி செய்து வருவதாக எழுந்துள்ள செய்தியினால் மக்கள் பெரும் அச்சமடைந்துள்ளனர்.

தற்போது யாழ்.மாவட்டத்தில் வீட்டுடன் இணைந்த காணிகள் 57 இலும் 5 வெற்றுக் காணிகளிலும் அரச காணியிலும் வியாபார நிறுவனங்களிலும் பொலிஸார் குடிகொண்டுள்ளனர்.

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் 716 காணிகள் உள்ளதாக கருதப்படுகிறது. இதில் வீட்டுடன் இணைந்த 378 காணிகளும் 283 வெற்றுக் காணிகளும் 9 அரச காணிகளும் 46 வியாபார நிறுவனங்களும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன.

தேசிய பாதுகாப்புக்கு எதுவித இடையூறுகளுமின்றி யாழ்.குடாநாட்டின் பாதுகாப்பை உறுதி செய்து பாதுகாப்பு தரப்பு நிலை கொண்டுள்ள அனைத்து பொதுமக்கள் காணிகளையும் உரிமையாளர்களுக்கு வழங்கி தமிழ் மக்களின் வாழ்விடங்களை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும்.

வடக்கில் இராணுவத்தினரின் செயற்பாடுகள் தொடர்பாக சர்வதேச மட்டத்தில் பேசப்படும் இச்சந்தர்ப்பத்தில் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்து இராணுவ கெடுபிடிகளை நிறுத்தி சுமுக நிலையை வடக்கில் உருவாக்க வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

## எல்லே போட்டி முடிவு

(பூந்தோட்டம்)

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான எல்லே போட்டி அண்மையில் மன்னார் முருங்கன் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இப் போட்டியின் முடிபுகளை வட மாகாண கல்வித் திணைக்களத்தின் மாணவர் அபிவிருத்தி உதவி கல்விப்பணிப்பாளர் கே.சத்தியபாலன் தெரிவித்தார்.

இதில் முதல் 3 இடங்களை பெற்ற பாடசாலை விபரம் வருமாறு,

**19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு**

யா/பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி, வவு/புதுக்குளம் மகா வித்தியாலயம், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

**19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு**

யா/சுழிபுரம் விக்டோரிய கல்லூரி, யா/மணற்காடு றோமன் கத்தோலிக்க த.க. பாடசாலை, யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை. (அ-9-266)



விவசாயிகள் முயற்சிப் பாதை என்னும் செயற்றிட்டத்தின் கீழ் தெவினுவர தேர்தல் தொகுதியில் தெல்கல்ல பிரதேச விவசாய இயக்கத்திற்கு மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் சமாதி சமூக அபிவிருத்தி மன்றத்தின் தலைவருமான புத்திக பத்திரண பயனாளி ஒருவருக்கு உபகரணம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

## தந்திரமாக காப்பை அபகரித்தவருக்கு 6 மாதகால சிறைத்தண்டனை விதிப்பு

(யாழ்ப்பாணம்)

திருமண வீடொன்றிற்கு செல்வதாக கூறி அயல் வீட்டு பெண்ணின் காப்பினை தந்திரமான முறையில் வாங்கி அபகரித்த பெண்ணிற்கு யாழ். நீதிமன்றம் 6 மாத சிறைத் தண்டனை விதித்துள்ளது.

உரும்பிராயை சேர்ந்த குறித்த பெண் அதேயிடத்தை சேர்ந்த பெண்ணொருவரிடம் தைமாதம் 17 ஆம் திகதியன்று தான் திருமண வீடொன்றுக்கு செல்லவேண்டியிருப்பதால் கைமாறாக காப்பினை தருமாறும் திருமண வீடு முடிந்த பின்னர் திருப்பித் தருவதாகவும் வாங்கிச் சென்றுள்ளார்.

எனினும் தனது காப்பினை திரும்ப தராத நிலையில் தான் ஏமாற்றப்பட்டுள்ளதனை உணர்ந்த குறித்த பெண் கோப்பாய் பொலிஸாரிடம் முறையிடப்பட்டதனை தொடர்ந்து குறித்த திருட்டுப் பெண் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

பின்னர் யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு மன்றின் உத்தரவிற்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டு பிணையில் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டார்.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் யாழ். நீதவான் மா.கணேசராசா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கினை விசாரணை செய்த நீதவான் பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு 10 ஆயிரம் ரூபா நட்டஈடு கொடுக்குமாறு உத்தரவிட்டதோடு 5 வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத சிறைத் தண்டனையும்விதித்து தீர்ப்பளித்தார்.

(அ-2-4)

# நவநீதம்பிள்ளையும் சிவ்சங்கர் மேனனும் இலங்கை வருவதன் நோக்கம் என்ன?

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கேள்வி

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையும் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனனும் அவசரமாக இலங்கைக்கு வரவேண்டிய தேவை என்ன? என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர கேள்வியெழுப்பியுள்ளார்.

மேற்படி இருவரையுமே நாட்டிற்குள் அனுமதிப்பது ஆபத்தானதாகும். எனவே, அரசாங்கம் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும் நவநீதம்பிள்ளை மற்றும் சிவ்சங்கர் மேனனின் வருகையை கடுமையாக எதிர்க்கிறோம்.

சர்வதேசத்தின் தலையீடுகள் தொடர்பில் அரசாங்கம் உறுதியான நிலைப்பாட்டுடன் செயற்பட வேண்டும். நவநீதம்பிள்ளையை நாட்டுக்கு வருமாறு அழைக்கின்றமையானது முட்டாள்தனமான செயற்பாடாகும்.

உள்நாட்டு யுத்தத்தின் போதும் அதற்கு பின்னரும் ஐ.நா.வோ நவநீதம்பிள்ளையோ இலங்கைக்கு நன்மை ஏற்படும் வகையில் செயற்படவில்லை. மாறாக நாட்டிற்கும் இராணுவத்திற்கும் எதிரான நடவடிக்கைகளையே முன்னெடுத்தனர்.

எனவே, ஐ.நா. பிரதிநிதி தொடர்பில் எவ்விதமான நம்பிக்கையினையும் வைக்க இயலாது. அதேபோன்றுதான் இந்தியாவும் வெளியில் நண்பனைப் போல் காட்டிக்கொண்டு உள்ளே அமெரிக்காவுடன் கூட்டணியினை அமைத்து இலங்கைக்கு எதிரான தீர்மானங்களுக்கு ஒத்துழைப்புக்களை வழங்குகின்றது.

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் திடீரென இலங்கை வருகின்றமையானது பல சந்தேகங்களையே தோற்றுவித்துள்ளன.

எனவே, அரசாங்கம் மேற்படி இருவரின் வருகை தொடர்பிலான உண்மையான நிகழ்ச்சி நிரலை நாட்டிற்கு வெளிப்படுத்த வேண்டும். பொதுமக்கள் மிகவும் அவதானத்துடனேயே உள்ளனர் என்றார். (அ-2)

## ஜேர்மன் பிரஜை கஞ்சாவுடன் கைது

(கொழும்பு)

ஜேர்மனிய பிரஜை ஒருவர் 170 கிராம் வரையிலான கஞ்சாவை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சந்தேக நபர் பெருந்தோட்டை பகுதியில் கைது செய்யப்படும்போது செல்லுபடியாகும் கடவுச்சீட்டை வைத்திருக்கவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பலப்பிட்டிய நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் படுத்தப்பட்டுள்ளார். (அ-9)

# தென்னையில் பீடைகளும் அவற்றின் முகாமைத்துவமும்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு.... 20-III



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

தென்னையும் பனையும் வளங் கொழித்த இப்பூமியிலே இவ்விரு வளங் களும் நடைபெற்ற போரிலே சிக்குண்டு சிதைக்கப்பட்டு விட்டன. போரின் உக் கிரத்தினுள் அழிக்கப்பட்டவை போக வெட்டிச் சரிக்கப்பட்டவையும் ஏராளம். எமது சூழலுக்குகியைவான இம்மரங்க ளின் எண்ணிக்கையை நாம் தேச நலன் கருதி பாதுகாக்க வேண்டியதும் இன் னும் இவற்றை வளர்க்கவும் வேண்டும்.

எமது சூழலில் இம்மரங்களின் பங் களிப்பு அளப்பரியது. மேலும் இவை யெல்லாவற்றுக்கும் மேலாக தென்னை



Cocount Red palm weevil

யில் அதிகரித்துள்ள பீடைகளின் தாக் கம் தொடர்ந்து தென்னை மரங்களை தக்க வைப்பதற்கும் அதிலிருந்து விளைச்சலைப் பெறவும் பிரச்சினை யாக இருக்கப்போகின்றது. தென்னை யொரு பல்லாண்டுத் தாவரமாக இருப் பதனால் ஒரு மரத்தினதும் இழப்பு கூட ப்ாரிய விழுக்காட்டை ஏற்படுத்திவிடும். இதனால் இம்மரங்களை சரியான முறையில் கண்காணித்து பாதுகாக்க வேண்டும். தென்னையில் சேதத்தை ஏற்படுத்தும் இன்னொரு பூச்சிபீடை சிவப்பு நீள்மூஞ்சி வண்டு.

### சிவப்பு நீள்மூஞ்சி வண்டு

பெயரிலேயே நீள்மூஞ்சி வண்டு என குறிப்பிடப்பட்டிருப்பதை அவதானி யுங்கள். வண்டுகளில் வித்தியாசமான தாக ஒரு வகையாக இதனது முகப்பகுதி நீண்டிருக்கும். இதன் மூலம் இப்பூச்சி பீடையை இலகுவாக இனங்கண்டு கொள்ள முடியும். சிவப்பு அல்லது கடுஞ்சிவப்பு நிறத்தைக் கொண்டுள்ள மையால் இன்னும் இதனை இனங்கான இலகுவாக இருக்கும். இவை வெளிச்ச த்திற்கு கவரப்படும் தன்மையுடையதால் இரவில் வெளிச்சத்தை நோக்கி நிறை வுடலி நீள் மூஞ்சி வண்டுகள் வரும். அரு கிலுள்ள தென்னை மரங்களில் இவ் வண்டுகளின் தாக்கம் இருந்தால் இன்

Rhynchophorus Ferrugineus



னும் அவற்றினது எண்ணிக்கை அதிக மாக இருந்தால் நிறைவுடலி வண்டுகள் விரைந்து பரவி புதிய தென்னைகளை தாக்க ஆரம்பிக்கும்.

தென்னை சிவப்பு நீள்மூஞ்சி வண் டினை (Red palm weevil ) அதன் தாக்கத்தை ஆங்காங்கே பரவலாக அவ தானிக்கக்கூடியதாயுள்ளது. தென்னை யில் தாக்கத்தை ஏற்படுத்தி பெயரும் பெற் றிருக்கின்றது இவ்வண்டு. இதற்கு றின் கோபோரவு பெரூஜினியசு (Rhyn chophorus Ferrugineus ) என பெயர் வைத்திருக்கின்றார்கள். இந்தப் பெயரை வைத்து இப்பூச்சி பீடையைப் பற்றிய முழுத்தகவலையும் இணையத்தள வாயிலாகவோ அன்றியும் தகவல் திரட்டு களிலிருந்தும் பெறலாம்.

நிறைவுடலி நீள்மூஞ்சி வண்டு 35 மில்லி மீற்றர் நீளமுடையது. ஒரு பெண் வண்டு ஏறக்குறைய 270 முட்டைகளை இடவல்லது. இளந்தென்னைகளின் தண் டினடியில் மெதுமையான பகுதிகளில் தனது வாயினால் சிறுகுழி தோண்டி அத் துடன் பெண் வண்டு முட்டைகளை இடும். வளர்ந்த மரங்களில் தென்னந்தண்டு மற்றும் ஓலை, மட்டை பகுதிகளில் ஏற்ப டும் வெட்டுக்கள் அல்லது காயங்களில் முட்டைகள் இடப்படும். சென்ற கிழமை பார்த்த காண்டாமிருகவண்டினால் ஏற் படுத்தப்படும் காயத்தினூடாக இந்நீள் மூஞ்சி வண்டு இட்ட முட்டையிலிருந்து வெளிவரும் குடம்பி இலகுவாக தென்னை மரத்தினுள் சென்றுவிடும். முட்டைகள் மெல்லிய வெள்ளை நிறத்திலும் 2.5 மில்லி மீற்றர் நீளமுடையன.

இவற்றை வெற்றுக் கண்ணினால் காண்பது கடினமாகும். முட்டை 2-5 நாட் களில் பொரித்து குடம்பி தென்னை மரத்தி னுள்ளே சுரங்கமமைத்து உட்சென்று தென்னை மரத்தின் உட் பகுதியை மெல்ல மெல்ல உண்ண ஆரம்பிக்கும்.

அதிகளவு எண்ணிக்கையான நீள்மூ ஞ்சி வண்டுகளின் குடம்பி மரத்தினுள் பாரியளவிலான சேதத்தை ஏற்படுத்து வதனால் மரம் தனது உறுதிப்பாட்டை இழக்க ஆரம்பிக்கும்.

ஏறக்குறைய 40-50 குடம்பிகள் ஒரு தென்னை மரத்தினுள் சேதம் விளைவிக் கக்கூடியன என அறியப்பட்டுள்ளது. குடம்பி 55 நாட்கள் வரையில் வாழும். நன்றாக வளர்ந்த குடம்பி தென்னை மரத் தினுள்ளேயே கூடு கட்டி கூட்டுப்புழுவா கும். 30 நாட்கள் கழித்து கூட்டுப் புழுவி லிருந்து நிறைவுடலி வெளியே வரும். மொத்த வாழ்க்கை வட்டம் 80 நாட் களாகும். நிறைவுடலி நீள்மூஞ்சி வண்டு 75 நாட்கள் வரை உயிர்வாழும் தன்மை யுடையது.

குடம்பியினதும் நிறைவுடலி வண்டின தும் சேதத்தினால் இலைகள் மஞ்சள டைந்து வாட ஆரம்பிக்கும். தண்டுப் பகுதி யில் சிறிய வட்ட வடிவ துளை காணப்படும். இத்துளைகளின் வழியாக கரு மண்ணிற திரவம் வெளிவரும். வாடிய இலைகளை பிடித்திழுத்தால் உடனடியாக விடுபட்டு கையுடனே வரும். மேலும் இலைகள் நீள்பக்கமாக வெடிக்க ஆரம்பிக்கும். இவ் வாறு வெடித்த துளையுள்ள பகுதிகளிலி ருந்து துர்நாற்றம் வீசும்.

இப்பூச்சி பீடையை முகாமைத்துவப் படுத்துவது மிகவும் இலகுவல்ல. பூச்சி பீடையின் தாக்கம் அல்லது சேதம் ஏதும் அவதானிக்க முடிந்தால் முன்னெச்சரி க்கை நடவடிக்கைகளை விரைந்து எடு க்க வேண்டும். இப்பூச்சி பீடையைக் கட்டுப்படுத்த மொனேகுறோட்டபொஸ் சிபார்சு செய்யப்பட்டிருப்பினும் அது தற் போது தடை செய்யப்பட்டுள்ளது.

ஆனால் தென்னை அபிவிருத்திச் சபை மூலமாக பெற்று கட்டுப்படுத்த லாம். ஊடு புகுந்து தாக்கும் வகையைச் சார்ந்த பீடை நாசினியாக இது இருப்பத னால் தென்னந்தண்டில் துளையிட்டு அதனுள் இம்மருந்தை கலக்காது செலு த்தலாம். பீடை நாசினி முழுவதுமாக உட்சென்ற பின் வாயிற்துளையை அடை த்து விட வேண்டும்.

பீடை நாசினி பிரயோகிக்கும் முன்பு தென்னையில் இளநீர் அல்லது தேங்காய் கள் இருந்தால் செறிவு நிலையில் செலு த்தப்படும் பீடை நாசினி தேங்காய்களி லும் செறிந்திருக்கும் போது அவற்றை உணவாக கொள்ளக்கூடாது.

இவ்வாறான பீடை நாசினி பிரயோ கம் செய்யும் போது மிகுந்த கண்காணிப் பின் கீழேயே செய்தல் வேண்டும். பீடை நாசினி புகுத்திய துளையை பெயின்றி னால் அல்லது தாரினால் அடைத்து விட வேண்டும். மேலும் வாடிய மஞ்சளாகிய இலைகளை வெட்டியகற்றி மரத்தை உயிர் தப்ப வைக்கும் வழிகளில் ஈடுபடுதல் முக்கியமானது. இத்தாக்கத்தை அவ தானித்த மரங்கள் பற்றி தென்னை அபி விருத்தி சபைக்கோ அல்லது எமக்கோ அறிவியுங்கள். இதன் மூலம் இப்பூச்சி பீடை மேலும் மற்றைய மரங்களுக்கு பரவாது தடுக்க முடியும். (வளரும்)

# சிவில் பாதுகாப்பு திணைக்களத்தில் முன்னாள் போராளிகள் இணைப்பு?

## பாதுகாப்புச் செயலாளர் ஆலோசனை

(கொழும்பு)

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் சிவில் பாதுகாப்புத்திணைக் களத்தில் இணைக்கப்படவுள்ளதாகத் தெரி விக்கப்படுகின்றது.

முன்னாள் தமிழீழ விடுதலைப்புலி உறுப் பினர்களுக்கு புனர்வாழ்வளித்து அவர்களை சிவில் பாதுகாப்புப் படையில் இணைக்கும் நடவடிக்கை நேற்றைய தினம் கிளிநொச்சி யில் ஆரம்பமாகியுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்க ளில் தலா 300 பேர் என்ற அடிப்படையில் ஆயிரத்து 500 முன்னாள் போராளிகள் சிவில் பாதுகாப்பு படையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

சிவில் பாதுகாப்புப் படையினால் மேற் கொள்ளப்படும் விவசாய மற்றும் அபிவிருத் திட்டங்களில் புதிதாக இணைத்துக் கொள் ளப்படும் முன்னாள் போராளிகள் ஈடுபடுத்தப் படவுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜ பக்ஷவின் எண்ணக்கருவிற்கு அமைய பாது காப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வின் ஆலோசனைக்கு அமையவே இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது.

(அ-2)



யாழ் மண்ணில்....
கல்யாணமாலை
KALYANA MALAI
( சர்வதேச இலவச திருமண சேவை)



இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(பழைய எக்ஸ்போ எயார் விமான சேவை அலுவலகம்)
எனும் முகவரியில் இயங்குகின்றது
பதிவுக்கட்டணம்
ரூ.1000/- மட்டுமே
தொடர்பு:-021 720 1005
அலுவலக நேரம்: வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில்
காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை
குறிப்பு; பதிவை மேற்கொள்ளும் போது சாதகம், போட்டோ என்பன அவசியம். திருமணத் தரகர்கள் பதிவு செய்ய முடியாது.

# வடக்கு மாகாணசபைத் தேர்தல் இழுத்தடிப்பு கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் அவசரம் !

வடமாகாண சபைத்தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்ற அழுத்தம் அரசாங்கத்துக்கு அதிகரித்து வருகிறது.

உள்நாட்டில் தமிழ் அரசியல் கட்சிகளால் இந்த அழுத்தம் கொடுக்கப்படுகிறதோ இல்லையோ- சர்வதேச அளவில் இது இலங்கைக்கு தலைவலி கொடுக்கின்ற விவகாரமாக மாறியுள்ளது.

வடக்கு மாகாண பபைக்கான தேர்தல் எப்போது நடத்தப்படும் என்ற கேள்விக்கு அரசாங்கம் பல்வேறு பதில்களைக் கொடுத்தது. அந்தக் கால எல்லைகள் எல்லாம் இப்போது முடிந்துவிட்டன. இப்போதைய நிலையில் எப்போது தேர்தல் நடத்தப்படும் என்று அரசாங்கம் சரியானதொரு கால எல்லையைச் சொல்லவே தயாராக இல்லை.

விடுதலைப்புலிகளை கிழக்கில் இருந்து அகற்றியவுடன் அங்கு அவசர அவசரமாக மாகாணசபைத் தேர்தலை நடத்தியது அரச்ாங்கம்.

போரினால், இடம்பெயர்ந்த மக்கள் முகாம்களில் அவதிப்பட்டுக்கொண்டிருக்க, இப்போது ஒரு தேர்தல் தேவைதானா என்று எல்லோரும் கேள்வி எழுப்பிய போது அதையெல்லாம் அரசாங்கம் காதில் போட்டுக்கொள்ளவில்லை.

கிழக்கில் ஜனநாயகத்தை நிலை நாட்டுவதற்குத் தேர்தல் அவசியம் என்று கூறியது அரசாங்கம். ஆனால், அதே ஜனநாயகத்தை இன்னமும் வடக்கில் உருவாக்க அரசாங்கம் முனையவில்லை.

வடக்கில் மட்டுமன்றி, நாட்டில் ஒட்டுமொத்தமாகவே போர் முடிந்து மூன்று ஆண்டுகளாகிவிட்டன. கிழக்கிலிருந்து விடுதலைப் புலிகளை விலக்கியதும், ஒரு சில மாதங்கள் கூடக் காத்திருக்காமல் தேர்தலை நடத்திய அரசாங்கத்தினால், வடக்கில் மூன்றாண்டுகள் கழித்தும் தேர்தலை நடத்த முடியவில்லை.

நொண்டிக்குதிரைக்கு சறுக்கிய சாட்டு என்பதுபோல, காலத்துக்கும் நேரத்துக்கும் ஏற்ப ஒவ்வொரு காரணங்களைச் சொல்லி தேர்தலை நடத்த தயங்குகிறது அரசாங்கம்.

ஆண்டு இறுதி, அடுத்த ஆண்டுத் தொடக்கம் என்று அவ்வப்போது கூறப்பட்ட- வடக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு அசாங்கம் தயங்குவது ஏன் என்ற கேள்வி எழுகிறது.

அண்மையில் இலங்கை வந்தருந்த பிரிட்டனில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்களின் இராஜதந்திரிகள் குழுவும் இதையே தான் வலியுறுத்தியது. ஆனால் யாருடைய பேச்சையும் அரசாங்கம் கேட்பதாக இல்லை. இப்போது முகாம்களில் உள்ள இடம் பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்ட பின்னர் தேர்தலை நடத்தலாம் என்று சொல்கிறது.

உண்மையில மீள் குடியமர்வு நிறைவடைந்த பின்னர் தேர்தல் என்றால் அதை இப்போதைக்கு நடத்தவே முடியாது. ஏனென்றால், வடக்கில் இடம் பெயர்ந்தவர்களின் பிரச்சினையை- மீள்குடியமர்வை அரசாங்கத்தினால் குறுகிய காலத்தில் தீர்க்க முடியாது.

மீளக் குடியேற்றப்பட வேண்டிய மக்கள் அதாவது இடம்பெயர்ந்த மக்கள் என்று அரசாங்கம் கொடுக்கின்ற புள்ளி விபரங்கள் எல்லாம் தவறானவை.

யாழ்ப்பாணத்தில் உயர்பாதுகாப்பு வலயங்களால்- 20 வருடங்களுக்கு




மேலாக இடம்பெயர்ந்து வாழும் ஆயிரக்கணக்கானவர்கள் அரசின் புள்ளிவிபரங்களுக்குள் சேர்க்கப்படவில்லை. வடக்கில் இருந்து 1990 இல் இடம் பெயர்ந்த முஸ்லிம்களும் இந்தக் கணக்கில் இல்லை.

மன்றத் தேர்தலுக்கோ இது பொருந்தாது.

அவையெல்லாம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே நடத்தப்பட்டன. வடக்கு மாகாணசபைத் தேர்தலுக்கு கூறப்படும் காலக்கெடுக்கள் போலவே மீள்குடியமர்வு நிறைவடைவதற்கும் ஒவ்வொரு கால எல்லை கூறப்பட்டது.

அண்மையில்கூட ஜுன் மாதத்துக்குள் மீள்குடியமர்வு நிறைவடையும் என்று கூறப்பட்டது. அதுவும் சாத்தியமாகும் அறிகுறிகள் இல்லை.

எப்படியோ இந்த ஆண்டு இறுதிக்குள் வடக்கில் தேர்தலை நடத்தும் உத்தேசம் அரசுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. அரசாங்கத்தின் இப்போதைய கவனம் எல்லாம் கிழக்கு உள்ளிட்ட மூன்று மாகாண சபைகளுக்கான தேர்லில் தான் உள்ளது. இவை எதுவுமே குறைந்த பட்ச பதவிக்காலதைக்கூட பூர்த்தி செய்யவில்லை.

அதற்குள் அங்கு தேர்தலை நடத்த அரசாங்கம் அவசரப்படுகிறது. ஆனால், வடக்கிலோ நிலைமை வேறு.

அங்கு மக்களின் கைகளில் அதிகாரத்தைக் கொடுக்க அரசாங்கம் தயாராக இல்லை.

இதனால்தான் தேர்தலை நடத்தாமல் இழுத்தடித்து வருகிறது. எவ்வாறாயினும் அரசாங்கத்தினால் இன்னும்

## ஜூன் மாதத்திற்குள் மீள்குடியேற்றம் முடிவடையுமாம்...

போர் முடிவுக்கு வந்ததும், சர்வதேச சமூகம் வலியுறுத்திய முக்கியமான விடயங்களில் ஒன்று வடக்கு மாகாணசபைத் தேர்தல்.

வடக்கில் தேர்தலை நடத்தி மக்களின் கைகளில் அதிகாரத்தைக் கொடுத்தால்தான் ஜனநாயகத்தை உறுதி செய்ய முடியும்; மக்களின் நம்பிக்கையைப் பெறமுடியும் என்று சர்வதேச சமூகம் பலமுறை வலியுறுத்திவிட்டது. அண்மையில் வாசிங்டன் சென்றிருந்த வெளிவிவகாரமைச்சர் ஜி.எல். பீரிஸிடம் அமெரிக்க இரா ஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்டனும் இதையே வலியுறுத்தியிருந்தார்.

வன்னியில் இறுதிப்போரில் இடம் பெயர்ந்தவர்களை மட்டும்தான் அரசாங்கம் இடம்பெயர்ந்தவர்களாக கணக்கிட்டுள்ளது.

இந்த வகையில் தற்போது மீளக் குடியேற்றப்பட வேண்டியவர்கள் வெறும் 6022 பேர்தான் என்று ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கடந்தவாரம் அரசாங்கம் கூறியுள்ளது. இவர்களை மீளக்குடியேற்றிய பின்னர்தான் தேர்தல் என்று அரசாங்கம் கூறுகிறது.

ஆனால் வடக்கு மாகாணசபைத் தேர்தலுக்குத்தான் இந்த நிபந்தனை. ஜனாதிபதித் தேர்தலுக்கோ, நாடாளு

நீண்டகாலத்துக்கு வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை நடத்தாமல் இழுத்தடிக்கமுடியாது என்றே தோன்றுகிறது.

ஏனென்றால், இப்போது மீள்குடியமர்வு பற்றிய அழுத்தங்களைக் குறைத்துக் கொண்டுள்ள சர்வதேச சமூகம் வடக்கு மாகாணசபைத் தேர்தலைக் கையில் எடுக்கத் தொடங்கியுள்ளது.

அதைவிட போர் முடிந்த சூழலில் முழுமையான ஜனநாயகம் உறுதி செய்யப்படுவதையே வெளிநாடுகள் எதிர்பார்க்கின்றன. வடக்கு தற்போது அரசின் நேரடி நிர்வாகத்தில் இருப்ப

தாகவே பார்க்கப்படுகிறது.

இது வடக்கில் பெரும்பான்மையினராக உள்ள தமிழர்களை வெறுப்பேற்றும் என்பதை வெளிநாடுகள் உணர்ந்துள்ளன.

ஆனால், அதை அரசாங்கம் உணர்ந்துள்ளதாகத் தெரியவில்லை.

தனிநாடு கோரிய மக்களை மீண்டும் முழுமையான ஜனநாயக வழிக்குக் கொண்டு வரவேண்டும் என்றால்- அவர்கள் ஜனநாயகம் மீது நம்பிக்கை கொள்ளவேண்டும் என்றால், அதற்கு மாற்றான ஒன்றை அவர்களிடம் வழங்க வேண்டும் இதுதான் மேற்குலகின் கருத்தாக உள்ளது. தேர்தல் மூலம் தமக்கான அதிகாரக் கட்டமைப்பு ஒன்றை அவர்கள் பெறும்போது அது ஜனநாயகத்தை வலுப்படுத்தும் என்று இந்த நாடுகள் கருதுகின்றன. இந்தக் கருத்தில் நியாயம் அதிகம் உள்ளது.

இந்த நிலை உருவாக்கப்படாத வரை வடக்கில் உள்ள தமிழர்களால் முழுமையான இயல்புநிலைக்குள் வரமுடியாது. இதையே வெளிநாடுகள் சுட்டிக்காட்டி தேர்தலை நடத்த அழுத்தம் கொடுக்கின்றன.

அதேவேளை வடக்கில் தேர்தலை நடத்தினால், அதிகாரம் தமிழத்தலைவர்களிடம் சென்றுவிடுமே என்று அரசாங்கம் அச்சம் கொண்டுள்ளதாகவே தெரிகிறது.

அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டால், இப்போது வடக்கில் அரசாங்கம் தான் விரும்பியவாறு செய்வதுபோல செய்ய முடியாது என்று கருதுகிறது. வடக்கில் தேர்தலை நடத்தி ஒரு ஆட்சி நிறுவப்பட்ட பின்னர், அரசினால் தன்னிச்சையாக செயற்பட முடியாது.

அதற்கு மாகாண அரசாங்கம் இடமளிக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. இதுவும் கூட அரசுக்கு உள்ள ஒரு பிரச்சினையாகவே தெரிகிறது.

இதனால்தான் அரசாங்கம் தேர்தலைத் தள்ளிப்போட்டு வருகிறதே தவிர, இடம் பெயர்ந்த மக்களின் வாக்களிப்பு அதற்கு ஒரு பிரச்சினையே இல்லை.

அரசாங்கம் எந்தக் காரணத்தைக் கூறித் தட்டிக் கழிக்கப் பார்த்தாலும், சர்வதேச சமூகத்தினால், இதன் பின்னால் உள்ள சூட்சுமத்தைப் புரிந்து கொள்வது ஒன்றும் அவ்வளவு கடினமானதாக இருக்காது.

அதனால்தான் இப்போது வடக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்தும் படி அரசாங்கத்தின் மீது அழுத்தங்கள் அதிகரித்து வருகின்றன. சர்வதேச அழுத்தங்களை அரசு எப்போதும் வெறுப்புடனேயே நோக்குவது வழக்கம்.

ஆனால், இந்த விடயத்தில் சர்வதேச அழுத்தங்களுக்கு அடிபணிய முடியாது என்று படிவாதம்

கே. சஞ்சயன்

பிடிக்க முனைந்தால், அது சர்வதேச சமூகத்தின் கோபத்தை சம்பாதிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறதோ இல்லையோ ஜனநாயகக் கட்டமைப்பின் மீது தமிழர்கள் நம்பிக்கை யிழந்து போவதற்கு வழிவகுத்து விடும்.

# இலங்கையில் சட்டவிரோத சிசுக்கொலைகள் அதிகரிப்பு

## அரசசார்பற்ற நிறுவனங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்

(கொழும்பு)

இலங்கையில் சிசுக்கொலை மற்றும் கைவிடப்படும் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

வவுனியா ,ஓமந்தை மற்றும் கொழும்பின் புறநகர் பகுதி ஆகிய இடங்களில் நேற்று முன்தினம் இரண்டு குழந்தைகளை கொலை செய்ய முற்பட்ட வேளையில் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இதற்கிடையில் நேற்று முன்தினம் இரத்தம் தோய்ந்த உடலுடன் ஹோமாகம வைத்தியசாலையில் ஒருவர் அனுமதிக்கப்பட்டுள்ளார். சந்தேகம் கொண்ட வைத்தியசாலை தரப்பினர் பொலிஸாருக்கு அறிவித்ததை தொடர்ந்து அவரது இல்லத்தில் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது மரத்தில் செய்யப்பட்ட பெட்டகம் ஒன்றில் இருந்த இறந்த நிலையில் குழந்தை ஒன்று மீட்கப்பட்டுள்ளது. இவ்வாறான பல சம்பவங்கள் தற்போது நடைபெற்று வருவதாகவும் இதற்கு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தெளிவூட்டல் மற்றும் உதவி பணிகள் மூலம் இதனை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (அ-2)

# விபத்துக்குள்ளான படகில் இலங்கையர்கள் இல்லை

## த அவுஸ்திரேலியன் இணையத்தளம் தகவல்

அவுஸ்திரேலிய கடற்பரப்பில் நேற்று முன்தினம் மூழ்கிய கப்பலில் பயணித்த 90 பேர் பலியானதாக தெரிவிக்கப்படுகின்றது.

பலியானவர்களில் இலங்கையர்கள் யாரும் இருக்கவில்லை என த 'அவுஸ்திரேலியன் இணையத்தளம் செய்தியை வெளியிட்டுள்ளது.

சம்பவத்தில் பலியான அனைவரும் இந்தோனேசியாவைச் சேர்ந்தவர்கள் என உறுதி செய்யப்பட்டுள்ளது.

படகு மூழ்கியதை தொடர்ந்து அவுஸ்திரேலிய மற்றும் இந்தோனேசிய கடற்படையினர் மீட்புப் பணிகளை மேற்கொண்டனர். இதில் 110 பேர் உயிருடன் மீட்கப்பட்டு கிறிஸ்மஸ் தீவுக்கு அழைத்து வரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஏனைய 90 பேரும் பலியானதுடன் அவர்கள் அனைவரும் இந்தோனேசியாவைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)



தமிழ் அரசியல் கைதிகள் மற்றும் மக்கள் போராட்ட இயக்க உறுப்பினர்களான லலித், குகன் ஆகியோரின் விடுதலைக்காக முன்னிலை சோஷலிச கட்சியினர் நேற்று முன்தினம் கொழும்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதை படத்தில் காணலாம்.

# இந்தியாவுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களை நீக்க இலங்கை முடிவு

## மத்திய அரசே காரணம் என்கிறார் கருணாநிதி

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மத்திய அரசு இனியும் அலட்சியமாக இருக்கக் கூடாது என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு, இந்திய அரசை சமீபகாலமாக இலங்கை அரசு அலட்சியப்படுத்துகிறது என்று செய்தி வந்துள்ளது.

இந்தியாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை இரத்துச் செய்யவும் கொடுத்த வாக்குறுதிகளை மீறவும் இலங்கை அரசு தயாராகி வருவதுடன் சீனாவுடன் நெருக்கமாக இருப்பதாகவும் செய்தி வெளியாகியுள்ளது.

திருகோணமலையில் சம்பூர் என்ற இடத்தில் இந்தியா நிறுவிவரும் மின் உற்பத்தி நிலையம் போன்றவற்றைச் சீர்குலைக்கும் வகையிலேயே இலங்கை அரசின் நடவடிக்கைள் இருந்து வருகின்றன.

போர் படிப்பினை, நல்லிணக்கக் குழு அளித்த அறிக்கைகளை அமுல்செய்வது தொடர்பான தகவல்களைக்கூட அமெரிக்க அரசுக்குத்தான் இலங்கை தெரிவித்துள்ளது. இந்தியாவுக்கு அது தொடர்பாக எதுவும் தெரிவிக்கவில்லை.

இந்தச் செய்திகளை அரசின் கவனத்துக்குக் கொண்டு வருவதோடு இதற்குப் பின்னரும் அலட்சியமாக இல்லாமல் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்திய அரசு அதிகளவு அக்கறை காட்டிடவேண்டும் என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-2)

# மருத்துவ காப்புறுதி திட்டமொன்றை ஆரம்பிக்க சட்டமூலம் தயாரிப்பு

(கொழும்பு)

ஓய்வூதியம் பெறும் சகல அரசாங்க ஊழியர்களுக்கும் ஓய்வூதிய கொடுப்பனவுக்கு மேலதிகமாக சுகாதார மருத்துவ காப்புறுதித் திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கான சட்ட மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையின் அனுமதி கிடைத்ததும் இந்தத்திட்டம் துரிதமாக அமுல்படுத்தப்படும் என பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் பிரதி அமைச்சர் விஜய தஹநாயக்க தெரிவித்துள்ளார்.

வாய்மூல விடைக்கான தயாசிறி ஜயசேகர எம்.பி எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர் மேலும் கூறியதாவது,

2012 மே மாதம் வரையான விபரங்களின்படி 5 இலட்சத்து 4 ஆயிரத்து 637 பேர் ஓய்வூதியம் பெறுகின்றனர். இவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வருடாந்தம் 108 பில்லியன் ரூபா செலவிடப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக சுகாதார மருத்துவக் காப்புறுதி திட்டமொன்றை ஓய்வூதியம் பெறுவோருக்கு வழங்கவும் திட்டமிட்டுள்ளோம்.

இது குறித்து மஹிந்த சிந்தனையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.இதனை நடைமுறைப் படுத்துவதற்காக சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன்படி மாதாந்தம் 10 ஆயிரம் ரூபா வரையான காப்புறுதி வழங்கப்படும். அமைச்சரவை அனுமதி கிடைத்ததும் துரிதமாக அமுல்படுத்தப்படும். (அ-2)

# அரசியல் இலாபத்திற்காகவே நீதித்துறை இயங்கிவருகிறது

## பொன்சேகா குற்றச்சாட்டு

நாட்டில் அரசியல் இலாபங்களை ஈட்டும் நோக்கில் நீதி பயன்படுத்தப்படுகின்றது என முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் இலாபங்களை முதனிலைப் படுத்தி நாட்டின் நீதித்துறை இயங்கி வருகிறது.ஆயினும் நாம் போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை.

அரச அதிகார துஷ்பிரயோகம் நாட்டின் நீதித்துறையை வெகுவாகப் பாதித்துள்ளது. கட்டுவான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இதற்கான சிறந்த உதாரணமாகும்.

சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் வீடுகளுக்குச் சென்றிருந்ததாகவும் சம்பவம் இடம்பெற்று 3 நாட்கள் கடந்தும் பொலிஸார் நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை.

இவ்வாறே அரசாங்கம் நாட்டின் சட்டத்தையும் நீதியையும் நிலைநாட்ட முயற்சிக்கின்றது.

நாட்டின் சட்டம் ஒழுங்கையும் நீதியையும் நிலைநாட்டும் நீண்ட பயணத்தை ஆரம்பித்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# விளையாட்டு விழா

(நல்லூர்)

உரும்பிராய் கிழக்கு காந்திஜி சனசமூக நிலையத்தின் முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காந்திஜி சனசமூக நிலைய முன்பள்ளி மைதானத்தில் நிலையத்தலைவர் த.பேரின்பநாயகன் தலைமையில் நடைபெறவுள்ளதாக காந்திஜி சனசமூக நிலைய நிர்வாகம் அறிவித்துள்ளது. (அ-3-134)


# மரண அறிவித்தல்

## சிவனடியான் சுவாமிநாதன்



சுன்னாகம் தெற்கு, சுன்னாகத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் சாரதியும் வாகனத்தரகருமான சிவனடியான் - சுவாமிநாதன் என்பவர் கடந்த 18.06.2012 அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (24.06.2012) அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 1.00 மணியளவில் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
குடும்பத்தினர்.

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.
தொ.பே:- 0770690067
(8670)


# வாக்காளர் பதிவங்களை வழங்குவதில் கிராம சேவையாளர்கள் அசமந்தம்

(பூந்தோட்டம்)

வவுனியா பகுதியில் வாக்காளர் பதிவுகளை மீள்பதிவு செய்வதில் மக்கள் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக தோணிக்கல் கிராம சேவையாளர் பிரிவில் மீள் பதிவுக்கான விண்ணப்பங்கள் வாக்காளர்களுக்கு உரிய முறையில் விநியோகிக்கப்படாமையால் மீள் பதிவினை மேற்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இக்கிராம சேவையாளர் அலுவலகத்திற்கு பதில் கடமையாற்றும் கிராம சேவை அலுவலர் உரிய நேரத்திற்கு சமுகமளிக்காமையால் அரச உத்தியோகத்தர்கள் பல மணி நேரங்களாக காத்திருந்து ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்ற நிலை காணப்படுகின்றது.

ஏற்கனவே தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் விகிதாசாரம் குறைவடைந்துள்ள நிலையில் இவ்வாறான கிராமசேவை அலுவலர்களினது செயற்பாடுகளினால் தமிழ் வாக்காளர்களின் எண்ணிக்கை மேலும் குறைவடையும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-3-266)



# சிறுவர் அரங்கம்

139

## பானைக்குள் பொற்காசுகள்

### மரியாதைராமன் கதைகள்



ஓர் ஊரில் சுப்பன் என்பவன் மனைவியுடன் வாழ்ந்து வந்தான். குடும்பத்துடன் அவன் காசிக்குப் புனிதப் பயணம் செல்ல நினைத்தான்.

அவனிடம் நூறு பொற்காசுகள் இருந்தன. மனைவியுடன் காசிக்குச் செல்கிறோம். பொற்காசுகளை எடுத்துச் சென்றால் திருடர்கள் பறித்து கொள்வார்களே என்ன செய்வது என்று சிந்தித்தான்.

நல்ல வழி ஒன்று அவனுக்குத் தோன்றியது.

பானை ஒன்றை எடுத்தான். அதற்குள் நூறு பொற்காசுகளை வைத்தான். அந்தப் பானை நிறைய துவரம் பருப்பைக் கொட்டினான். பானையின் வாயில் துணியை வைத்து நன்றாகக் கட்டினான்.

அந்தப் பானையுடன் முனியன் வீட்டை அடைந்தான்.

நண்பா! நான் குடும்பத்துடன் காசி செல்கிறேன். திரும்பிவரச் சில மாதங்கள் ஆகும். இந்தப் பானையில் துவரம் பருப்பு உள்ளது. திரும்பி வந்ததும் வாங்கிக் கொள்கிறேன்! என்றான்.

பானையை வாங்கிக் கொண்டான் முனியன்.

சில நாட்கள் சென்றன. விருந்தினர்கள் சிலர் முனியனின் வீட்டிற்கு வந்தார்கள்.

மனைவியைப் பார்த்து முனியன், இரவு நேரமாக உள்ளதே. இவர்களுக்கு என்ன சமைக்கப் போகிறாய்? என்று கேட்டான்.

சோறு சமைக்க வீட்டில் அரிசி இருக்கிறது. காய்கறிகளும் உள்ளன. குழம்பு வைக்கப் பருப்பு இல்லை. அது இருந்தால் சமையல் செய்து விடலாம். பருப்பிற்கு என்ன செய்வது? என்று கேட்டாள் அவள்.

சுப்பன் தந்த பானையின் நினைவு அவனுக்கு வந்தது.

அடியே! சுப்பனின் பானையில் பருப்பு உள்ளது. ஆபத்திற்குப் பாவம் இல்லை. அதை எடுத்து விருந்தினர்களைச் சமாளிப்போம். பொழுது விடிந்ததும் பருப்பு வாங்கி அதில் போட்டு விடுவோம் என்றான் அவன்.

அவர்கள் இருவரும் பொருட்கள் இருந்த அறைக்குள் நுழைந்தார்கள். பானையின் வாயைக் கட்டியிருந்த துணியை அவிழ்த்துக் கொட்டினார்கள்.

அதிலிருந்து துவரம் பருப்புடன் பொற்காசுகளும் விழுந்தன. பொற்காசுகளைக் கண்ட இருவரும் வியப்பு அடைந்தார்கள்.

இந்தப் பொற்காசுகளை நாமே எடுத்துக் கொள்வோம். சுப்பனை எளிதில் ஏமாற்றி விடலாம் என்றான் அவன்.

அவளும் அதற்கு ஒப்புக் கொண்டாள்.

அவர்கள் இருவரும் அந்தப் பொற்காசுகளை வேறோர் இடத்தில் மறைத்து வைத்தார்கள்.

பின்னர் அந்தப் பருப்பில் தேவையானளவு எடுத்தார்கள். சமையல் செய்து விருந்தினர்களுக்குப் பரிமாறினார்கள்.

பொழுது விடிந்தது. கடையில் இருந்து துவரம் பருப்பு வாங்கி வந்தான் முனியன்.

சுப்பனின் பானை நிறையக் கொட்டினான். முன்பு இருந்தது போலவே துணியால் அதைக் கட்டினான்.

சில மாதங்கள் கழிந்தன. மனைவியுடன் சுப்பன் ஊர் திரும்பினான்.

முனியனின் வீட்டிற்கு வந்தான் அவன். நான் தந்த பானையைத் தா என்று கேட்டான்.

பானையைத் தந்தான் முனியன்.

வீட்டிற்கு வந்த சுப்பன் அந்தப் பானையைக் கவிழ்த்தான். உள்ளிருந்து பருப்புத்தான் விழுந்தது. பொற்காசுகள் விழவில்லை.

தன்னை முனியன் ஏமாற்றி விட்டான் என்பது அவனுக்குப் புரிந்தது.

கோபத்துடன் முனியனின் வீட்டிற்குச் சென்றான். பானைக்குள் நூறு பொற்காசுகள் வைத்திருந்தேன். நீ தான் எடுத்திருக்க வேண்டும் மரியாதையாகத் தந்து விடு! என்று கத்தினான்.

பானைக்குள் பருப்பு உள்ளதாகச் சொல்லித் தந்தாய். இப்பொழுது பொற்காசுகள் இருந்தாகச் சொல்கிறாய். நான் உன் பானையைத் தொடவே இல்லை. அப்படியே திருப்பித் தந்து விட்டேன்! என்றான் முனியன்.

அந்தப் பொற்காசுகளை நம்பித்தான் என் குடும்பமே உள்ளது. இல்லையேல் நாங்கள் பட்டினி கிடக்க வேண்டும் பொற்காசுகளைக் கொடுத்துவிடு என்று கெஞ்சினான் அவன்.

உதவி செய்ததற்குத் திருடன் பட்டமா கட்டுகிறாய்? நண்பன் என்பதற்காக இது வரை பொறுமையுடன் இருந்தேன். இனி இப்படிப் பேசிக் கொண்டு இங்கு வராதே! என்று கோபத்துடன் கத்தினான் முனியன்.

நீதிபதி மரியாதைராமனிடம் சென்றான் சுப்பன். நடந்ததை எல்லாம் சொன்னான்.

முனியனையும் அவன் மனைவியையும் நீதிமன்றத்திற்கு வரவழைத்தார் நீதிபதி.

பொற்காசுகளை ஏமாற்றி விட்டதாகச் சுப்பன் வழக்குத் தொடுத்துள்ளார். நீங்கள் என்ன விளக்கம் சொல்கிறீர்கள்? என்று கேட்டார்.

நீதிபதி அவர்களே! சுப்பன் என் வீட்டிற்கு ஒரு பானையுடன் வந்தான். நானும் என் மனைவியும் காசிக்குச் செல்கிறோம். திரும்பி வந்ததும் பானையை வாங்கிக் கொள்கிறோம். இதற்குள் துவரம் பருப்பு உள்ளது என்று தந்தான்.

நானும் என் மனைவியும் அந்தப் பானையைப் பாதுகாப்பாக வைத்திருந்தோம். திரும்ப வந்து கேட்டான். பானையைத் தந்து விட்டோம். அதற்குள் என்ன இருந்தது என்றே எங்களுக்குத் தெரியாது.

மீண்டும் என் வீட்டிற்கு வந்தான். பானைக்குள் பொற்காசுகளை வைத்திருந்தேன். நீ திருடி விட்டாய். திருப்பித் தந்து விடு! என்று கூச்சல் போட்டான்.

எனக்கு எதுவும் தெரியாது என்றேன். இங்கு வந்து வழக்குத் தொடுத்து உள்ளான் என்றான் முனியன்.

உண்மையை எப்படிக் கண்டு பிடிப்பது? என்று சிந்தித்தார் நீதிபதி.

நல்ல வழி ஒன்று அவருக்குத் தோன்றியது.

முனியனையும் அவன் மனைவியையும் பார்த்தார் அவர்.

நீங்கள் இருவரும் நாளை இங்கு வர வேண்டும். நீதி மன்றத்திற்கு வெளியே பெரிய கூண்டு வைக்கப்பட்டு இருக்கும். நீங்கள் அதைத் தூக்கிக் கொண்டு செல்ல



வேண்டும். கோயில் வாயிலில் அதை இறக்கி வைக்க வேண்டும்.

பின்னர் கோயிலுக்குள் செல்ல வேண்டும். பொற்காசுகளைத் திருடவில்லை என்று சத்தியம் செய்ய வேண்டும்! என்றார்.

அப்படியே செய்கிறோம்! என்று இருவரும் அங்கிருந்து புறப்பட்டார்கள்.

சுப்பனைப் பார்த்து நீதிபதி, நாளை இவர்கள் சென்ற பின்னர் இங்கு வா! என்றார்.

மறுநாள் பொழுது விடிந்தது. நீதி மன்றத்தின் முன் பெரிய கூண்டு வந்து இறங்கியது.

வீரன் ஒருவனை அழைத்தார் நீதிபதி. நீ இந்தக் கூண்டில் மறைந்து கொள். நீ இருப்பது யாருக்கும் தெரியக்கூடாது. என்றார்.

அவனும் அந்தக் கூண்டில் நன்றாக மறைந்து கொண்டான்.

சிறிது நேரத்தில் முனியனும் அவன் மனைவியும் அங்கு வந்தார்கள். இருவரும் அந்தக் கூண்டைத் தூக்கினார்கள். கடினப்பட்டு அதைத் தூக்கிக் கொண்டு நடந்தார்கள்.

அவர்களால் கூண்டைத் தூக்கிக் கொண்டு நடக்க முடியவில்லை. சிறிது தொலைவில் அதை இறக்கி வைத்தார்கள்.

நாலா பக்கமும் பார்த்தர்கள். யாரும் இல்லை என்று நினைத்தார்கள்.

இந்தக் கூண்டைத் தூக்கவே முடியவில்லையே. மிகுந்த எடையாக உள்ளது. கோயில் வரை இதை எப்படித் தூக்கிச்செல்வது? என்னால் முடியாது! வலி தாங்கமுடியவில்லை! என்றாள் மனைவி.

இன்னும் சிறிது தொலைவு தான் உள்ளது. எப்படியாவது துன்பப்பட்டுத் தூக்கிச் செல்வோம். நூறு பொற்காசுகள் எளிதில் கிடைக்குமா? என்றான் முனியன்.

நூறு பொற்காசுகளுக்காக இப்படித் துன்பப்படுவதா? கோயிலில் பொய்ச் சத்தியம் செய்வதா? என்று மெல்லிய குரலில் கேட்டாள் அவள்.

எவ்வளவு காலம் உழைத்தாலும் நமக்கு நூறு பொற்காசுகள் கிடைக்காது. அதற்காக எதையும் செய்யலாம். இனி ஏதும் பேசாதே. பொற்காசுகள் நம்மிடம் உள்ளதை அறிந்து கொள்ளப்போகிறார்கள்! என்று முணுமுணுத்தான் அவன்.

கூண்டில் இருந்தவன் அவர்கள் பேசியதை எல்லாம் கேட்டான். அவர்கள் கண் எதிரிலேயே கூண்டை விட்டு வெளியே வந்தான். அங்கிருந்து சென்றான்.

நீதிபதியிடம் வந்த அவன் அவர்கள் பேசியதைச் சொன்னான்.

அவர்கள் இருவரும் நடுங்கியபடியே நீதிமன்றத்திற்குள் நுழைந்தார்கள்.

நீதிபதி அவர்களே! எங்களை மன்னியுங்கள். பொற்காசுகள் மீது கொண்ட ஆசையால் தவறு செய்து விட்டோம். இனி இப்படி நடந்து கொள்ள மாட்டோம்! என்று கெஞ்சினார்கள்.

சுப்பனிடம் ஏமாற்றிய பொற்காசுகளை அவரிடம் திருப்பித் தர வேண்டும். நீதிமன்றத்தில் பொய் சொன்னீர்கள். அதற்காக ஐம்பது பொற்காசுகள் அபராதம் செலுத்த வேண்டும்! என்று தீர்ப்பு வழங்கினார் மரியாதைராமன்.

மோசம் செய்ய நினைத்தோம். நமக்கே மோசம் வந்தது என்று முனியனும் அவன் மனைவியும் வருந்தினார்கள்.

தலை கவிழ்ந்தபடி அங்கிருந்து சென்றார்கள்.

நீதிபதி அவர்களே! நல்ல தீர்ப்பு வழங்கினீர்கள் நன்றி! என்ற சுப்பன் மகிழ்ச்சியுடன் புறப்பட்டான்.

# தமிழக மீனவர்கள் மீது சர்வதேச சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்

## ஐக்கிய நாடுகள் சபை மாநாட்டில் ஜனாதிபதி உரை



பிரேசில் நாட்டின் ரியோடி ஜெனிரோ நகரில் நடைபெறும் தொடர் வளர்ச்சிக்கான இயற்கை ஆதாரங்களைப் பாதுகாப்பதற்கான ஐக்கிய நாடுகள் சபை மாநாட்டில் கடந்த புதன்கிழமை உரையாற்றுகையிலேயே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

**தமிழக மீனவர்கள் வேண்டுமென்றே இலங்கையின் கடற்பரப்புக்கு வருவதையும் சிறிய மீன் குஞ்சுகளையும் பிடிக்க உதவும் இழுவை மடிவலைகளைப் பயன்படுத்தி மீனினத்தையும் அரிய கடல் செல்வங்களையும் கொள்ளையிடுவதாகவும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அபாண்டமாக குற்றம்சாட்டியுள்ளார்.**

அவர் மேலும் கூறுகையில்,

இந்தியாவின் பெயரையோ தமிழ் நாட்டின் பெயரையோ அவர் நேரடியாக கூறவில்லை என்றாலும் இலங்கைக்கு அருகில் வடக்கில் உள்ள பக்கத்து நாட்டை சேர்ந்த மீனவர்கள் என்று அடையாளப்படுத்திய ஜனாதிபதி பிரச்சினைக்குரிய பகுதி பாக்கு நீரினை என்றும் சுட்டினார்.

20 ஆண்டுகள் சிறையில் தள்ள புதிய சதி! இப்படிச் செய்கின்றவர்கள் மீது சர்வதேச கடல் சட்டப்படி நடவடிக்கை எடுக்க அனுமதி கோரும் வகையிலும் பேசியுள்ளார்.

அதாவது இலங்கைக் கடற்பரப்பில் மீன் பிடிப்பதற்காகத் தமிழக மீனவர்களைக் கைது செய்தாலே இனி இந்தச் சட்டப்படி அவர்களைத் தொடர்ந்து 20 ஆண்டுகளுக்குச் சிறையில் அடைக்க முடிபு செய்துள்ளனர் என்பதை அவருடைய இந்தப் பேச்சு உணர்த்துகின்றது.

இனி மீனவர்களைக் கைது செய்தால் 20 ஆண்டுகள் வரை அவர்களைச் சிறையில் தள்ள இப்போதே சர்வதேசமாநாட்டின் கவனத்தை ஈர்த்திருக்கிறார் மஹிந்த ராஜபக்ஷ என்று சர்வதேச நோக்கர்கள் கருதுகின்றனர். (அ-2)

## பகிடிவதை புரிந்தவர்கள் பொலிஸாரால் கைது

(கரவெட்டி)

நெல்லியடிச் சந்தியில் நேற்றுமுன் தினம் மாலை தனியார் கல்வி நிலையத்திற்குச் சென்ற மாணவிகளை பகிடிவதை செய்ததாக 3 இளைஞர்களை நெல்லியடி பொலிஸார் கைது செய்தனர்.

நெல்லியடிச் சந்தியில் நின்று மாலை வேளைகளில் தனியார் கல்வி நிலையத்திற்குச் செல்லும் மாணவிகளை பகிடிவதை செய்வதாக நெல்லியடி பொலிஸாருக்கு தகவல் கிடைத்ததையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் குறித்த 3 இளைஞர்களையும் கைது செய்து பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்று விசாரணைக்கு உட்படுத்தியதாகவும் பின் விடுவித்துள்ளதாகவும் தெரிய வருகிறது. (அ-3-24)

## செனவிரத்ன ஒரு மில்லியன் சீரப் பிணையில் விடுவிப்பு

சிரேஷ்ட அமைச்சர் அதாவுத செனவிரத்னவையும் அவரது இரண்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்களையும் தலா ஒரு மில்லியன் ரூபா சரீரப்பிணையில் விடுவிக்குமாறு துர்ஹிரிய நீதிமன்றம் நேற்றைய தினம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

தனியார் குடிநீர் உற்பத்தி நிலையம் ஒன்றின் சொத்துகளுக்கு சேதம் விளைவித்ததாக கூறப்படும் சம்பவம் தொடர்பாகவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வறக்காப்பொல கொஹாம்ப தெனிய பிரதேசத்தில் இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைக்காக நேற்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு சிரேஷ்ட அமைச்சர் அதாவுத செனவிரத்தினவுக்கும் அவரது இரண்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும் நீதிமன்றம் அறிவித்தல் விடுத்திருந்தது.

இதற்கமைய அவர்கள் நேற்று நீதிமன்றத்தில் ஆஜரானதாக பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜரான சட்டத்தரணி அமல் ரண்தெனிய தெரிவித்துள்ளார்.

ஞாயிறுதோறும் வறக்காப்பொல பொலிஸ் நிலையத்தில் ஆஜராக வேண்டும் எனவும் துல்ஹிரிய நீதிவான் சந்தேக நபர்களுக்கு உத்தரவிட்டுளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக இதுவரை 21 சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளதாக சட்டத்தரணி அமல் ரண்தெனிய குறிப்பிட்டுள்ளார்.

சந்தேக நபர்கள் அனைவரும் அடுத்த மாதம் 30 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத்தவிர பாதிக்கப்பட்ட தரப்பினர் உயிர்ச்சேதங்களையோ பொருட்களையோ ஏற்படுத்தக்கூடாது என சந்தேக நபர்களை அறிவுறுத்திய நீதவான் பிரதேசத்தின் சட்டத்தையும் அமைதியையும் பாதுகாக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (அ-2)

## பல்கலை. பேராசிரியர் சம்மேளனத்தின் தலைவருக்கு வெள்ளைவான் அச்சுறுத்தல்

(கொழும்பு)

இலங்கைப் பல்கலைக்கழக பேராசிரியர்கள் சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி நிர்மல் ரஞ்சித் தேவசிறியின் வீட்டுக்கு முன்னால் கடந்த சில நாட்களில் வெள்ளைவான் நிறுத்தப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சில் இருந்து வருவதாகத் தம்மை அடையாளப்படுத்திக்கொண்டு வெள்ளை வானில் வந்த சிலர் நிர்மல் ரஞ்சித்தின் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் வசிப்பவரிடம் சென்று அவரிடம் குறித்த விடயங்களைச் சேகரித்துள்ளனர்.

அதில் ஒருவர் நிர்மல் ரஞ்சித்தின் கார் இலக்கத்தைப் பார்ப்பதற்காகப் பாதுகாப்பு சுவற்றின் வழியாக குதிக்க அனுமதி கேட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில் அண்மையில் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவுடன் பல்கலைக்கழக பேராசிரியர்கள் சம்மேளனம் பேச்சுவார்த்தை நடத்தியபோது நிர்மல் ரஞ்சித்தால் மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டது.

எனினும் அவ்வாறான குழுவைத்தாம் அனுப்பவில்லை என எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்துள்ளார். பல்கலைக்கழக பேராசிரியர்கள் தொடர்ந்தும் அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (அ-2)

## மணிவாசகர் குருபூசை

யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய இந்து மாணவர் மன்றத்தின் ஏற்பாட்டில் மாணிக்கவாசகர் குருபூசைத் தினம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு வித்தியாலய பிரார்த்தனை மண்டபத்தில் சு. அஜிந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பேச்சு, கவிதை, பக்திப் பாடல்கள் என்பன நடைபெறவுள்ளதாக வித்தியாலய அதிபர் திருமதி யூ.யோகநாதன் அறிவித்துள்ளார்.

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கம் நடத்தும் மாணிக்கவாசகர் குருபூசைத் தினம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஏ.வி.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சிறப்புரையை வலிகாம வலய ஆசிரிய ஆலோசகர் சைவப்புலவர் கந்தசத்தியதாசன் ஆற்றவுள்ளார் என இந்து சமய விருத்திச் சங்கம் அறிவித்துள்ளது. (அ-9)

## வெளியிணைப்பு இயந்திரம் திருட்டு

வடமராட்சி கிழக்கின் வெற்றிலைக்கேணி கடற்தொழிலாளர் சங்கத்தின் எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் இரண்டு படகுகளுக்கான வெளிஇணைப்பு இயந்திரம் நேற்று முன்தினம் களவாடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவது,

இவ்விரு இயந்திரங்களும் மேற்குறித்த கிராமத்தில் உள்ள இரு ஆலயங்களில் திருவிழாக்கள் இடம்பெற்றுக் கொண்டிருப்பதால் இயந்திரங்களை வீட்டில் வைத்து விட்டு உரிமையாளர்கள் கோவிலுக்குச் சென்ற போது அதனைச் சாதகமாகப் பயன்படுத்தி திருடர்கள் தமது கைவரிசையை காட்டியுள்ளனர். (அ-3-64)

## வவுனியா பொது வைத்தியசாலையில் நேற்று அடையாள வேலை நிறுத்தம்



(பூந்தோட்டம்)

வவுனியா பொது வைத்தியசாலையின் வைத்தியர்கள் மற்றும் அங்கு பணிபுரியும் அனைத்து உத்தியோகத்தர்களும் நேற்று காலை 10.30 மணி முதல் 1.30 மணிவரை அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுமுன்தினம் வெளிநோயாளர் பிரிவில் வைத்து வைத்தியர் ஒருவர் தாக்கப்பட்டதை கண்டித்தே இவ்வடையாள வேலை நிறுத்தம் இடம்பெற்றது.இச்சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் வவுனியா வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவிற்கு மின்சாரம் தாக்கப்பட்டு ஒருவர் கொண்டு வரப்பட்ட நிலையில் அவரை பரிசோதித்த வைத்தியர் அவர் இறந்துள்ளதாக தெரிவித்துள்ளார். எனினும் அவருடன் வருகை தந்த உறவினர் ஒருவர் அதனை ஏற்றுக்கொள்ளாத நிலையில் வைத்தியரின் தலையில் அங்கிருந்த வெளிச்சம் பரப்பியால் (டோச் லைட்) அடித்துள்ளார்.

இதன் காரணமாக காயமடைந்த வைத்தியர் சிகிச்சை பெற்று வரும் நிலையில் வைத்தியரை தாக்கியவரை பொலிஸார் கைது செய்தனர்.

வைத்தியர்கள் தமது கடமையை சரிவர செய்யும் நிலையில் பொதுமக்கள் இடையூறு விளைவித்தல் கூடாது எனவும் மக்களின் மீது கரிசனையுடன் கடமையாற்றும் வைத்தியர்களை தாக்குவதை கண்டித்தும் இனி வரும் காலங்களில் இவ்வாறான நிகழ்வுகள் இடம்பெறுவதை தடுப்பதற்குமாகவே இவ் வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட்டதாக வைத்தியர்கள் சங்கத்தின் வவுனியா கிளை செயலாளர் எம்.எம். எம்.அனாஸ் தெரிவித்தார்.

இதேவேளை அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட வைத்தியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுடன் வவுனியா பொலிஸ் பரிசோதகர் ஐ.பி. ரணதுங்க கலந்துரையாடியதுடன் தாம் சம்பவம் தொடர்பில் எடுத்துள்ள நடவடிக்கைகளையும் எடுத்துரைத்தார்.

வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-9-266)

## பராகுவே ஜனாதிபதிக்கெதிராக கண்டன தீர்மானம் நிறைவேற்றம்

(அஸ்காயூின்)

பராகுவே நாட்டில் நிலம் கையகப்படுத்துவதில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களால் அந்நாட்டு ஜனாதிபதி மீது பாராளுமன்றில் கண்டன தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதனால் அவர் பதவி விலகவுள்ளார். லத்தீன் அமெரிக்க நாடான பராகுவே நாட்டின் ஜனாதிபதியாக பெர்னாண்டஸ்லுகோ உள்ளார்.

கானின்டியூ மாகாணத்தில் கடந்த வெள்ளியன்று நிலம் கையகப்படுத்த அரசு முயன்றது. இதற்கு விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்ததால் பொலிஸாருக்கும் விவசாயிகளுக்குமிடையே மோதல் ஏற்பட்டதில் 7 பொலிஸார், 9 விவசாயிகள் உயிரிழந்தனர்.

உண்மையைக் கண்டறியும் கமிஷன் நடத்திய விசாரணையில் தொழில் அதிபருக்கு சாதகமாக ஜனாதிபதி செயற்பட்டதாக புகார் கூறப்பட்டது. இந்த சம்பவம் தொடர்பாக அந்நாட்டு பாராளுமன்ற கீழ் சபையில் கண்டன தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

இதனால் ஜனாதிபதி பெர்னாண்டஸ் பதவி விலகலாம் என தகவல்கள் கூறுகின்றன. என் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால் பதவி வில்க தயாராக உள்ளேன் என அவர் கூறியுள்ளார். இவரின் பதவிக்காலம் எதிர்வரும் 2013 இல் நிறைவடைகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)



அசாம் மாநிலம் கவுகாத்தியில் பெய்து வரும் கனமழையால் வீதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

## சகாபுதீன் மீது மருந்து ஊழல் குற்றச்சாட்டு; பிடியாணை பிறப்பித்தது நீதிமன்றம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் புதிய பிரதமர் பதவிக்கு பரிந்துரை செய்யப்பட்ட மக்தூம் சகாபுதீனுக்கு மருந்து ஊழல் தொடர்பாக கைது பிடியாணை நீதி மன்றத்தினால் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து அவர் பிரதமர் பதவிக்கான தேர்விலிருந்து விலக்கப்பட்டுள்ளார். இவருக்கு பதில் மின்துறை அமைச்சர் ராஜா பெர்வேஸ் அஷ்ரப் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் பிரதமராக இருந்த யூசுப் ரசா கிலானி தகுதி நீக்கம் செய்யப்பட்டதையடுத்து பாகிஸ்தான் மக்கள் கட்சியின் உயர்மட்டக் கூட்டத்தில் ஜவுளித்துறை அமைச்சர் மக்தூம் சகாபுதீனை புதிய பிரதமராக்க தீர்மானிக்கப்பட்டது.

இந்த கட்சியின் துணைத் தலைவர் என்ற முறையில் சர்தாரி சகாபுதீனை பிரதமராக்க முன்மொழிந்தார். இதையடுத்து பாராளுமன்றத்தின் கீழ் சபையில் சகாபுதீன் நேற்று முன்தினம் வேட்பு மனு தாக்கல் செய்திருந்தார். இவருக்கு மாற்றாக ராஜா பர்வேஸ் அஷ்ரப், பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவர்களில் ஒருவரான கமர் சமான் கைரா ஆகியோரும் வேட்பு மனு தாக்கல் செய்திருந்தனர்.

கைது பிடியாணை சபாபுதீன் சுகாதார அமைச்சராக இருந்த போது எபிட்ரின் என்ற போதை மருந்து நிர்ணயிக்கப்பட்ட அளவைத் தாண்டி இரண்டு மருந்து நிறுவனங்களுக்காக அதிக அளவில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.



இந்த வகையில் 700 கோடி ரூபாய் அளவுக்கு ஊழல் நடந் துள்ளதாக பாகிஸ்தான் போதை தடுப்பு வாரியம் நீதிமன்றில் வழக்கு பதிவு செய்தது. இந்த ஊழலில் முன்னாள் பிரதமர் யூசுப் ரசா கிலானி மகன் அலி மூசாவும் சம்பந்தப்பட்டுள்ளார்.

எனவே, சகாபுதீனையும் அலி மூசாவையும் கைது செய்யும் படி அஅராவல் பிண்டியில் உள்ள போதை தடுப்பு நீதிமன்றம் நேற்று முன்தினம் கைது பிடியாணை பிறப்பித்துள்ளது. ஒரு வாரத்தில் இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த உத்தரவிடப்பட்டது.

இது தொடர்பாக சகாபுதீனிடம் நிருபர்கள் கேட்டபோது பாகிஸ்தான் அரசியலில் வழக்குகள் கைது பிடியாணை எல்லாம் சகஜம். புயல் காற்று நம்மை உயர பறக்கத்தான் வழி செய்யும் என உருது கவிதையை மேற்கோள் காட்டினார்.

பிரதமராக நியமிக்கப்படுவதற்கு முன்னதாகவே சகாபுதீனுக்கு கைது பிடியாணை பிறப்பிக்கப்பட்டதால் அவர் பிரதமர் பதவிக்கான தேர்விலிருந்து விலக்கப்பட்டுள்ளார். இதையடுத்து மின்துறை அமைச்சராக உள்ள ரா[illegible] பர்வேஸ் அஷ்ரப் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற சிறப்புக் கூட்டத்தில் புதிய பிரதமர் தேர்வு செய்யப்படவுள்ளார். (அ-2)

## ராஜீவ் கொலையாளிகள் தண்டனை இரத்தானால் பிரணாப் முகர்ஜிக்கு ஆதரவு

### சீமான், அமீர் தெரிவிப்பு

(ராமநாதபுரம்)

ராஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை கைதிகளாக சிறையில் உள்ள முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய மூவரின் தூக்கு தண்டனையை இரத்துச் செய்வதாக உறுதி அளிக்கும் பட்சத்தில் தி.மு.கவும், திருமாவளவனவும் பிரணாப் ஜனாதிபதியாக ஆதரவு அளிக்கலாம் என திரைப்பட இயக்குநரும் நாம் தமிழர் இயக்கத் தலைவருமான சீமான் கூறியுள்ளார். ராமநாதபுரத்தில் நேற்றைய தினம் செய்தியாளர்களிடம் பேசிய போது திரைப்பட இயக்குநர்களான சீமான், அமீர் ஆகியோர் கூறியுள்ளார்கள். அவர்கள் மேலும் கூறுகையில்,



ஜனாதிபதி தேர்தலில் தி.மு.கவும், திருமாவளவனும் பழங்குடி இனத்தவரான சங்மாவுக்கு ஆதரவு தரவேண்டும். பிரணாப் முகர்ஜிக்கு ஆதரவு அளிப்பது தமிழர்களுக்கு இழைக்கும் துரோகம். அப்படி இல்லாவிடில் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரின் தூக்குத் தண் டனையை இரத்து செய்வேன் என்ற உறுதிமொழியின் பேரில் வேண்டுமானால் ஆதரவு அளிக்கட்டும். இதை அவர்கள் உறுதி செய்ய வேண்டும்.

இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படை பிடித்தால் அவர்களுக்கு 20 வருடங்கள் வரை சிறை அளிக்கும் வகையில் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பேசியிருக்கிறார். அப்படி இந்திய எல்லைக்கு வந்து கைதாகும் இலங்கை மீனவர்களையும் 20 வருடங்கள் சிறையில் அடைக்கும் படி நாங்கள் கூறினால், அது இந்திய இறையாண்மைக்கு எதிராக பேசியதாக வழக்கு போடுவார்கள் என்றனர்.

முன்னதாக, இராமேஸ்வரம் பொதுக்கூட்டத்தில் இந்திய இறையாண்மைக்கு எதிராகப் பேசியதாக சீமான், அமீர் ஆகியோர் மீது வழக்கு போடப்பட்டிருந்தது. அது தொடர்பாக ராமநாதபுரம் நீதிமன்றத்தில் இருவரும் ஆஜராகினர். இந்த வழக்கில் மீண்டும் எதிர்வரும் ஜூலை 20 ஆம் திகதி இருவரும் ஆஜராகி விளக்கம் அளிக்க நீதிபதி உத்தரவிட்டார். (அ-2)

## மராட்டிய தலைமை செயலகத்தில் தீ; ஆவணங்கள் எரிந்து நாசமாகின



(மும்பை)

மராட்டிய மாநில தலைமை செயலகமான மந்த்ராலாயாவில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. 7 மாடிகள் கொண்ட இந்த தலைமை செயலகத்தில் முதல் அமைச்சர், அமைச்சர்கள் மற்றும் எல்லா துறைகளின் செயலர் அறைகள் உள்ளன.

நேற்று முன்தினம் பிற்பகலில் அமைச்சர் ஒருவரின் அலுவலக ஏ.சி.யில் தீ பிடித்தது. அது கட்டுப்படுத்த முடியாதபடி மற்ற தளங்களுக்கும் பரவியது. தலைமை செயலக பணியில் இருந்த சுமார் 6 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்ட தால் மிகப் பெரும் உயிரிழப்பு தடுக்கப்பட்டது.

உள்ளூர் தீயணைப்பு வீரர்களுடன் கடற்படை வீரர்களும் ஒருங்கிணைந்து செயற்பட்டு சில மணி நேரங்களில் தீ அணைக்கப்பட்டது. என்றாலும் உட் பகுதி அறைகளில் எரிந்த தீயை உடனடியாக அணைக்க முடியவில்லை. இதனால் 5, 6, 7 ஆவது தளங்கள் முற்றிலும் எரிந்து நாசமானது. 3 தளங்களில் இருந்து அனைத்துப் பொருட்களும் தீயில் எரிந்து நாசமாகிவிட்டன. அரசு துறைகளின் அறைகளில் இருந்த பல்லாயிரக் கணக்கான கோப்புக்கள் தீயில் எரிந்து சாம்பலாகி விட்டன.

எனவே இந்த தீவிபத்தில் சதி திட்டம் ஏதேனும் உள்ளதா என்ற விசாரணை நடந்து வருகின்றது. தீ விபத்து குறித்து முதல் மந்திரி பிருதிவிராஜ்வான் கூறுகையில், தலைமை செயலக பணிகளுக்கு 2.27 இலட்சம் கோப்புக்கள் உள்ளன. அந்தக் கோப்புக்களில் 3.18 கோடி பக்கங்கள் ஏற்கனவே ஸ்கான் செய்து பாதுகாப்பாக உள்ளன. எனவே அரசு நிர்வாகத்தில் எந்த இடையூறும் ஏற்படாது என்றார். தீ விபத்து குறித்து விசாரணை நடத்தவும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

இவ்விபத்து சம்பவத்தில் ஐந்து பேர் பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## உருகுவேயில் கஞ்சா விற்பனைக்கு சட்டபூர்வமாக அனுமதி வழங்க முடிபு

(மோன்டேவிடியோ)

உலகில் எந்த நாட்டிலும் கஞ்சா மற்றும் போதை பொருட்கள் விற்க சட்டபூர்வ அனுமதி வழங்கவில்லை. ஆனால், தென் அமெரிக்க நாடான உருகுவேயில் கஞ்சா விற்க 'சட்டபூர்வ அனுமதி வழங்க முடிவு செய்துள்ளனர்.

இந்த நாட்டில் கஞ்சா மற்றும் போதைப்பொருள் பழக்கம் அதிகமாகவுள்ளது. இதனால் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு குற்றங்கள் அதிகமாக நடக்கின்றன. மேலும் போதை மருந்து கும்பல்களின் அட்டகாசமும் அதிகமாகவுள்ளது. அவர்கள் போதை மருந்துகள் மூலம் பலகோடி அளவிற்கு பணம் சம்பாதிக்கிறார்கள். இதை கட்டுப்படுத்த அரசே கஞ்சாவை சட்டபூர்வமாக விற்க அனுமதி அளிக்கவுள்ளது.

வருகிற பாராளுமன்ற கூட்டத்தில் இதற்கான சட்டம் இயற்றப்படும் என்று அந்த நாட்டு மந்திரி எலுன் டோனியா பெர்னாண்டோ கூறியுள்ளார். ஆனால், கஞ்சா பயன்படுத்துபவர்கள் இது சம்பந்தமாக அரசிடம் பதிவு செய்து கொள்ள வேண்டும். அவர்களுக்கு மட்டுமே கஞ்சாவிற்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

மகிழ்ச்சியும் வீரமும் முகத்திற்கு அழகு சேர்க்கும் அரிய சாதனங்கள்
-பிரெஞ்சுப் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# பதிலளிக்க கற்றுக் கொள்ளுங்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பொருளியல்துறைத் தலைவர் பேராசிரியர் ப. சிவநாதன் அவர்கள் அடிக்கடி கூறுகின்ற ஒரு விடயம் "பதில் கூறக் கற்றுக் கொள்ளுங்கள்" என்பதாகும்.

அவரின் இந்த ஆழமான கருத்தை விரிவுரை மண்டபத்தில் விளங்கிக் கொண்டதை விட இப்போது அதன் உண்மைத் தன்மையை மிக அற்புதமாக விளங்க முடிகின்றது.

ஆம், பதில் கூறுதல் என்பது எவருக்கும் முக்கியமான விடயம். தாய் தந்தைக்கும், தந்தை மகனுக்கும், மகன் தந்தைக்கும், அரச அதிகாரிகள் பொதுமக்களுக்கும், கல்வியியலாளர்கள் அறிவியல் உலகிற்கும், அரசியல்வாதிகள் நாட்டு மக்களுக்கும் பதில் கூறும் பொறுப்பைக் கொண்டுள்ளனர்.

எனினும் பதில் கூறுதல் என்ற விடயத்தை யாரும் பொருட்படுத்துவதாக இல்லை.

இத்தகைய பதில் கூறாத் தன்மைதான் விமர்சனங்களுக்கும், தேவையற்ற கருத்தாடல்களுக்கும், தப்பபிப்பிராயங்களுக்கும் வகை செய்கின்றன.

வளர்ச்சியடைந்த மேற்குலக நாடுகளை ஒரு கணம் திரும்பிப் பார்த்தால், அங்கு பதில் அளித்தலுக்கும், பொறுப்புக் கூறுதலுக்குமான முக்கியத்துவம் மிகவும் உச்சமாக இருக்கும்.

இதன் காரணமாக அங்கு தேவையற்ற விமர்சனங்களுக்கும் வீண்விவாதங்களுக்கும் இடமில்லாமல் போய் விடுகின்றது.

ஆனால், நம் நாட்டில் "பதில் கூறுதல்" என்பது மிகவும் வெறுப்புக்குரிய ஒன்றாகவே காணப்படுகின்றது.

அதிலும் குறிப்பாக அரசியல்வாதிகளும், பொறுப்பான பதவிகளில் இருக்கின்ற அரச உயரதிகாரிகளும் பதில் கூறுவதில் காட்டும் அசமந்தம் போதுமென்றாகிவிடும்.

உதாரணமாக, ஊடகங்களில் ஒரு செய்தி வருகின்றபோது அதற்கான விளக்கத்தை-தெளிவை பதிலாகக் கூறுதல் என்பது சம்பந்தப்பட்டவர்களின் தலையாய கடமை.

ஊடகங்கள் எதுவேண்டுமானாலும் எழுதட்டும். நாம் எதற்கும் அஞ்சமாட்டோம் என்ற நினைப்பு மக்கள் மத்தியில் தவறான கருத்தியலை ஏற்படுத்தி விடக் கூடியது.

ஊடகங்களில் எது வந்தாலும் அது உண்மை என்ற நினைப்பு தொண்ணூறு வீதமான மக்களிடம் உண்டு.

எனவே தான் சம்பந்தப்பட்ட அதிகாரிகள்-அரசியல்வாதிகள் பதில் கூறக் கற்றுக் கொள்வது மக்கள் மத்தியில் தெளிவை ஏற்படுத்த உதவி செய்யும்.

இவ்வாறாகப் பதில் கூறுவதில் மிகவும் பின்னடிப்பவர்கள் வரிசையில் தமிழ் அரசியல்வாதிகளும், தமிழ் அரச உயரதிகாரிகளும் முதன் நிலை பெறுகின்றனர்.

எனவே, எந்த விடயமாயினும் அது தொடர்பில் பதில் கூறி மக்களுக்கு உண்மையைத் தெளிவுபடுத்தும் பழக்கத்தை நாம் ஏற்படுத்திக் கொள்ளும் போது மோசடிகளும், ஊழல்களும் கட்டுப்படுத்தப்படுவதுடன், தேவையற்ற பிரசாரங்களும் கட்டுப்படுத்தப்படும்.

# கட்டுவான பாணியிலான படுகொலைகள் வடக்குக் கிழக்கில் நாள்தோறும்

## தொடர்கதை என்கிறார் கிரியெல்ல எம்.பி

(கொழும்பு)

அம்பாந்தோட்டை கட்டுவானப் பகுதியில் இடம்பெற்ற படுகொலைகள் போன்ற சம்பவங்கள் வடக்குக் கிழக்கில் நாள்தோறும் இடம்பெற்று வருவதாக ஐக்கிய தேசியக்கட்சியின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்,

வடக்குக்கிழக்கு தொடர்ந்தும் ஆயுதக் குழுக்களின் கட்டுப்பாட்டிலேயே காணப்படுகின்றது.

துணை இராணுவக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டுமென உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழு பரிந்துரை செய்துள்ளது துணை இராணுவக்குழுக்களிடமிருந்து ஆயுதங்களை களைதல்மற்றும் சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவினை நிறுவுதல் போன்ற நடவடிக்கைகள் துரித கதியில் மேற்கொள்ளப்படுவதன் மூலம் நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட முடியும்.

2010ஆம் ஆண்டு உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையிலும் துணை இராணுவக்குழுக்கள் பற்றி பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.

எனினும் இந்த அரசாங்கம் துணை இராணுவக்குழுக்களின் ஆயுதங்களை களைவது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கத்தவறியுள்ளது.

இலங்கையில் மனித உரிமைகள் பேணப்படுவதாக அரசாங்கம் பொய்யாக சர்வதேசத்தில் பிரசாரம் செய்து வருவதாக அவர்மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# சீனியின் விலை குறைவடையாது

உலக சந்தையில் சீனி விலை குறைவாக உள்ளபோதிலும் இலங்கையில் சீனி இறக்குமதிக்கான வரி அதிகரிக்கப்பட்டுள்ளதால் இலங்கையில் விலையை குறைக்க முடியாதிருக்கும் என வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

இறக்குமதி செய்யப்படும் சீனிமீதான வரி கிலோவுக்கு 10 ரூபாயிலிருந்து 20ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் புதிய உற்பத்தி காரணமாக உலக சந்தையில் சீனி விலை குறைவடைந்துள்ளது. எனினும் இதன் பலனை இலங்கை நுகர்வோர் அனுபவிக்க முடியாது.

தற்போது ஒரு கிலோ சீனியின் மொத்த விலை95 ரூபாயாக உள்ளது. இதை 85 ரூபாயாக குறைக்க முடியும். ஆனால் புதிய வரி அதிகரிப்பு காரணமாக அது சாத்தியமில்லை என அவர்கள் கூறியுள்ளார்கள்.

இலங்கைக்குத் தேவையான சீனியின் 80வீதம் இறக்குமதி செய்யப்படுகிறது. பெரும்பாலும் இந்தியா, பிரேசில் ஆகிய நாடுகளில் இருந்து சீனி இறக்குமதி செய்யப்படுகிறது. (அ-2)

# தங்கம்மா அப்பாக்குட்டியின் 4ஆவது குருபூசைத்தினம்

(யாழ்ப்பாணம்)

அன்னை சிவத்தமிழ்ச்செல்வி துர்க்கா துரந்தரி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 4ஆவது குருபூசைத் தினம் எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது.

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான தலைவர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரார்த்தனை உரையினை இணுவில் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் தேவஸ்தான ஆதீனகர்த்தா சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக்குருக்கள், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக்குருக்கள், நல்லை ஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

நினைவுப்பேருரையை யாழ். பல்கலைக்கழக ஆங்கிலத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி க.சிவாஜி ஆற்றவுள்ளார்.

அத்துடன் திருநாவுக்கரசு நாயனார் அருளிய திருமுறை மலரின் வெளியீட்டுரையை இளைப்பாறிய ஆசிரியர் பொன்.ஸ்ரீவாமதேவன் ஆற்ற முதற்பிரதியை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான உபதலைவர் ச.ஆறுமுகநாதன் பெற்றுக் கொள்வார் என தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தான நிர்வாகசபை அறிவித்துள்ளது. (அ-9)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி, கல்வயல் பெருங்குளம் ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகர் தேவஸ்தான மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்கு சப்பைரதத் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு தேர்த்திருவிழாவும் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறுமென பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-9)

(யாழ்ப்பாணம்)

நவாலி அட்டகிரி கந்தசுவாமி தேவஸ்தான மஹோற்சவம் இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் பூலை மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை சப்பைரதத் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறுமென ஆலய தர்மகர்த்தா சபை அறிவித்துள்ளது. (அ-8)

# 88 பாதாள உலகக் குழுக்கள் நாட்டில் இயங்கி வருகின்றன

(கொழும்பு)

நாட்டில் சுமார் 88 பாதாள உலகக் குழுக்கள் இயங்கி வருவதாக புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவற்றில் அதிக எண்ணிக்கையிலான பாதாள உலகக்குழுக்கள் தெற்கை மையமாகக் கொண்டு இயங்கிவருகின்றன.

தெற்கில் சமார் 21 பாதாள உலகக் குழுக்கள் இயங்கி வருகின்றன. அதன் பின்னர் மேல் மற்றும் கம்பஹா மாவட்டத்தில் அதிகளவான பாதாள உலகக் குழுக்கள் இயங்கி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்த 88 பாதாள உலகக் குழுக்களில் சுமார் 790 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். ஒப்பந்த அடிப்படையில் குறித்த பாதாள உலகக்குழு உறுப்பினர்கள் குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

படுகொலைகள், கடத்தல்கள், காணாமல் போதல்கள், சட்டவிரோத ஆயுதப் பயன்பாடு, ஆயுத உற்பத்தி, போதைப் பொருள் வர்த்தகம், கப்பம் கோரல் தாக்குதல்கள், கொள்ளை உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்களுக்கு இந்தப் பாதாள உலகக் குழுக்களே தலைமை தாங்கி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## வீர இளைஞருக்கு



ஒழுக்க நெறியில் நில். வீரனாக இரு. முழு மனதுடன் வேலை செய்.

பிறழாத ஒழுக்கம் உடையவனாக இரு. எல்லையற்ற துணிவு உடையவனாக இரு.

மதத்தின் கொள்கைகளைப் பற்றி உன் மூளையைக் குழப்பிக் கொள்ளாதே.

ஒவ்வொருவரையும் நேசிக்க முயற்சி செய்.

வஞ்சனையால் பெரும் பணி எதையும் செய்ய இயலாது.

அன்பாலும் உண்மையை நாடுவதாலும் பேராற்றலாலும் தான் பெரும் செயல்கள் நிறைவேற்றப்படுகின்றன. எனவே உனது ஆண்மையை வெளிப்படுத்து.

எனது துணிவுடைய இளைஞர்களே, நீங்கள் பெரும் பணிகளைச் செய்யப் பிறந்தவர்கள் என்பதில் நம்பிக்கை கொள்ளுங்கள். குட்டி நாய்களின் குரைப்பைக் கண்டு நடுங்காதீர்கள்.

வானத்தில் முழங்கும் இடியோசைக்கும் அஞ்சவேண்டாம். நிமிர்ந்து நின்று வேலை செய்யுங்கள்.

# இங்கிலாந்துக்கு தாவிய ஹர்பஜன்




இந்திய அணியில் தற்போதைக்கு இடம் கிடைக்கும் வாய்ப்பு இல்லாத ஹர்பஜன் சிங் இங்கிலாந்து கவுண்டி அணியான எசெக்ஸ் அணியில் இணைந்து ஆடும் வாய்ப்புக்கள் பிரகாசமாகியுள்ளன.

31 வயதாகும் ஹர்பஜன் 2011 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதலே இந்திய அணியில் இடம்பெற முடியாமல் தவித்து வருகிறார். அவரது இடத்திற்கு தற்போது அஸ்வின் வந்து விட்டதால் ஹர்பனுக்கு வாய்ப்பில்லாமல் போய் விட்டது.

98 டெஸ்ட் போட்டிகளில் ஆடி 406 விக்கெட்டுக்களை வீழ்த்தியவர் ஹர்பஜன். அதேபோல் 229 ஒருநாள் போட்டிகளில் ஆடி 259 விக்கெட்டுகளைச் சாய்த்துள்ளார்.

கடைசியாக கடந்த 2011 ஆம் ஆண்டு ஜுலை –ஒகஸ்ட்டில் இங்கிலாந்துக்கெதிராக நடந்த டெஸ்ட் போட்டியில்தான் ஹர்பஜன் கலந்து கொண்டார். அதேபோல 2011 ஜுன் மாதம் மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான ஒருநாள் போட்டிதான் அவர் கடைசியாக ஆடிய ஒருநாள் போட்டியாகும்.

சமீபத்தில் நடந்த ஐ.பி.எல். தொடரில் தன்து மாயாஜாலப் பந்து வீச்சை வெளிப்படுத்த ஹர்பஜன் தவறியதால் அவருக்கு இந்திய அணியில் இடம் கிடைப்பது என்பது இயலாத காரியமாகி விட்டது. இதனால் தற்போது இங்கிலாந்து கவுண்டி அணியான எசெக்ஸ் அணியில் இணைந்து விளையாடும் வாய்ப்புக்கள் பிரகாசமாகியுள்ளன. தற்போது ஹர்பஜனுடன் எசெக்ஸ் அணி நிர்வாகம் பேசி வருகிறதாம். விரைவில் இரு தரப்புக்கும் இடையே ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்று ஊடக தகவல்கள் தெரிவிக்கிறது.

டிவிஷன் 2 கவுண்டி சம்பியன்ஷிப் போட்டிகளில் ஹர்பஜன் பங்கேற்கலாம் என்று தெரிகிறது. தற்போது புள்ளிகள் அடிப்படையில் எசெக்ஸ் அணி 7 ஆவது இடத்தில் இருக்கிறது.

எசெக்ஸ் அணியில் இரண்டு வெளிநாட்டு வீரர்கள் விலகிச் சென்றால் ஏற்பட்ட காலியிடத்திற்கு தற்போது ஹர்பஜனை பேசி வருகிறார்கள். அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த பீட்டர் சிடில் காயம் காரணமாக திரும்பி விட்டார். வங்கதேசத்து ஷாகிப் அல் ஹசன் அணியில் சேர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஹர்பஜன் அணியில் சேருவதன் மூலம் எசெக்ஸ் அணியில் நான்கு சுழற்பந்து வீச்சாளர்கள் இடம்பெறும் நிலை உருவாகும். ஏற்கனவே அங்கு டிம் பிலிப்ஸ், டாம் கிரடாக், கிரேக் ஸ்மித் என மூன்று பேர் உள்ளனர். மேலும் ஹர்பஜன் சிங் எதிர்வரும் இலங்கை மற்றும் நியூசிலாந்து தொடரிலும் ரி 20 உலகக் கிண்ணப் போட்டியிலும் இந்தியா சார்பில் விளையாட தீவிர அக்கறை செலுத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டுச் செய்திகள்....



# அப்ரிடி ஒருநாள் போட்டியில் ஓய்வு




ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் தனது எதிர்காலம் குறித்து ஆராயவுள்ளதாக பாகிஸ்தான் அணியின் அதிரடி சகலதுறை வீரர் ஷகிட் அப்ரிடி தெரிவித்துள்ளார்.

இலங்கை அணிக்கெதிராக இடம்பெற்ற ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் சிறப்பாக திறமையை வெளிக் காட்டாததன் காரணமாகவே இந்தக் கருத்தை அவர் வெளியிட்டுள்ளார்.

2015 ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளில் இடம்பெறவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளுக்குப் பலமான இளமையான அணியொன்றைத் தயார் செய்ய வேண்டிய தேவை பாகிஸ்தான் அணிக்குக் காணப்படுவதாகத் தெரிவித்த அவர் அதற்கான வாய்ப்பை தேர்வாளர்களுக்கு ஏற்படுத்துவதற்காக ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவது பற்றிச் சிந்திப்பதாகத் தெரிவித்தார்.

இலங்கைக்கெதிராக இடம்பெற்ற 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் 4 இனிங்ஸ்களில் துடுப்பெடுத்தாடிய ஷகிட் அப்ரிடி 28 ஓட்டங்களை மாத்திரம் பெற்றதோடு 3 விக்கெட்டுக்களை மாத்

திரம்

கைப்பற்றியி

ருந்தார்.

அணியின்

ஷ்ட வீரர்களிடமிரு

கம் எதிர்பார்க்கப்

தெரிவித்த ஷகிட் அப்

ஷ்ட வீரராக இத் தொட

டுகளை ஆராய வேண்டிய

தெரிவித்த அவர், அடுத்த

ந்த அணியைத் தெரிவு செய்

வது பற்றி எண்ணுவதாகத் தெரி

சிரே

ந்து அதி

படுகிறது எனத்

ரிடி, ஆகவே ஒரு சிரே

ரின் தனது திறமை வெளிப்பா

தேவை காணப்படுகிறது எனத்

உலகக் கிண்ணத்திற்கான சிற

வதற்காகத்தான் ஓய்வு பெறு

வித்தார்.

தான் ஓய்வுபெறும் முடிவை எடுப்பதற்கு முன்னதாக தனக்குப் பதிலாக விளையாடக் கூடிய ஒரு வீரர் தயாராகவுள்ளாரா என்பதை உறுதி செய்ய விரும்புவதாகத் தெரிவித்த அவர் அதை உறுதிப்படுத்திய பின் ஓய்வு பெற்றால் தன் ஓய்வினால் அணி பாதிக்கப்படாது என்பதை உறுதி செய்ய முடியும் எனவும் தெரிவித்தார்.

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி பதிவினை மேற்கொள்க

(கரவெட்டி)

வல்வெட்டித்துறை குரூஸ் விளையாட்டுக்கழகத்தின் ஆதரவுடன் நெற்கொழு கழுகு விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான இருபதுக்கு இருபது கடின பந்து கிரிக்கெட் போட்டி நடைபெறவுள்ளது.

இதில் பங்கு பற்ற விரும்பும் பாடசாலைகள் எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் கழுகு விளையாட்டுக்கழகத்திடம் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கழகத் தலைவர் க.சதீஸ் அறிவித்துள்ளார். (3-24)

# சல்மான் பட் விடுதலை



சூதாட்டத்தில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு சிறை சென்ற பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் சல்மான் பட் தண்டனைக்காலம் முடியும் முன்னரே விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

சல்மான் பட் சூதாட்டத்தில் ஈடுபட்டதால் கைது செய்யப்பட்டு 30 மாத சிறைத் தண்டனை பெற்றார்.

வெளிநாட்டினரை முன் கூட்டியே விடுதலை செய்யும் இங்கிலாந்து சட்டத்தின் படி சல்மான் பட் 7 மாத சிறைத் தண்டனைக்குப் பின்பு விடுதலை செய்யப்பட்டுள்ளார். அவர் அடுத்த 10 ஆண்டுகளுக்கு இங்கிலாந்து வரக் கூடாது என்றும் கடும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவர் தனது தாய் நாடான பாகிஸ்தானுக்கு செல்கிறார்.

மேலும் சல்மானுடன் கைது செய்யப்பட்ட மொகமது ஆமீர் மற்றும் மொகமது ஆசிப் இருவருக்கும் 6 மாதம் மற்றும் ஒரு வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அவர்களும் தண்டனைக் காலம் முடியும் முன் னரே விடுதலை செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்டில் டில்ஷான், சங்கக்கார அசத்தல் சதம்

## வலுவான நிலையில் இலங்கை



பாகிஸ்தானுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் முதல் நாள் ஆட்டத்தில் இலங்கை அணி டில்ஷான் மற்றும் சங்கக்கார ஆகியோரின் சதத்துடன் வலுவான நிலையில் உள்ளது.

இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணிக்கும், இலங்கை அணிக்குமிடையிலான 2 போட்டிகள் கொண்ட இருபது-20 தொடர், 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் மற்றும் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது.

இருபது-20 தொடர் 1-1 என்ற கணக்கில் சமனிலையில் முடிந்தது. ஒருநாள் தொடரை இலங்கை அணி 3-1 என்ற கணக்கில் வென்றது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி காலி சர்வதேச மைதானத்தில் நேற்று ஆரம்பமாகியது.

நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக தரங்க பரணவிதான, திலகரட்ண டில்ஷான் ஆகியோர் களமிறங்கினர்.

இந்த ஜோடி நிதானமாக ஆடி ஓட்டங்களை உயர்த்தியது. இந்நிலையில் அணியின் ஓட்ட எண்ணிக்கை 63 ஆக இருந்த போது பரணவிதான 24 ஓட்டங்களுடன் சயீட் அஜ்மல் பந்தில் ஆட்டமிழந்தார்.

பின்னர் களமிறங்கிய குமார் சங்கக்கார, டில்ஷானுடன் இணைந்து அதிரடியாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர். சங்கக்கார 95 பந்துகளில் தனது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். அவரைத் தொடர்ந்து அதிரடியாக ஆடிய ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் டில்ஷான் சதமடித்தார். இது அவரது 13வது டெஸ்ட் சதமாகும்.

அணியின் ஓட்ட எண்ணிக்கை 187 ஆக இருந்தபோது சதமடித்த டில்ஷான் மேலதிகமாக ஒரு ஓட்டத்தை மட்டும் பெற்ற நிலையில் அஜ்மலின் பந்தில் எல்.பி.டபிள்யூ ஆனார்.

அவரைத் தொடர்ந்து களமிறங்கிய அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன, குமார் சங்கக்காரவுடன் இணைந்து அதிரடியாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார்.

இந்நிலையில் குமார் சங்கக்கார 159 பந்துகளைச் சந்தித்து தனது சதத்தினை பூர்த்தி செய்தார். அவரைத் தொடர்ந்து அணித் தலைவர் மஹேல 89 பந்துகளில் தனது அரைச் சதத்தைப் பூர்த்தி செய்தார்.

இந்நிலையில் முதல் நாள் ஆட்டநேர முடிவில் இலங்கை அணி 2 விக்கெட் இழப்புக்கு 300 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. ஆடுகளத்தில் சங்கக்கார 111 ஓட்டங்களுடனும், மஹேல ஜெயவர்த்தன 55 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.



இலங்கை அணியின் இரு விக்கெட்டுக்களையும் சயீட் அஜ்மல் வீழ்த்தினார். இரண்டாம் நாள் ஆட்டம் இன்று தொடரும்.

# அரையிறுதியில் போர்த்துகல்; அசத்தினார் ரொனால்டோ

(டொனெற்ஸ்)

14-வது ஐரோப்பிய கிண்ண கால்பந்து போட்டிகள் போலாந்து, உக்ரைனில் நடைபெற்று வருகின்றது.

கடந்த 8ஆம் திகதி தொடங்கிய இந்த போட்டியின் லீக் ஆட்டங்கள் கடந்த 19ஆம் திகதியுடன் முடிபடைந்தது.

லீக் முடிவில் செக் குடியரசு, கிரீஸ், ஜேர்மனி, போர்த்துக்கல், ஸ்பெயின், இத்தாலி, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய 8 நாடுகள் காலிறுதிக்கு தகுதி பெற்றன.

போட்டியை நடத்திய போலாந்து, உக்ரைன் மற்றும் நெதர்லாந்து, சுவீடன், அயர்லாந்து, ரஷ்யா, டென்மார்க், குரேஷியா, ஆகிய நாடுகள் வெளியேறின.



இந்நிலையில் காலிறுதி ஆட்டங்கள் நேற்றுத் தொடங்கியது. இலங்கை நேரப்படி நள்ளிரவு 12.15 மணிக்கு நடைபெற்ற ஆட்டத்தில் போர்த்துக்கல்-செக் குடியரசு அணிகள் மோதின.



ஆட்டம் ஆரம்பித்ததிலிருந்து போர்த்துக்கல் அணி ஆதிக்கம் செலுத்தியது. பந்தை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தும் கோல் அடிக்கும் வாய்ப்புக்களை தவறவிட்டனர்.

நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ றொனால்டோ பலமுறை கம்பத்தின் அருகே பந்தை கடத்திச் சென்றும் கோலாக மாற்ற முடியாமல் சொதப்பினார்.

முதல் பாதி ஆட்டம் கோல்கள் எதுவும் போடப்படாமலேயே முடிபுற்றது.



2 ஆவது பாதி ஆட்டத்தில் அனல் பறந்தது. 79 நிமிடத்தில் மவுண்டின்கோ அடித்த பந்தை ரொனால்டோ தலையால் முட்டி கோலாக மாற்றினார்.

இதனால் போர்த்துக்கல் அணி 1:0 என முன்னிலை வகித்தது. இதற்கு செக் குடியரசு அணியால் பதிலடி கொடுக்க முடியவில்லை.

கடைசிவரை அந்த அணியின் முயற்சிகள் வீணானது. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் போர்த்துக்கல் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறியது. அரையிறுதியில் அந்த அணி ஸ்பெயின் அல்லது பிரான்ஸை எதிர்கொள்ளும்.

# ஒரு வாரம் அரங்கேறிய இந்திய டென்னிஸ் நாடகம்

யூன் 15 : லண்டன் ஒலிம்பிக் போட்டியில் டென்னிஸ் ஆண்கள் இரட்டையர் பிரிவில் லியாண்டர் பயஸ் ஜோடியாக,மகேஷ் பூபதி பெயரை அகில இந்திய டென்னிஸ் சங்கம் அறிவிப்பு.

யூன் 15 : இந்த அறிவிப்பு வெளியான சில மணித் துளிகளில் லியாணடர் பயஸுடன் இணைந்து விளையாட முடியாது என்று மகேஷ் பூபதி மறுப்பு.

யூன் 18 : லியாண்டர் பயஸுடன் ஜோடி சேர ரோகன் போபண்ணாவும் மறுத்தார்.

யூன் 18 : இந்திய ஜோடி தேர்வு குறித்து இந்திய டென்னிஸ் சங்கத்திடம் விளக்கம் கேட்டது, இந்திய மத்திய விளையாட்டு அமைச்சகம்.

யூன் 19 : 5 யோசனைகளை முன்வைத்து இந்திய விளையாட்டு அமைச்சகத்துக்கு அகில இந்திய டென்னிஸ் சங்கம் பதிலளித்தது.

யூன் 20 : ஜுனியர் வீரரை ஜோடியாக தேர்வு செய்தால் ஒலிம்பிக்கில் இருந்து விலகுவதாக லியாண்டர் பயஸ் மிரட்டல்.

யூன் 20 : வீரர்களின் மறுப்பு மற்றும் மிரட்டல் காரணமாக அணி தேர்வை இறுதி செய்வதை ஒரு நாள் தள்ளி வைத்தது டென்னிஸ் சங்கம்.

யூன் 21 : ஒலிம்பிக் போட்டிக்கு லியாண்டர் பயஸ் ஜோடியாக விஷ்ணுவர்தன் தேர்வு, மகேஷ் பூபதி -ரோகன் போபண்ணா மற்றொரு ஜோடியாக அறிவிப்பு. இந்த அறிவிப்பால் லியாண்டர் பயஸ் அதிருப்தி.

# சிறிலங்கன் பிரிமியர் லீக் தூதராக சல்மான்கான்?



சிறிலங்கன் பிறிமியர் லீக் கிரிக்கெட் போட்டியின் குறியீட்டுத் தூதுவராக பொலிவூட் நடிகர் சல்மான்கான் நியமிக்கப்பட்டுள்ளார் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பொலிவூட் திரைப்படங்களில் இலங்கை பெரும் ஆர்வம் கொண்டுள்ள நிலையிலேயே சிறிலங்கன் பிறிமியர் லீக் குறியீட்டுத் தூதராகச் செயற்பட சல்மான் கானை அணுகியுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நியமனம் தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு இதுவரை வழங்கப்படாத போதிலும் சிறி லங்கன் பிறிமியர் லீக் குறியீட்டுத் தூதராகச் செயற்பட சல்மான் கான் விருப்பம் தெரிவித்துள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாமல் ராஜபக்ஷவுக்கும் சல்மான் கானுக்கும் இடையிலான நட்புறவு சிறந்து விளங்கும் நிலையிலேயே சல்மான்கான் இதற்கு சம்மதம் தெரிவித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## ஆறுதல் நிறுவனத்தின் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

ஆறுதல் நிறுவனம் நடத்தும் கல்விசார் கருத்தரங்கு இன்றும் நாளையும் யாழ்ப்பாணம் சேர்.பொன் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள ஆறுதல் நிறுவனத்தில் இடம் பெறும்.

ஆறுதல் நிறுவனத்தின் அமைப்பாளரும் ஓய்வு பெற்ற வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருமான சுந்தரம் டிவகலாலா தலைமையில் நடைபெறும் இவ் இருநாள் கருத்தரங்கில் புலமையாளர்கள் கருத்துரை வழங்கவுள்ளனர். (ந)


**காணி விற்பனைக்கு**

நாவற்குழி சந்திக்கு அருகாமையில் வீட்டு அத்திபாரத்துடன் கூடிய 1 1/4 பரப்பு உறுதிக் காணி விற்பனைக்குண்டு

தொடர்புகளிற்கு:0778448544

**வேலை வாய்ப்பு**

வவுனியாவில் இயங்கி வரும் பிரபல முகாமைத்துவ நிறுவனமான INNOVAGE INTERNATIONAL COMPANY க்கு முகாமைத்துவ பயிற்சியாளர்கள் தேவை. 6 மாத கால பயிற்சி வழங்கப்படும். (பயிற்சியின் போது 8000/- சம்பளம் வழங்கப்படும். பின்பு 35000/- சம்பளத்துடன் நிரந்தர வேலைவாய்ப்பு, தங்குமிடம் இலவசம்.)

தகைமை - G.C.E O/L

தொடர்பு :- 024-7900171

077-0308484

(8680)

**Store காணி விற்பனைக்கு**

புது சிவன் கோவில் வீதி, திருநெல்வேலி நல்லூர் வீதியில் 3/4 பரப்பு காணி 15 அடி உயர மதிலுடனும் 14 அடி அகல கேற்றுடனும் விற்பனைக்கு உண்டு.

தொடர் புகளுக்கு :- 021 222 3826

021 222 7172

(8689)

**தேவை**

நிறுவனம் ஒன்றில் டீசல் பார ஊர்திகள் திருத்துனர் - 01, உதவியாளர் - 02 சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு :- 0779451290

0719301624

(சி-316)


## தமிழருக்கு தீர்வு வழங்...

பிரேஸில் ரியோ-டி-ஜெனிரோவில் உள்ள வின்ட்ஸர் ஹோட்டலில் ஜனாதிபதி மகிந்தவிற்கும் இந்தியப் பிரதமர் மன்மோகனுக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றது. சுமார் அரை மணிநேரம் இரு தலைவர்களும் தனியே பேச்சு நடத்தினர்.

நிரந்தர அரசியல் தீர்வு விடயத்தில் இலங்கை அரசு எடுத்திருக்கும் நடவடிக்கைகள் குறித்து இந்தியப் பிரதமர் விரிவாகக் கேட்டறிந்ததுடன் அதனைத் துரிதப்படுத்தி தமிழர் பிரச்சினையைத் தீர்த்துவைக்க எடுக்கப்படும் முயற்சிகளை இந்தியா வரவேற்குமென்று குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் மேற்கொள்ளப்படும் மீள்குடியேற்ற நிலைமை குறித்து மன்மோகனுக்கு விளக்கிய ஜனாதிபதி மகிந்த அகதி முகாம்களில் இருந்தவர்களுள் சுமார் மூன்று இலட்சம் பேர் வரையானோருக்கு புனர்வாழ்வு வழங்கப்பட்டுள்ளது எனக் கூறியுள்ளார்.

வடக்கில் இந்திய அரசின் உதவியுடன் நிர்மாணிக்கப்படவுள்ள வீடமைப்புத் திட்டங்கள் குறித்தும் இந்தச் சந்திப்பின் போது பேசப்பட்டுள்ளது.

இதற்கான நடவடிக்கைகள் அடுத் மாதத்திற்குள் ஆரம்பமாகி விடுமென இந்தியப்பிரதமர் ஜனாதிபதி மகிந்தவிடம் இதன் போது உறுதியளித்தாரெனத் தெரிவிக்கப்படுகிறது. (ஏ)

## ஐ.நா.சபை மீதான...

பிட்டுக் கூறியதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம தெரிவித்துள்ளார்.

ஆனாலும் ஒவ்வொரு நாடுகளினாலும் முன்வைக்கப்படும் அறிக்கைகளை இலங்கை தொடர்ந்து அவதானித்து வருவதாகவும் அவர் கூறினார்.

உயர்ஸ்தானிகர் எதனையும் குறிப்பிட்டுக் கூறவில்லை என்பதால் இலங்கையை சர்வதேச சமூகம் மறந்துவிட்டது அல்லது கைவிட்டு விட்டது எனக் கருதக் கூடாது. நாங்கள் எச்சரிக்கையுடன் இருக்கின்றோம்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு நவநீதம்பிள்ளைக்கு 2011ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் விடுத்த அழைப்பு இன்னமும் வலுவுள்ளது.

அமெரிக்காவினால் முன்வைக்கப்பட்ட இலங்கைக்கு எதிரான தீர்மானம் கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற கூட்டத் தொடரில் நிறை வேற்றப்பட்டது.

இந்த தீர்மானத்தின் படி இலங்கை தொடர்பான தனது அறிக்கையை உயர்ஸ்தானி கர் அடுத்த வருடம் மார்ச் மாதம் நடைபெறும் கூட்டத் தொடரில் சமர்ப் பிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது என்றார்.

இதேவேளை ஜெனிவாவிலுள்ள இலங்கைத் தூதுக்குழு இந்த கூட்டத் தொடரைப் பயன்படுத்தி இலங்கையில் கல்வித்துறையை அபிவிருத்தி செய்யவென மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் பற்றி பல்வேறு நாடுகளுக்கு விளக்கியுள்ளது. (ஏ)

## தமிழர்களின் உயிரைக்...

இலங்கை அரசு கூறி வருகின்றது.

இலங்கைக்கு அனைத்து உதவிகளையும் செய்த இந்தியாவுக்கு இலங்கை நெருக்கடி கொடுக்கும் வகையில் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

இலங்கையின் சுயரூபத்தை இனியாவது இந்திய அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

2009 மே 17 ஆம் திகதியுடன் உள்நாட்டுப் போர் முடிவுற்றதாக இலங்கை அரசு கூறினாலும், இன்று வரை ஈழத் தமிழர்கள் முள்வேலி முகாம்களில் தான் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தமிழீழத்தை ஏற்படுத்தி தருவதற்கு முன்பு அங்குள்ள தமிழர்களின் உயிரைக் காக்க தி.மு.க.தலைவர் கருணாநிதி முன்வர வேண்டும் என்று தா.பாண்டியன் கேட்டுக் கொண்டுள்ளார். (எ-8)

## முகமாலையில்...

சொந்தமாக தயாரித்த ஷெல்கள் போன்றவற்றையும் காட்சிப்படுத்தியுள்ளனர்.

இவற்றை தினசரி பெருமளவிலான தென்னிலங்கை சுற்றுலாப் பிரயாணிகள் வந்து பார்வையிட்டுச் செல்கின்றனர். (எ-8)

## முறிகண்டிப் போராட்டத்துக்கு...

வைக்கப்பட்ட ஜனநாயக ரீதியிலான கவனயீர்ப்புப் போராட்டம் இன்று முறிகண்டி வரை விரிவடைந்து செல்கின்றது. இது ஒரு முன்னேற்கரமான விடயமாகும்.

யுத்தம் முடிபடைந்த பின்னரும் கடந்த மூன்று ஆண்டுகளாக தொடர்ச்சியாகவும் தீவிரமாகவும் தமக்கெதிராக மேற்கொள்ளப்பட்டுவந்த நிலப்பறிப்பு உட்பட பெருமளவு அநீதிகள் தொடர்பாக தமது உணர்வுகளை வெளிப்படுத்த வழியின்றி தமது மனங்களுக்குள் குமுறிக் கொண்டிருந்த எமது மக்கள் தமக்கு இழைக்கப்படும் அநீதிகளையும் தமது உரிமைக் குரலையும் வெளிப்படுத்த ஆரம்பித்துள்ளனர்.

இவ்வாறான போராட்டங்கள் தமிழர் தாயகத்தின் சகல பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட வேண்டும். அவ்வாறு முன்னெடுக்கப்படும் தொடர் போராட்டங்களின் நீடித்த வெற்றியென்பது தமிழ்த் தேசத்தின் இறைமையை சர்வதேச சமூகம் அங்கீகரிப்பதிலேயே தங்கியுள்ளது.

அந்த வகையில் நில ஆக்கிரமிப்பு உள்ளிட்ட சகல அநீதிகளுக்கும் எதிராக ஜனநாயகப் போராட்டங்களை தமிழ்த் தேசத்தின் இறைமை அங்கீகரிக்கப்படல் வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து ஏனைய தரப்புக் களையும் இணைத்தவாறு எமது கட்சி தொடர்ந்து முன்னெடுக்கும்.

அத்துடன் ஏனைய தரப்புக்களும் போராட்டங்களை முன்னெடுக்கும் போது தமிழ்த் தேசத்தின் இறைமையை சர்வதேசம் அங்கீகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தவாறு முன்னெடுப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

அடக்குமுறைகளுக்கு மத்தியில் முன்னெடுக்கப்படும் இத்தகைய போராட்டங்கள் எமது மக்களின் அவல நிலையையும் ஆழ்மன உணர்வுகளையும் வெளிப்படுத்தி நிற்கின்றது என்பதனை சர்வதேச சமூகம் புரிந்து கொள்ள வேண்டும். எமது மக்களின் அவல நிலையைப் போக்குவதற்காக நில அபகரிப்பை தடுத்து நிறுத்தவும், தமிழ் மக்களது மீள்குடியேற்றத்தினை துரிதப்படுத்தவும், இலங்கை அரசு மீது கடுமையான அழுத்தங்களை சர்வதேச சமூகம் பிரயோகிக்க வேண்டும்.

இப் போராட்டத்திற்கு சகல தமிழ் மக்களையும், சகல பொது அமைப்புக்கள், மனிதாபிமான அமைப்புக்கள், அரசியல் கட்சிகளினது பிரதிநிதிகளையும் கலந்து கொண்டு போராட்டம் வெற்றிபெற ஒத்துழைக்குமாறு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி அழைப்பு விடுக்கின்றது.

இவ்வாறு கட்சியின் தலைவர், பொதுச் செயலாளர் ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-8)

## அமைச்சுப்...

இவர்கள் அனைவரும் அரசாங்கத்தின் பக்கத்திற்கு சென்றவுடன் நல்லவர்களா?

எந்தவிதமான கேள்விகளும் இன்றி நாளையோ அல்லது நாளை மறுதினமோ குமரன் பத்மநாதனை நாடாளுமன்ற ஆசனத்திற்கு கொண்டு வரப்போகின்றீர்களா? என ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கேள்வியெழுப்பியுள்ளார்.

இதற்கு, அவ்வாறான தீர்மானம் ஒன்றையும் நாம் மேற்கொள்ளவில்லை என அமைச்சர் தினேஸ் குணவர்த்தன பதிலளித்துள்ளார். (ஏ)

## தமிழினிக்கு...

நிலையத்திற்கு அவரை அனுப்பி வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிபதி ரஷ்மி சிங்கப்புலி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சுமார் மூன்று வருடங்களாக வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த் தமிழினி நேற்று நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு அளிக்கப்படுவதற்கு தமிழினி விருப்பம் தெரிவித்துள்ளதாக கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் கூறியிருந்தனர்.

அத்துடன், தமிழினியை புனர்வாழ்வுக்கு உட்படுத்த தமக்கு ஆட்சேபனை இல்லை என சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்த நிலையிலேயே, நீதிபதி இந்த உத்தரவை வழங்கியுள்ளார்.

புனர்வாழ்வளிப்பது தொடர்பில் தமிழினியின் விருப்பத்தை பெற்றுக் கொள்ளுமாறு கொழும்பு பிரதான நீதிபதி ரஷ்மி சிங்கப்புலி குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-8)

## ஹிட்லரை மிஞ்சும்...

அனைவரும் எதிர்கொண்டுள்ள ஜனநாயக சுதந்திரத்திற்கான அச்சுறுத்தல் என பார்ப்பதாக தம்பர அமில தேரர் குறிப்பிட்டுள்ளார்.

பிணங்களை தொட்டுவிட்டுச் செல்லவோ வெள்ளைக் கொடி பறக்கவிடவோ இனியும் இடமளிக்காது அதனை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தேரர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனத்தால் மேற்கொள்ளப்படவுள்ள தொழிற்சங்க நடவடிக்கையை குழுப்பவும் சம்பந்தப்பட்ட நபர்களை பயமுறுத்தவுமே இவ்வாறான அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுவதாக தம்பர அமில தேரர் குறிப்பிட்டுள்ளார்.

தனியே சம்பளப் பிரச்சினை மாத்திரம் வலியுறுத்துவது தமது தொழிற்சங்க நடவடிக்கையின் நோக்கம் அல்ல எனவும் முழு சுதந்திரக் கல்வி, ஜனநாயகத்தை உறுதி செய்வதற்கான ஒருகட்ட நடவடிக்கை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதனால் வெள்ளை வானை அனுப்பி, அவதூறு பரப்பி, பயமுறுத்தி நாட்டின் தேவைக்காக மேற்கொள் ளப்படும் தொழிற்சங்க நடவடிக்கையை தடுக்க முடியாது என தம்பர அமில தேரர் மேலும் தெரிவித்தார். (எ-8)


**மணல் விற்பனைக்குண்டு**

கட்டிட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் சிறந்த மணல் மண் இப்போது உங்கள் இடத்திற்கே கொண்டு வந்து தரப்படும்.

4 டிரக்டர் - 21,000/-

தொடர்புகளுக்கு

ரமேஸ்

0722694462

(8660)

**வெல்லுங்கள் பரிசு**

சண்மைக்ரோ சிஸ்ரம் நிறுவனத்தை வாங்கிய நிறுவனம்?

a.மைக்ரோசொப்ற் b.ஒராக்கிள் c.எச்.பி d.ஐ.பி.எம்.

விடைகளை MCAI12 a/b/c/d _<your Full name>, <address> <E mail> என்பவற்றை type செய்து 0775520940 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்பி வைக்கவும்.

1ம் பரிசு : Computer (Without Monitor)

2ம் பரிசு : 17" LCD Monitor

3ம் பரிசு : 20 பேருக்கு தலா ஒவ்வொருவருக்கும் ருபா 1,000 கணினி பொருட்கள்.

மேலும் 1000 ஆறுதல் பரிசுகள். Click http://www.facebook.com/mcai.campus.3

வெல்லுங்கள் பரிசு போட்டிக்கு யாரும் பங்குபற்றலாம், சேர்த்துக்கொள்ளப்படுவோர் 31.07 2012 க்கு முன்னர் கல்வியங்காட்டில் உள்ள MCAI CAMPUS ல் ஏதாவது கற்கைநெறிக்கு பதிவுசெய்திருத்தல் வேண்டும்.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.06.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.